
கல்கி
KALKI 40
12.2.1967 காசு






அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்

தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்

இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. l–லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெறஉடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்– அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள்!



இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.

இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது

நாள் ஒன்றுக்கு:
இன்க்ரிமின்* ட்ராப்ஸ்: 10–20 துளிகள்.
இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி.

* ரிஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்

Lederle லெடர்லி* டிவிஷன் • ஸயனமிட் இந்தியா லிமிடெட் CYANAMID



நினைவுத் திரையில்...

காந்தி மகன் ஸ்ரீ தேவதாஸ் காந்தியை முதன்முதலாக 1933 ஆம் வருஷம் நான் சந்தித்தேன். தீண்டாமை விலக்குப் பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் ஸ்ரீ தேவதாஸ் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார். அவர் பிரசங்கங்களைக் கூட்டங்களில் மொழிபெயர்ப்பதற்காகப் பிரயாணத்தில் நானும் சேர்ந்து கொண்டேன்.

திருவனந்தபுரத்தில் பிரயாணம் முடிந்ததும் எனக்கு ஏன் இதற்குள் முடிந்தது? என்றிருந்தது. காரணம் ஸ்ரீ தேவதாஸைப் பிரியவேண்டியிருக்கிறதே என்பதுதான்.

பெரிய மகாத்மாவின் புதல்வர் தாம் என்கிற எண்ணம் ஸ்ரீ தேவதாஸின் மனத்தில் இருந்ததோ என்னமோ தெரியாது. பேசுவதிலும் பழகுவதிலும் கொஞ்சமும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. அவருடைய பேச்சின் இனிமை காலஞ்சென்ற புஷ்பவனம் ஐயருடைய சங்கீதத்தின் இனிமையை ஒத்திருந்தது. அவருடைய இளம் முகத்தில் இயற்கையாகக் குடிகொண்டிருந்த சாந்தமும் புன்னகையும் கை தேர்ந்த தமிழ் நாட்டுச் சிற்பி அமைத்த நடராஜ விக்கிரகத்தின் திருமுகத்தில் பொலியும் சாந்தத்தையும் புன்னகையையும் ஒத்திருந்தன. சுமார் இரண்டு வார காலத்தில் அவருடைய முகத்தின் அமைதி ஒரு தடவையாவது குலைந்து நான் பார்க்கவில்லை. கோபம் அல்லது வெறுப்பின் அறிகுறியையே அவர் முகத்தில் காணவில்லை.

சுற்றுப் பிரயாணம் முடிந்து திரும்பியதும், "காந்தி மகன் காந்தி" என்று ஒரு கட்டுரை எழுதினேன். அவ்வளவு உள்ளம் நிறைந்த உணர்ச்சியோடும் உண்மையான ஆர்வத்தோடும் வேறு எந்தக் கட்டுரையையும் நான் எழுதியதில்லை என்று சொல்லலாம்.

[ரா. கி. - "பெரு மக்கள்" என்ற கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.]


- கல்கி, ஏப்ரல் 27, 1947

கல்கி

பொருளடக்கம்

பராபவ. தை 30 ✲ பிப்ரவரி 12

இலங்கையில் 40 சதம்—தபால் செலவு தனி


மற்றக் கட்சிகள்
காங்கிரஸ்
PK
வழி மறைத்திருக்குதே.

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 □ இதழ் 29



ஆட்சியை மாற்றுங்கள்!

பத்தொன்பதாண்டுகளாக நாட்டை ஆண்டு வரும் காங்கிரஸ் தலைவர்கள் அக்கட்சியிடம் மக்கள் வைத்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்து விட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் கடைப்பிடித்த கொள்கைகளின் விளைவாக மக்களின் மீது நேரடி வரிகளும், மறைமுக வரிகளும் பெரும் சுமையாக ஏறிவிட்டன; ஏழை மக்களின் சக்திக்குத் தாங்கவொண்ணுமல் எல்லாப் பண்டங்களின் விலைகளும் உயர்ந்து விட்டன; நம் நாட்டினுல் தீர்க்கவொண்ணுத அந்நியக் கடன்கள் வரம்பின்றி ஏறி விட்டன; ஆட்சியாளரை அண்டி வருகிற ஒரு சலுகைக் கூட்டம் அபரிமிதமான செல்வத்தை ஈட்டியுள்ளது; சமீப காலம் வரையில் மக்கள் அனைவரும் மதித்து வந்த தருமங்களைப் பாழாக்கித் தருமத்தின் இடத்தில் தெய்வத்தை மறந்து பணம் சேர்க்கும் ஆசையை அமர்த்தியிருக்கிறது காங்கிரஸ் ஆட்சி.

காங்கிரஸ் கட்சி என்பது இன்று உருப்படியான ஒரு ஸ்தாபனமல்ல. பகிரங்கமாக அதற்குள் பல போட்டிக் கட்சிகள் தோன்றி விட்டன. இனி எவ்விதத்திலும் மதிப்பையோ, நம்பிக்கையையோ பெறுகிற தகுதி காங்கிரஸுக்கு இல்லை. இக்கட்சியை அதிகாரத்திலிருந்து இறக்குவதற்காக நம்மால் இயன்ற அனைத்தையும் செய்வதே நம் கடமை.

இருபது ஆண்டுகளுக்கு முன்னுல் ஸர்தார் படேல் அவர்களின் ஆழ்ந்த கவனத்தின் கீழ் டாக்டர் அம்பேத்கர், கோபாலஸ்வாமி அய்யங்கார், அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர், பி. என். ராவ் முதலிய பல பெரியோர்கள் மிகுந்த ஆலோசனையுடன் நமது அரசியல் சாஸனத்தை உருவாக்கினுர்கள். இந்தச் சாஸனம், எந்தக் கட்சியானது மெஜாரிட்டி பெற்று ஆட்சிக்கு வந்தாலும் மக்களின் உரிமைகளை மாற்ற முடியாதபடி மக்களுக்குப் பல அடிப்படை உரிமைகளை வழங்கியது. அரசாங்கம் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்பது சாஸனத்தின் சாராம்சம். ஆனுல் காங்கிரஸ் கட்சியோ ஆட்சிக்கு வந்தபின் எல்லாருடைய தொழில்களிலும் பிரவேசித்து மக்கள் அனைவரையும் அடிமைகளாக்கி அரசாங்கத்தை மக்களின் எஜமானுக்கி விட்டது.

இந்தக் கொடுங்கோன்மைக்கு நாம் முடிவு காண வேண்டும். இந்த நோக்கத்துடனேயே சுதந்திரக் கட்சி என்ற இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது. நம் மக்கள் சரியானபடி சங்கற்பம் செய்து கொண்டு விட்டால் எவ்வளவு தேசப் பற்றுடனும் தீரத்துடனும் செயலாற்றுவார்கள் என்பதை அறிவேன். இப்போது அவர்கள் சுதந்திரக் கட்சி வேட்பாளர்களையும், சுதந்திரக் கட்சியின் ஆதரவு பெற்ற கூட்டணி வேட்பாளர்களையுமே பெருமளவில் தேர்ந்தெடுப்பதற்குச் சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். இதுவே என் விருப்பமும் விண்ணப்பமும். நாட்டில் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தி வரும் காங்கிரஸுக்குத் தோல்வி கொடுத்து ஜனநாயகத்தைக் காத்திடுவீர்களாக! எதிர்ப்புக் கூட்டணிக்கு வாக்களிப்பதே சத்திய சந்தர்களுக்குரிய நியாயச் செயல் என்று உணர்ந்து வாக்கைப் பிரயோகிப்பீர்களாக!

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

அகற்றி அதற்குப் பதிலாக ஒரு தேசிய முன்னணி அமைவதற்கு மக்கள் வாக்களித்து உதவி புரிவார்கள் என்று நம்புகிறேன்.

ஃ ஃ ஃ

காச்மீரத்தில் பல ஸ்தானங்களில் எதிர்ப்பு வேட்பாளர்களின் அபேட்சைப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதால் போட்டியின்றி இருபத்தொரு ஸ்தானங்களைக் காங்கிரஸ் பெற்றிருக்கிறது.

முன்பு காச்மீரத்தில் நடந்த தேர்தல்களில் போட்டியில்லாமல் பல ஸ்தானங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது குறித்து ஸ்ரீ சிவராவ் அவர்கள் பல முறை பத்திரிகைகளில் வன்மையாக எழுதியிருக்கிறார். அதுவே இவ்வாண்டு மறுபடியும் நிகழ்ந்துவிட்டது. இவை யாவும் சுதந்திரக் கட்சி வற்புறுத்தி வந்த ஒரு விஷயத்தையே அழுத்திக் காட்டுகின்றன. 'தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு ஆள்கிற கட்சி பதவியிலிருந்து இறங்கிவிட வேண்டும்; கட்சிச் சார்பற்ற ராஷ்டிரபதியும் கவர்னர்களும் அதிகாரிகளின் துணையுடன் இந்த இடைக்காலத்தில் நிருவாகம் செய்ய வேண்டும்' என்பதே சுதந்திரக் கட்சி வற்புறுத்தி வரும் விஷயம்.

ஃ ஃ ஃ


பத்திரிகைகள் ஆள்கிற கட்சிக்கு எவ்வளவு சப்பைக் கட்டு கட்டிய போதிலும், இம்முறை எதிர்க்கட்சிகளிடம் காங்கிரஸ் நல்ல அடி வாங்கும் என்று நம்புகிறேன். மத்திய சர்க்காரில் அதிகாரம் மாறும் அளவுக்கு அடி பலமாக இராமல் போகலாம்; எனினும் காந்தி அடிகளின் மகுடத்தைத் துராக்கிரகம் செய்துள்ள இன்றைய காங்கிரஸ்காரர்கள் பெற்றுள்ள மாயப் பிரபை நிச்சயமாக மங்கி விடும். தேர்தலுக்குப் பெரும் செலவு தேவைப்படுவதாலும், இச்செலவை ஏற்று வேட்பாளர்களாக நிற்கக் கூடியவர்கள் சுயநலம் காரணமாக அவ்வாறு செய்யாததாலும் சுதந்திரக் கட்சியானது விரும்பிய அளவுக்கு வேட்பாளர்களை நிறுத்த முடியவில்லை. எனவே, மொத்தம் பதிவாகும் வோட்டுக்களில் மெஜாரிட்டி பெருமலேயே மீண்டும் காங்கிரஸ் கட்சி டில்லி சிம்மாதனத்தைப் பிடித்துவிடக் கூடும். என்றாலும் முன்பிருந்த அகம்பாவம் அடங்கி விடும். முன்பு போல் நிச்சிந்தையாக அது இருக்க முடியாது. மக்களின் கண்டனத்துக்கு அது அஞ்ச வேண்டியிருக்கும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம், தான் எந்த நிமிடமும் பதவியிலிருந்து நீக்கப்படக் கூடும் என்ற பயம் காங்கிரஸுக்கு ஏற்படும்.

ஆனால் தேசத்தின் தேவைக்கு இது போதாது. இது ஒரு பொய்யான அமைப்பே. காங்கிரஸ் எப்படியேனும் சமாளித்துக் கொள்ளவே இது உதவும். தேசத்தின் தேவை யாதெனில், புதிய மக்கள் சபையில் ஜனநாயக எதிர்க் கட்சிகள் யாவும் ஒரு தேசிய முன்னணியாக ஒன்று சேர வேண்டியதே. இந்த முன்னணி தேசம் முழுவதிலும் நடைபெற்ற தேர்தல்களில் மெஜாரிட்டி வாக்கு பெற்றிருக்கும். இம்முன்னணி தகுதிகள் பொருந்திய ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர் தேசத்தின் மெஜாரிட்டி வோட்டுக்குப் பிரதிநிதியாவார். இத்தலைமையைப் பெறுபவர், தேசிய முன்னணியிலுள்ள எல்லாக் கட்சிகளும் நன்கு இசைவு பெறுவதற்கு நிதானமாகவும் உறுதியாகவும் உழைப்பவராக இருக்க வேண்டும். அக்கட்சிகள் பரஸ்பரம் இணைந்து, ஒத்த மனப்பான்மையோடு செயலாற்றும்படி செய்ய வேண்டியது இத்தலைவரின் பொறுப்பு. இந்த முறையை அதிகார போதை ஏறிய காங்கிரஸ் விரும்பாது. பண பலத்தையும், அதிகார பலத்தையும் கொண்டு பெற்ற சிறிய வெற்றியால் காங்கிரஸின் அவிவேகம் அதிகமாகும். தேசத்தின் தேவையை அது உணர முடியாது. இரத்தப் புகையினால் போதை ஏற்றுவது பற்றி வால்மீகி முனிவர் போர் வருணனையில் பல இடங்களில் பாடுகிறார். தேர்தலுக்குப் பின்னர் காங்கிரசுக்கு இத்தகைய ரத்த போதை உண்டாகும். அந்தப் போதை விவேகத்துக்கும் நல்லெண்ணத்துக்கும் இடம் தராது. இதையெல்லாம் நாம் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இதைவிட அதிகமாக அக்கிரமம் நடப்பதையும் சகித்துக் கொண்டு, திடமான—விவேகமான—சர்க்கார் உருவாகி நாடு நல்ல நிலைக்கு வரும் வரையில் நம் பணியைப் புரிய வேண்டும்.

வாக்காளருடைய உடனடிக் கடமை காங்கிரஸாட்சியை ஆதரிக்கவில்லை என்று வோட்டு மூலம் காட்டுவதேயாகும். காங்கிரஸை எதிர்க்கும் கட்சிகளில் இஷ்டப்பட்ட ஒன்றுக்கு வோட்டளியுங்கள். இதன் விளைவாக என்ன ஆகும் என்பதைப் பற்றி விசாரம் வேண்டாம். ராஷ்டிரபதி அந்தப் பிரச்னையைத் தீர்த்து விடுவார். அது வாக்காளர் தீர்க்க வேண்டிய பிரச்னை அல்ல. 'எனக்கு காங்கிரஸ் வேண்டாம்' என்று தீர்மானமாக வாக்களித்துவிட வேண்டும்.

கூட்டணி வேட்பாளருக்கு...

கூட்டணி வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் 'கல்கி'யில் பிரசுரமாகியுள்ள ராஜாஜி, திரு ம. பொ. சி., திரு நெடுஞ்செழியன், திரு கருணாநிதி, காயிதே மில்லத் இஸ்மாயில், பேராசிரியர் ரத்னசாமி ஆகியோருடைய கட்டுரைகளை அச்சடித்துப் பொது மக்களுக்கு விநியோகிக்கலாம். இவற்றைப் பொருத்தவரை கல்கி காரியாலயத்துக்கு எழுதி விசேஷ அனுமதி கோரிப் பெற வேண்டுமென்பதில்லை.



நாத சமுத்திரம்

நாத உபாசனை என்ற பழகிப் போன சொற்றொடரைப் பரிபூரண சத்தியமாக அநுபவித்த பாக்கியவதி ஜயம்மாள் ஏழிசையாகவும் இசைப் பயனாகவும் உள்ள இறைவனின் திருவடியைச் சேர்ந்து விட்டார்.

வீணை தனம்மாளின் குலதனமான சங்கீதச் செல்வத்தைத் தூய்மை குன்றாமல் காத்தளித்த பெருமாட்டி ஸ்ரீமதி ஜயம்மாள். ஸ்வரஸ்தானங்களின் வெகு நுண்ணிய சாயல்களையும் அழுத்தம் திருத்தமாக அறியக் கூடிய ஓர் அபூர்வ உணர்வு அவருக்கு இருந்தது. அந்த உணர்வினை கானப் பிரவாகமாக்கித் தருகிற அற்புதமான இளமை சொட்டும் சாரீரமும் இருந்தது. சாரீரமும், சாஹித்தியமும், பாவமும், தாளமும் அனைத்துமே ஒன்றிலிருந்து மற்றதைப் பிரித்துச் சொல்ல மாட்டாமல் சங்கீதம் என்ற முழுமையாக விளங்கும் அழகை ஜயம்மாளிடம் கண்டோம். மத்தகஜத்தின் கர்ஜனையாகவும் மாடப் புறவின் குமுறலாகவும், சண்டமாருதத்தின் வீச்சாகவும் இளந் தென்றலின் இங்கிதமாகவும், பருவதத்தின் கம்பீரமாகவும் பனி மலரின் மென்மையாகவும் நாத மர்மங்களை வடித்துக் காட்டிய பெருமை ஜயம்மாளுக்கு உரியது. ஜயம்மாள் நாத சமுத்திரமாக விளங்கினரெனில் அவரது தாரஸ்தாயி சஞ்சாரங்கள் அதன் மலையனைய அலைகளாக மோதிப் புரண்டன; மந்தர ஸ்தாயி சஞ்சாரமோ கடலடியிலுள்ள முத்துக் குவியல்களாகவும், ஆழ் கடலின் கம்பீர மௌனமாகவும் இலங்கியது. அநுபவித்தவர்களுக்குத்தான் அந்த உன்னதமும் நளினமும் புரியும். ஜயம்மாள் இசைத்தார் என்று சொல்வதைவிட இசையே அவரைத் தனது அந்தரங்கங்களுக்கு இட்டுச் சென்றது என்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

ஜயம்மாளின் வெற்றி அவரது புதல்வி பாலசரஸ்வதி எனலாம். செவியின் மூலம் இதயத்தில் புகும் தமது சங்கீதத்தையே, நயனத்தின் வழியே உள்ளத்தில் புகும் நடனமாக்கி பாலசரஸ்வதியின் மூலம் நிகழ்த்திக் காட்டினர்.

சமுத்திரம் வற்றுவதில்லை. ஜயம்மாளின் சங்கீதம் என்றும் அமரமாக இருக்கும்.



ராஜாஜியின் கருத்துக்கள்

தேர்தல் நெருங்க நெருங்க ஒவ்வொரு வர்க்கத்தின் கோரிக்கையையும் ஆள்கிற கட்சி நிறைவேற்றி வருகிறது. அதிகாரத்திலுள்ளவர்கள் வோட்டுப் பிடிப்பதற்காகவே, 'அதைச் செய்வோம்; இதைச் செய்வோம்' என்று மிகவும் தயாளத்துடன் வாக்குறுதி கொடுக்கிறார்கள். இதனால் அடுத்த சர்க்காரின் மீது சுமை ஏற்றப்படுகிறது. வரி கொடுக்கும் மக்களின் மீதும் கூடுதலாகப் பளு ஏற்றப்படுகிறது. இது கணித நியதி; இதை யாரும் தவிர்க்க முடியாது. எந்த வாக்குறுதியாயினும் சரி, வாக்குறுதி தருபவர் யாராயினும் சரி, வரி கொடுக்கும் மக்களுக்காகவே அவ்வாக்குறுதி தரப்படுகிறது எனினும், இதற்காகச் சுமை தாங்க வேண்டியதும் அதே மக்கள்தாம். கட்சி அரசாங்கங்கள் பொதுத் தேர்தலுக்கு நீண்ட காலம் முன்பே ராஜிநாமா செய்ய வேண்டும் என்பதை இதுவும் வலியுறுத்துகிறது. அப்போதுதான் ஒரு கட்சியினர் மட்டும் அரசாங்க அதிகாரத்துடன் வாக்குறுதிகள் தருவது நிற்க இடமேற்படும்.

***

தேர்தலுக்குப் பின்னால் ஏற்படப் போகும் சர்க்கார் எப்படி அமையும் என்பதை நினைத்து இப்போது வாக்காளர்கள் விசாரப்பட வேண்டியதில்லை. இது ராஷ்டிரபதிக்கு விடவேண்டிய பிரச்னை. பொதுத் தேர்தல்களின் விளைவாக ஏற்படும் மொத்த வாக்களிப்பின் அமைப்பைப் பொறுத்து அவர் முடிவு செய்வார். காங்கிரஸ் ஆட்சி நல்லது செய்ததா, கெட்டது செய்ததா என்பதை வாக்காளர் யோசித்து, தங்கள் மனச்சாட்சிப்படி வோட்டுச் செய்து அதன் விளைவை ராஷ்டிரபதியிடம் விட்டுவிட வேண்டும். மக்கள் மனம் எப்படிச் செயல்படுகிறது என்பதை ராஷ்டிரபதி உண்மையாக அறியுமாறு வாக்கு அளிக்கப்படவேண்டும். 'எதைச் செய்தால் புதுச் சர்க்கார் பலமாக அமையும்' என்பதை யோசித்துச் சாதுரியமாக வாக்களிப்பதற்காகத் தேர்தல் நடைபெறவில்லை. அது ராஷ்டிரபதி கவனிக்கவேண்டிய பிரச்னை.

எந்த இக்கட்டான நிலை ஏற்பட்டாலும் அதை ராஷ்டிரபதி சமாளிப்பதற்கு நம் அரசியல் சாஸனம் வழி கூறியுள்ளது. அப்படியே சாஸனத்தில் உள்ள எந்த வழியும் போதாவிடினும் கூட, ராஷ்டிரபதி தமது விவேகத்தைக் கொண்டும் இந்தியாவின் பிரதம நீதிபதியின் யோசனையைப் பெற்றும் நிலைமையைச் சமாளிக்க முடியும்.

தேர்தல்களின் விளைவாகக் காங்கிரஸ் சர்க்காரை அகற்றித் தேசிய சர்க்காரை ஏற்படுத்த வேண்டுமென ராஷ்டிரபதி கருதினால் அதற்குத் தலைமை தாங்கிப் பிரதமர் பதவி ஏற்க ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணரின் பெயரை முன்பே குறிப்பிட்டுள்ளேன். அவர் அநுபவம் வாய்ந்த தலைவர் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஏழை மக்களிடம் மகத்தான அநுதாபம் கொண்டவர் அவர். எந்த அரசியல் கட்சியிலும் சேராமல், அரசியல் சூழ்ச்சிகளில் சிக்காமல் இருப்பவர்.

திறமையின்மையும் நிர்வாக ஊழலும் மலிந்து விட்டதாக ராஷ்டிரபதி தமது குடியரசு தினப் பேச்சில் கூறினாரல்லவா? இக்குறைபாடுகளை நீக்குவதே தேசிய சர்க்காரின் கொள்கையாக இருக்கும்.

தேசிய சர்க்காரோ, பல கட்சிகளின் கூட்டுச் சர்க்காரோ நிலைமையைச் சமாளிக்க முடியாமல் போய், அந்தச் சர்க்காரைக் கலைக்கும்படி ஆயினும் பரவாயில்லை. இருபதாண்டு விடாமல் ஆட்சி செலுத்திய காங்கிரஸின் ஆட்சியில் ஒரு சிறு முறிவு ஏற்பட்டாலே மக்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை வலுப்படும்.

***

எதிர்ப்புக் கூட்டணியில் கம்யூனிஸ்டுகளுக்கு இடமளிக்கப்பட்டிருப்பதால் அதற்கு வோட்டுப் போடக் கூடாது என்று காங்கிரஸார் பிரசாரம் செய்கின்றனர். சுதந்திரக் கட்சி நேரடியாகக் கம்யூனிஸ்ட்களுடன் எவ்விதப் பேச்சு வார்த்தையும் நடத்தவில்லை; தேர்தல் ஏற்பாடுகளும் செய்து கொள்ளவில்லை. எனினும் தி. மு. க என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து நாங்கள் உத்தரவு போடுவதற்கில்லை. இப்போது 'சட்டப்படி' கட்சிகள் இணைந்துவிடவில்லை என்பதையும் மறந்து விடக் கூடாது. தி. மு. க.வினர் தங்களது ஸ்தானங்களில் சிலவற்றை கம்யூனிஸ்டுகளுக்கு ஒதுக்கியதற்காகச் சுதந்திரக் கட்சி கூட்டணியிலிருந்து வெளியேற வேண்டிய அவசியமில்லை.

ஒரு சில கம்யூனிஸ்டுகள் சட்ட சபையில் இடம் பெறுவதால் தேசத்துக்குத் தீங்கு ஏற்படாது. அவ்வப்போது அவர்கள் மனநிலையும் சட்டசபைகளில் வெளிப்படுவது நல்லதுதான். 'கூட்டணி மெஜாரிட்டி பெற்றுச் சர்க்கார் அமைத்தாலும் நாங்கள் அதில் இடம் பெற மாட்டோம்' என்று இடதுசாரி கம்யூனிஸ்டுகள் உறுதியாகக் கூறியுள்ளதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

***

தி. மு. க.வுக்கு உதவுவதாகச் சொல்லிக் கொண்டாலும் காங்கிரஸுக்கு உதவி செய்யவே நான் விரும்புகிறேன் என்று சில தமிழ் நாட்டுக் காங்கிரஸ் பிரமுகர்கள் கூறியுள்ளனர். இவர்களது மூளை அளவுக்கு மீறி வேலை செய்து, இப்படி ஒரு சிறுபிள்ளைத்தனமான கற்பனையைத் தோற்றுவித்திருக்கிறது.

நான் தி. மு. க. வைப் பொதி வைத்துப் பிடித்துவிட்டேன் என்கிறார் தமிழக முதன்

புது ஆட்சிக்கு வாக்களியுங்கள்

பேராசிரியர். எம். ரத்தினசாமி எம். பி.

நேரம் நெருங்கி விட்டது. தமிழ் மக்கள் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எத்தகைய ஆட்சியாளர்கள் தங்களை ஆள வேண்டும் என்பதை முடிவு செய்துகொள்ள வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. அவர்கள் மீண்டும் காங்கிரசுக்கு வோட்டளிப்பார்களா? பொது மக்களுக்கு உண்ணப் போதிய உணவில்லாமல் செய்தவர்களுக்கு; மக்களின் அன்றாடத் தேவையான பருப்பு வகைகள், கறிகாய்கள், துணிமணிகள், மண்ணெண்ணெய் ஆகிய பொருள்களின் விலைவாசிகளை ஏற்றி விட்டவர்களுக்கு, உலகிலேயே படிப்பு வாசனையில்லாத பெரிய சமுதாயம் இந்தியா தான் என்ற 'பெருமை'யைத் தேடித் தந்தவர்களுக்கு, நாட்டிலுள்ள கோடிக்கணக்கான பாமர மக்களுக்குக் குடிநீர் வசதிகூடச் செய்து தராதவர்களுக்கு, கிராம மக்கள் வாழும் இடங்களை இன்னும் பொந்துகளாகவே விட்டு வைத்திருப்பவர்களுக்கு; கிராமக் கைத்தொழில்களுக்கு ஊக்கம் அளிக்காமல் பத்து லட்சம் மக்கள் வேலையில்லாமல் திண்டாடவும், இரண்டு கோடி மக்கள் அரைகுறை வேலை செய்து வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் தவிக்குமாறும் விட்டு வைத்திருப்பவர்களுக்கு, விவசாயிகள் உற்பத்தியை வியாபார ஸ்தலங்களுக்கு எடுத்துச் செல்லச் சாலைகள் போட்டுத் தராதவர்களுக்கு, ஒவ்வொரு தாலூக்காவின் தலைநகரிலும் சந்தை கூடுமிடங்களிலும் வியாபார வசதிகள் செய்து தராதவர்களுக்கு; உடனடியாக விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் நீர்ப்பாசன வசதிகள் செய்து தராதவர்களுக்கு — மீண்டும் தமிழகப் பொதுமக்கள் வாக்களிப்பார்களா? சில புத்திசாலிப் பத்திரிகைகள், காங்கிரஸ் தனது நிர்வாகத்தில் தோல்வியுற்றிருந்தாலும், லஞ்சத்தையும், ஊழலையும் வளர்த்து விட்டிருந்தாலும், காங்கிரஸ்தான் ஸ்திரமான ஆட்சி நல்கக் கூடியது என்றும் அதற்கே வோட்டளிக்க வேண்டும் என்றும் எழுதியுள்ளன! தமிழக மக்கள் தீமையும், ஊழலும் நீடிக்க உதவலாமா? தீங்கான திட்டங்களுக்கும், தவறுகள் புரியும் மந்திரிகளுக்கும், தவறுகளைப் பார்த்தும் பாராததுபோல் வாயில்லாப் பூச்சிகளாயுள்ள எம். எல். ஏ.க்களுக்கும் வோட்டளிக்கலாமா? 'ஸ்திரத்தன்மை' என்ற ஒன்றுக்காக இத்தகைய விலையை யாரேனும் கொடுப்பார்களா?



தமிழக மக்கள் இத்தகைய விலையைக் கொடுக்க வேண்டியிராது — திராவிட முன்னேற்றக் கழகமும், சுதந்திரக் கட்சியும் முன்நின்று அமைத்துள்ள எதிர்ப்புக் கூட்டணியாளர்கள் பதவிக்கு வந்தால், காங்கிரஸ் இந்த இருபது ஆண்டுகளாகச் செய்யாததை செய்ய முடியாததை — கூட்டணி நண்பர்கள் உடன்பட்டதோர் திட்டம் வகுத்துச் செயல் படுத்துவார்கள். நல்ல கிராமச் சாலைகள், சந்தைகளில் வியாபாரிகளுக்கு வசதியான கிடங்குகள், சிறிய நீர்ப்பாசன வசதிகள், கிராம குடிசைக் கைத்தொழில் பட்டறைகள் ஆகியவற்றை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் தாலூக்கா தலைநகரிலும் ஏற்படுத்துவார்கள். காங்கிரஸ் ஆட்சியில் கல்வியறிவின் வளர்ச்சி வேகம் ஆண்டுக்கு ஒரு சதவிகிதம்தான். இந்தக் கதியில் போனால் தமிழகம் முழுவதிலும் படிப்பு வாசனை பரவ எழுபத்தைந்து ஆண்டுகள் பிடிக்கும். இதற்கு மாறாக, பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் தமிழகம் முழுதும் கல்வி வாசனை யில்லாதவர்களே இல்லை என்ற நிலைமையை உண்டாக்கக் கூட்டணியினர் முயல்வார்கள். ஒவ்வொரு தாலூகாத் தலைநகரிலும் சிறிய தொழில் நுட்பப் பள்ளியும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் பெரிய தொழில் நுட்பப் பள்ளியும் அமைத்துக் கோடிக்கணக்கான தொழிலாளர்களையும் திறமைசாலிகளாக்கி, கிராமத் தொழிலிலும் மற்ற சிறு தொழிலிலும் பங்குபெறச் செய்வார்கள். புது அரசாங்கத்தில் கல்வியறிவு பெற்ற, தகுதி வாய்ந்த, நேர்மையான மந்திரிகளே நியமிக்கப்படுவார்கள். ஆம், காங்கிரஸின்று முற்றும் மாறுபட்ட புதுக் கட்சி பதவிக்கு வந்திருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டுமல்லவா?

அதிலும் தமிழகத்தில் எல்லாவிதத்திலும் தகுதி வாய்ந்த திரு அண்ணாதுரை ஆட்சிக்குத் தலைமை வகிப்பார். திரு அண்ணாதுரை சென்னைப் பல்கலைக் கழக எம். ஏ. பட்டதாரி. ஆங்கிலத்திலும் தமிழிலும் லாகவமாகப் பேசக்கூடிய அரிய பேச்சாளர். டில்லி ராஜ்ய சபையில் அவர் பேச்சுக்களில் குற்றம் காண வேண்டும் என்று வரும் அங்கத்தினர்கள், வியந்து பாராட்டி விட்டுச் செல்லும் காட்சியை நான் பார்த்திருக்கிறேன். பிரத்தியட்சவாதி. தமிழ் மக்களுடைய ஆசை அபிலாஷைகளின் உருவம். அவருடைய தலைமையின் கீழ், காங்கிரஸ் ஆட்சியில் கண்டதைவிட நல்ல சீரிய ஆட்சி தமிழக மக்களுக்குக் கிடைக்கும். எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், ஆட்சியை மாற்றுவதே நல்ல சிறந்த ஆட்சிக்கு வழி வகுப்பதாகும்.

மாற்றம் என்பதே சுதந்திரத்தின் நியதி. வளர்ச்சியின் அடையாளமும் மாறுதலே. ஆகவே, தமிழக வாக்காளர்களே! ஆட்சியை மாற்றும் வாய்ப்பு வரும்போது, வாக்குச் சீட்டுகளில் முத்திரையிடும் நேரம் வரும்போது ஆட்சியை மாற்ற உறுதி செய்து கொள்ளுங்கள்!

நீலநிற

புதியது!

மாஜிக்

அபரிமித வெண்மையாக்கும் சூர்ணமுள்ளது

அத்தகைய வெண்மை... அபரிமித வெண்மை!
மிளிரச் செய்தது ஒரேயொரு மாஜிக் சலவை



மாஜிக் பவுடரின் சக்தி செறிந்த துகள்கள் நொடிப்பொழுதிலே நீரில் கரைந்து செழிப்பான நுரையாகக் கொழிக்கிறது.

ஆம்- சாதாரண சலவைப் பவுடர்களிலிருந்தும் மாறுபட்டது மாஜிக். அபரிமித வெண்மையளிக்கும் சக்தி வாய்ந்த மாஜிக். சலவையிலே அப்பழுக்கற்ற தூய்மை தருகிறது. சக்தி செறிந்த ஒவ்வொரு மாஜிக் துகளும் கொடிப் பொழுதிலே நீரில் கரைந்து, செயல்வேகமிக்க செழுமையான நுரை எழுப்புகிறது. அதனால் துணிகளுக்குப் பளிச்சிடும் வெண்மை, கண்ணைப் பறிக்கும் பொலிவு. இதன் காரணமாகவே, மாஜிக் என்று அழைக்கப்படுகிறது. வீட்டுச் சலவையை சுலபமாக்கும், சிக்கனத்திற் சிறந்த இந்த அற்புத சலவைப் பவுடர்- பருத்தி, பட்டு, கம்பளித் துணி, டெரீன், நைலான், வண்ண ஆடை...எதற்குமே தீங்கிழைக்காது மாஜிக் என்பதை மறவாதீர்கள்.

டாடா தயாரிப்பு

மாஜிக் வெண்மை, மாஜிக் மெருகு, மாஜிக் புதுமை!

CHTM-2 TM

குடியரசு தினத்தில் ஒரு குமுறல் கடிதம்

ராஜாஜிக்கு,

சேலம் ஜில்லா, ஓமலூர் தாலுகா கஸ்பா காடையாம் பட்டியிலிருக்கும் டி. ராமநாத செட்டியார் குமாரர் இராமசாமி எழுதியது :

இப்பவும் 25-1-67 புதன்கிழமை சுமார் 4 மணிக்கு என் தகப்பனார் வீட்டில் இல்லாத சமயத்தில் எங்கள் வீட்டில் டி. எஸ். ஒ. தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகியோர் உள்ளே புகுந்து நாங்கள் சாப்பாட்டுக்கு என வைத்திருந்த 10 மூட்டை நெல்லில் 7 மூட்டைகளை எடுத்துத் தங்கள் சாக்குப் பைகளில் நிரப்பி விட்டார்கள். நாங்கள் தோட்டத்திலிருந்து வருவதற்குள் இது நடந்து விட்டது. 'சாப்பாட்டுக்கு இதுதான் உள்ளது' என்று எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் நெல் அளக்க ஆரம்பித்தார்கள். 'எந்தச் சட்டத்தின்படி வீடு புகுந்து எடுத்தீர்கள் என்று எழுதிக் கொடுங்கள்' என்று கேட்டதற்கு, 'எழுதிக் கொடுக்க முடியாது. நீ எது வேண்டுமானாலும் செய்து கொள்' என்று மிரட்டினார்கள். இதையெல்லாம் எங்கள் கிராம அதிகாரி வேடிக்கை பார்த்துக் கேட்டுக் கொண்டு, ''உனக்கு இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? அவர்கள் மேலிடத்துக்குக் கணக்குக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். நீங்கள் இவ்வளவு தூரம் பேசியும் என்ன பலன்? நெல் எடுக்காமலா போய் விட்டார்கள்?'' என்று கூறினார்.

நெல்பயிர் நோய் விழுந்து விட்டது என்று கூறியும் அவர்கள் மனம் இளகாமல் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். இதற்கு முன்னேயே கட்டாயக் கொள்முதலுக்கு 4 மூட்டை நெல் கொடுத்துள்ளோம். அப்படியிருந்தும் எங்களுக்கு இந்நிலை. இதை இப்படியே விட்டால் எங்களைப்போல் உள்ள விவசாயிகள் கதி என்ன ஆவது? தாங்கள் கவர்னர் ஜெனரலாக இருக்கும்போது இப்படி இருந்ததா? இவ்வளவு தூரம் ஆன பிறகுகூட என் தகப்பனார் பொறுமையாக இருக்கிறார். காரணம் அவர் காங்கிரஸ் ஊழியர். கூட்டங்களுக்குத் தலைமை வகித்துள்ளார். தேர்தலுக்காக எவ்வளவோ பாடு பட்டிருக்கிறார். ஒவ்வொரு தேர்தல் நடக்கும்பொழுதும் எங்கள் வீட்டில் ஊரிலேயே உயரமான இடத்தில் காங்கிரஸ் கொடி பறக்கும். நாங்கள் நெல் வியாபாரிகளல்ல. எங்களுக்கே இந்தத் துயர் என்றால் இன்னும் எங்களைப் போல் ஏழை விவசாய நண்பர்களின் கதி என்ன ஆவது? இதைத் தாங்களே தயவுசெய்து உடனே கவனித்துப் பொதுமக்களுக்கு ஆளும் கட்சியின் அட்டகாசங்களை எடுத்துச் சொல்லவும். நானும் இனி எங்கள் ஊர்ப் பொதுக்கூட்டங்களில் மக்கள் எல்லோருக்கும் எடுத்துச் சொல்கிறேன். பொதுமக்களே ஆளும் கட்சியின் யோக்கியதையைத் தெரிந்து கொள்ளட்டும்.

காடையாம்பட்டி,
குடியரசு தினம் 1967 — எஸ். ராமசாமி



ஒரே ஒரு சொட்டுக் கோந்து, தொங்க விடப்பெற்ற மோட்டார் கார் ஒன்றின் பளுவைத் தாங்கக் கூடியதாம்! அவ்வளவு வலிமை பெற்றது இந்த விந்தைப் பசை.

எபாக்ஸி என்பது இதன் பெயர். விற்பனைக்கு வந்துள்ளது. இரு குழாய்களில் தனித் தனியாக அடைக்கப் பெற்றுள்ள இரு பொருள்களைச் சம அளவில் கலந்து இந்தக் கோந்து தயாரிக்கப்படுகிறது.

'பாலிமர்' ரசாயன முறை தந்திருக்கும் பரிசு. கோந்துத் தயாரிப்பு முறையைப் புரட்சிகரமாக மாற்றி யிருக்கிறது. உலோகங்களையும் பிற பொருள்களையும் ரசாயன முறையில் ஒட்ட வைத்து, நூற்றுக் கணக்கான புதிய பொருள்கள் உருவாக்குவதற்கும், பழைய பொருள்களைச் செம்மையாக்குவதற்கும் வகை செய்துள்ளது.

எபாக்ஸி பசை மிகச் சிறந்த ஒரு கலைப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கலைச்செல்வத்தைக் காக்கும் பசை!



எகிப்தில் அஸ்வான் அணை கட்டப்பெற்று நாஸர் ஏரியும் தோற்றுவிக்கப் பெற்றதால் நைல் ஆற்றின் தண்ணீர் மட்டம் உயர்ந்து கொண்டே வருகிறது. எனவே, ஆற்றுத் தண்ணீரில் மூழ்காமல் தொன்மையான அபு ஸிம்பெல் கோயில்கள் காப்பாற்றப்பட வேண்டுமாதலால் அவற்றை அங்கிருந்து அகற்றிட வேண்டுமென்பதில் ஐயமில்லை. எனவே தீர்க்க வேண்டியிருந்த ஒரே பிரச்னை அவற்றை எப்படிக் காப்பாற்றுவது என்பது தான்.

தொழில் நுட்பம், கலை உணர்வு, பணச் செலவு இவையனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்த பிறகு கடைசியாக ஏற்கப்பட்ட ஒரு திட்டம் இதுதான்: இரண்டாம் ரமேஸிஸ், அவருடைய ராணி நெஃபர்ட்டரி ஆகியோருடைய கோயில்களை மணற் பாறையிலிருந்து சிறு சிறு பகுதிகளாகப் பெயர்த்து, நாஸர் ஏரியின் எதிர்கால நீர் மட்டத்துக்கு மேல் 211 அடி உயரே உள்ள ஓர் இடத்தில் கொண்டு சென்று இணைத்து விடுவதாகும்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கோயில்கள் இவை.


கோயில்களுடன் இணைந்தவாறு மாபெரும் உருவச் சிலைகள் உள்ளன. ஆனால் எல்லாம் வலுக் குறைவானவை. எளிதில் உடையக் கூடியவை.

பிரும்மாண்டமான உருவச் சிலைகள், கோயில்கள் எல்லாம் ஒன்றன்மீது ஒன்றாகப் பல பகுதிகளாக அமைந்துள்ள பாறைகளாகும். இந்தப்பாறைகளை அக்காலத்தில் இணைத்தது ஒருவகைச் சுண்ணாம்புப் பொருள். பலப் பல பகுதிகளாக அமைந்திருக்கும் இப்பாறைகளை உடைந்து நொறுங்கிவிடாமல் பாதுகாப்பாக எப்படி வேறிடத்துக்கு எடுத்துச் செல்வது? மிக விரிவான சோதனைகளுக்குப் பிறகு பொறி இயல் நிபுணர்கள் ஒரு வழி கண்டுபிடித்தனர். ஒவ்வொரு பகுதியும் 30 டன் எடையுள்ளது. ஒவ்வொரு பகுதியில் ஒன்றரை அங்குலம் முதல் ஒன்றே முக்கால் அங்குலம் வரை விட்டமுள்ள செங்குத்தான துவாரங்கள் போட முடிவு செய்தனர்; ஒவ்வொரு துவாரத்திலும் அவர்கள் கட்டுமானத்துக்குப் பயன்படும் கம்பிகள் இரண்டை நுழைத்தனர். அவற்றினூடே, துவாரத்துக்குள் எபாக்ஸி கலவையை ஊற்றினர். இந்தக் கலவை கம்பிகளைப் பாறைகளுடன் நன்றாக ஒட்ட வைத்து விட்டது.

மொத்தம் மூவாயிரம் பாறைத் துண்டுகள் உள்ளன. எபாக்ஸி கலவை இருபத்திநான்கு மணி நேரம் உறைய விடப்பட்டது. பிறகு மாபெரும் கிரேன் ஒன்று ஒவ்வொரு பாறைத் துண்டையும் கம்பிகளில் பற்றித் தூக்கிப் பத்திரமான இடத்துக்குக் கொண்டு சேர்த்தது.

துண்டு துண்டுகளாக இருக்கும் பாறைகளை இணைத்து மீண்டும் பழைய கோயில்களாக்கிவிடும் இந்த அற்புதப் பசை. பிறகு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் இரும்புக் கம்பிகள் நேர்த்தியாக ராவி எடுக்கப் பெறும்.

ஒருசில ஆண்டுகளுக்கு முன்னர்தான் கண்டுபிடிக்கப்பட்ட—நவீன ரசாயன முறையில் தயாரான—பசை, முப்பத்திரண்டு நூற்றாண்டுகளாக இருந்து வரும் கலைச் செல்வங்களைக் காக்க உதவியுள்ளது.



எகிப்திலுள்ள அபு ஸிம்பெல் சிலைகள்.



...என்று இப்படியெல்லாம் ஓர் ஐரோப்பியர் கூறுவதாக எண்ண வேண்டாம்! லண்டனில் சமீபத்தில் நடைபெற்ற உலகக் கால் பந்தாட்ட இறுதிப் போட்டியில் மேற்கு ஜெர்மனி கோஷ்டியும் இங்கிலாந்து கோஷ்டியும் மோதிக் கொண்ட போது, "ஹெல்மட் ஷோன்" வியப்பும் வேதனையும் இன்பமும் துன்பமும் மாறி மாறி அடைந்தார். மேற்கு ஜெர்மன் கால்பந்தாட்டக் குழுவின் தேசிய பயிற்சியாளர் இவர் தான். (யூ. பி. எஸ்)

மாணவருலகில் ஒரு மணி

எத்தனையோ மாணவ மாணவிகள் பல கல்லூரிகளில் படித்து வரும் இந்த நாளில் இந்த மாணவரை மாத்திரம் தனித்துக் குறிப்பிட வேண்டிய காரணம் என்னவென்று பலர் கேட்கலாம்! காரணம் இருக்கிறது. அவர் இது வரையில் வாழ்க்கையில் கடந்து வந்த வழி இருளடைந்துதான் இருந்தது. இனி வரும் வழியில் ஒளி வீசலாம் என்ற நம்பிக்கையுடன் நடக்கிறார். புற ஒளியைவிட அகஒளியில் அதிக நம்பிக்கை வைத்திருப்பவர் அவர்! ஆறு மாதக் குழந்தையாக இருக்கும்போதே இரண்டு கண்களின் பார்வையையும் இழந்துவிட்டிருப்பவருக்கு இந்த நம்பிக்கை மானசீகமான ஊன்றுகோலாகவல்லவா விளங்குகிறது!

''சேலம் ஜில்லாவிலே நாகம்பட்டிங்கிறது தான் எங்க ஊரு. ரொம்ப சின்ன கிராமம். மற்றக் குழந்தைங்களெல்லாம் ஓடி ஆடி விளையாடற மாதிரி என்னால் செய்ய முடியாதே! அவங்களைத் துரத்திக்கிட்டும் போக முடியாது! தோப்பு துரவுலே உட்கார்ந்து வைத்த இடத்திலேயும் அதைச் சுற்றிக் கொஞ்சம் நிதானமாகவும் நடந்துகிட்டு இருப்பேன். பறவைகள், வண்டுகள், இதெல்லாம் எழுப்புகிற ஓசைகளை ரொம்ப ரசிப்பேன். தூரத்திலே வயல்காட்டிலே யாராவது பாடிக்கிட்டு வேலை செஞ்சிக்கிட்டு இருப்பாங்க. அந்தப் பாட்டுக்களையெல்லாம் கவனமா காதிலே வாங்கிக்கிட்டு நானும் திருப்பித் திருப்பிப் பாடிப் பார்ப்பேன். இந்த மாதிரி தனிமையும் இனிமையும்தான் நான் வளர வளர என் மனசிலே கவிதைகளை ரசிக்கிற பக்குவத்தை உண்டாக்கியிருக்கும்னு தோணுது. விரல்கள் உதவி கொண்டே பல செடிகொடிகளின் தாரதம்மியத்தைப் புரிந்து கொள்வேன். கூட விளையாட வந்த பையன்கள் அணில், குருவி போன்றவைகளைப் பிடித்து என்னிடம் கொடுப்பார்கள். சில நிமிடங்கள் அவை எழுப்பும் சத்தத்தை ரசித்துவிட்டு அவைகளுக்குச் சுதந்திரம் கொடுத்து விடுவேன். வீட்டிலே பெரியவங்க சொல்ற கதைகளையெல்லாம் கவனமாய்க் கேட்டு மனதிலே பதித்துக் கொள்வேன்.

எனக்கு ஏற்ற பள்ளிக்கூடம் கிராமத்திலே இல்லே. அதனாலே ஆரம்ப வகுப்புகளுக்குச் சேலத்துக்குப் போகவேண்டியிருந்தது. அங்கே நாலாவது படிக்கிற போதுதான் நான் என்னுடைய முதல் இரண்டு காவியங்களைச் சிருஷ்டித்தேன். என்ன? பெரிய பெரிய வார்த்தைகளை நாலாவது வகுப்போடு இணைக்கிறேனே என்று பார்க்கிறீர்களா? அந்தக் காவியங்களோட தலைப்பைக் கேட்டால் இன்னும் அதிகமாகப் பிரமிக்கப் போறீங்க! 'வினை தீர்த்த தரிசனம்', 'அருள் ஜோதி மார்க்கம்'னு அவைகளுக்குப் பெயர்.

வீட்டிலேயும், கிராமத்திலேயும் பெரியவங்க அடிக்கடி மகான்களைப் பற்றியும், ஆதரிச புருஷர்களைப் பற்றியும் பேசிக்கிட்டு வாங்க இல்லையா? காதிலே விழுந்ததையெல்லாம் மொத்தமாகச் சேர்த்து இரண்டு நாற்பது பக்க நோட்டுக்களை எடுத்து வச்சுக் கொட்டை கொட்டையாக எழுதித் தள்ளினேன். எங்க வாத்தியார்கிட்டேகூடக் காண்பிச்சேன். என்னைவிட அவருதான் ரொம்பப் பெருமைப்பட்டார்.

ஆறும் வகுப்புக்கு மேலே படிக்க அங்கே வசதியில்லே. பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றவர்களுக்கான பள்ளிக்கூடத்திலே கொண்டு வந்து சேர்த்துட்டாங்க! ஊரை விட்டு ரொம்ப தூரம் தள்ளி வந்து விட்டோமே என்ற உணர்ச்சியிலே மறுபடியும் ஒரு தனிமை மனசிலே படர்ந்தது. அதை மறக்க நிறையப் படிக்க ஆரம்பிச்சேன்.

எஸ். எஸ். எல். சி.வரை படிச்சுப் பரீட்சையும் எழுதினேன். முடிவும் வந்தது. அறுநூறுக்கு நானூற்றுப் பதினொன்று மார்க்குகள் வாங்கினேன். பூந்தமல்லிப் பள்ளிக்கூடத்திலே இதுவரை படித்துப் பாஸ் செய்த மாணவர் யாரும் வாங்காத மார்க்குன்னு ஆசிரியர்கள் பாராட்டினாங்க! அவங்களே முயற்சி எடுத்து என்னைச் சென்னை அரசினர் கலைக்கல்லூரியிலே சேர்க்க ஏற்பாடு பண்ணினாங்க. சரித்திரம், ஆரம்பப் பொருளாதாரம், தர்க்கம் ஆகிய பாடங்களை எடுத்துப் படித்து இரண்டாவது வகுப்பில் தேறி அவர்களுக்கு நன்றி தெரிவித்தேன். அப்புறம் மாநிலக் கல்லூரிக்கு வந்து சேர்ந்திருக்கிறேன். எதிர்காலத்திலே நம்பிக்கை உள்ளவன் நான்.''

குறைந்த ஒரு புலனை ஈடு கட்டுவதற்காக மற்றப் புலன்கள் அவருக்கு அதிகமாகவே உதவுபடியாயின்றன என்றுதான் தோன்றுகிறது. பழக்கத்தினால் கல்லூரிக் கட்டடத்தில் வகுப்புகளுக்கு யார் உதவியுமின்றி அவரே போய் விடுகிறார். இது என்ன பிரமாதம்! சைதாப்பேட்டையில் அவர் தங்கியிருக்கும்





ஹாஸ்டலிலிருந்து தனியாகத்தானே கல்லூரிக்குத் தினம் பஸ்ஸில் வந்து போகிறார்!

இவர் படிப்பதற்கு வசதியான எல்லாப் பாடப் புத்தகங்களுமே (பிரெயில் முறையில்) லண்டன் நகர மாணவர் நூலகத்திலிருந்து இவருக்குக் கடனாகக் கிடைக்கின்றன. படித்து விட்டுத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். அடையாறு தியாசாபிகல் சொஸைட்டியில் பிரெயில் முறையில் புத்தகங்கள் நிறைய இருக்கின்றனவாம். ஆனால் அவைகள் எல்லாமே வேதாந்தம் சம்பந்தப்பட்டவை. இப்போது டேராடூனில் நிறுவப்பட்டிருக்கும் ஒரு வாசகசாலையிலிருந்தும் புத்தகங்கள் ஓரளவு கிடைக்கின்றனவாம்.

பூந்தமல்லிப் பள்ளியில் படித்த காலத்தில் இவர் பரீட்சைகளை 'பிரெயில்' முறையிலேயே எழுத வசதியிருந்தது. அதில் பயிற்சி பெற்றவர்கள் அங்குள்ள ஆசிரியர்கள். கல்லூரியில் அந்த வசதி இல்லாததால், விடைகளை இவர் சொல்ல, இவருக்காக வேறு ஒருவர் எழுதுகிறார்.





பூந்தமல்லிப் பள்ளியில் இவர் 'ஸ்கௌட்'டாகவும், இலக்கிய மன்றக் காரியதரிசியாகவும் இருந்திருக்கிறார். சக மாணவர்கள் மூவருடன் பம்பாயில் நடந்த பிரெயில் முறை 'வாசிப்பு'ப் போட்டியில் கலந்து கொண்டு பரிசும் பெற்று வந்தார்.

இவர் வாழ்க்கையில் பசுமையாக நினைவிருப்பது இரண்டு சம்பவங்கள். ஒரு தடவை பார்வை இழந்தவர்களின் உதவி நிதிக்கான நாடகம் ஒன்றுக்கு டிக்கெட் விற்க ஒரு பிரமுகர் வீட்டுக்குப் போனார். அந்தப் பிரமுகர், "இந்தாப்பா! உனக்கு வேண்டுமானால் ஏதாவது சில்லறை தருகிறேன். டிபன் சாப்பிட்டு விட்டுப் போ. இந்த டிக்கெட் வேலையெல்லாம் உனக்கு எதற்கு?" என்றாராம்தழுவும் நோக்கத்துடன்.

"எங்களைப் போன்றவர்களிடம் சமூகத்தின் அன்பையும் பரிவையும் எதிர்பார்த்துத்தான் வந்தேனே தவிர, அனுதாபத்தை எதிர்பார்த்து வரவில்லை" என்று சொல்லி அங்கிருந்து உடனே மாரியப்பன் கிளம்பி விட்டார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் சேலத்திலிருந்து இவர் ரயிலில் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார். அவர் பெட்டி ஆசனத்தின் மேல் இருந்தது. அதில் அவர் பிரயாண டிக்கெட்டும் பத்திரமாக இருந்தது. பக்கத்து ஸ்டேஷனில் படாடோபமும் ஆபரணங்கள் சத்தமும் ஒலிக்கும் அம்மையார் ஒருத்தி ஏறி உட்கார்ந்தார். "ஐயோ, பாவம்!.... கண்ணில்லாத பிள்ளை! இந்தா இரண்டு பைசா! கடலை வாங்கிச் சாப்பிடு" என்று கொடுத்துவிட்டு அந்தப் பக்கம் வந்த டிக்கட் பரிசோதகரிடம், "இந்தப் பிச்சைக்காரப் பையன், பாவம்!... டிக்கட் இல்லாது ஏறிட்டான் போல இருக்கு! அடுத்த ஸ்டேஷனிலே இறக்கி விட்டுடுங்க" என்றும் ஆலோசனை சொன்னாள். மாரியப்பன் உடனே குனிந்து தம் பெட்டியைத் திறந்து டிக்கட்டை எடுத்துப் பரிசோதகரிடம் நீட்டினார். அப்புறம் அங்கு எழுந்த சம்பாஷணையில் அந்த அம்மையார்தான் டிக்கட் இல்லாமல் ஏறியிருக்கிறாள் என்றும் கவனத்தை வேறு புறம் திருப்பி டிக்கட் பரிசோதகரை அனுப்பிவிட நடித்திருக்கிறாள் என்றும் புரிந்தது. அடுத்த ஸ்டேஷனில் இறங்கியது அந்த அம்மையார்தான்! "பார்வையின்மையைக் கூடத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள நம்மிடையே ஆட்கள் இருக்கிறார்கள்" என்று வியக்கிறார் மாரியப்பன்.

இவருக்குப் பிடித்தமான ஆங்கிலக் கவிஞர்கள், வோர்ட்ஸ்வொர்த்தும் மில்டனும்! தமிழில் கம்பனும் பாரதிதாசனும்! படிப்பை முடித்துக் கொண்டு, தம் போன்றவர்களுக்கு ஆசிரியராகப் பணியாற்றிச் சேவை செய்ய ஆசைப்படுகிறார். ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் மற்ற ராஜ்யங்களில் இருப்பது போல் தமிழ் நாட்டில் இல்லை. இன்றைய விதிகள் மாற வேண்டும் என்று நினைக்கிறார்.



ரேடியோ இவரது நண்பன். கர்நாடக இசை மேல் தனிப் பிரேமை. நல்ல மேடை நாடகங்களையும் திரைப்படங்களையும் கேட்கிறார்! சமீபத்தில் இவர் ரசித்த மேஜர் சந்திரகாந்த் இவர் உள்ளத்தைத் தொட்டதில் வியப்பொன்றுமில்லை! ஹெலன் கெல்லர் இவருடைய ஆதர்ச வழிகாட்டி! நம்பிக்கை இவரது ஊன்றுகோல். கலங்காத் தன்மை இவரது வழித் துணைவன். - கோ. க.

பேட்டியோ பேட்டி!

"அய்க்கண்"

[வருஷத்தில் ஒரே ஒரு நாள் உண்மையே பேசுவது என்று ரகசியமாய்ச் சத்தியம் செய்து கொண்டிருந்த ஒரு சினிமா நடிகரை, அந்த நாளன்று எதிர்பாராத விதமாக நமது விசேஷ நிருபர் கண்ட பேட்டி.]




நிருபர்: வணக்கம்!.... உங்களுக்குள்ள பல முக்கிய வேலைகளுக்கிடையில் பொன்னான நேரத்தைப் பேட்டியில் வீணாக்க நேர்ந்ததற்காக முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

நடிகர்: வீணாக்குவதாவது? இந்த மாதிரிப் பேட்டியின் மூலம் விளம்பரம் பெறுவதற்காக நான் எவ்வளவு ஆவலாக உங்களை எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன்?.... உட்காருங்கள்!

நிருபர்: நீங்கள் முதலில் எப்படிக் கலை வுலகில் நுழைந்தீர்கள் ?

நடிகர்: என் அப்பா என்னைச் சிறு வயதில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார். படிப்புக்கும் எனக்கும் ஆயிரம் கிலோ மீட்டர் தூரமா யிருந்தது. பிறகு ஒரு பலசரக்குக் கடையில் வேலைக்குச் சேர்த்து விட்டார். அதிலும் எனக்கு வேலையை ஒழுங்காகச் செய்யத் தெரியவில்லை. கடைசியில் 'ஒன்னுக்கும் உதவாத இந்த மடையனை உங்க நாடகக் கம்பெனியிலே சேர்த்துக்குங்க' என்று சொல்லிச் சின்னையாக் கம்பெனியிலே தள்ளிட்டாரு. நானும் வேறு வழியில்லாமல் நாடகத்திலே நடிக்க சினிமாவிலேயும் நுழைஞ்சிட்டேன்.



நிருபர்: நீங்கள் ரசித்துப் பார்த்த ஆங்கிலப் படம் எது?

நடிகர்: இங்கிலீஷ் படத்திலே நமக்கு என்னங்க புரியுது? ஏதோ, எல்லாரும் கைதட்டுற போது நானும் கைதட்டுற வழக்கம்.

நிருபர்: கலையுலகில் உங்களுடைய லட்சியம் என்ன?

நடிகர்: நிறையப் பணம் சம்பாதிச்சு, கோடீசுவரனாகணும் என்பதுதான்.

நிருபர்: இன்னும் இரண்டு வருஷங்களில் சினிமா உலகை விட்டு விலகப் போவதாகச் சொன்னீர்களாமே ?

நடிகர்: அதெல்லாம் சும்மா 'அட்வடேஸ்மென்டு'க்காக! இன்னும் கொஞ்சம் 'மார்க்கெட் வால்யூ' அதிகமாகுமே என்கிற ஆசையிலே சொல்லி வைச்சேனுங்க.

நிருபர்: உங்களுக்கு, தமிழைத் தவிர வேறு மொழிகள் என்னென்ன தெரியும்?

நடிகர்: ஒன்னும் தெரியாதுங்க! 'தமிழே சரியாய்ப் பேச வரல்லே'ன்னு வசனகர்த்தாக்கள் என் பிராணனை வாங்கிடுவாங்க, ஷூட்டிங் சமயத்திலே !

நிருபர்: உங்களுக்கு மிகவும் பிடித்த தமிழ் நடிகர் யார் என்று சொல்ல முடியுமா ?

நடிகர்: என்னைவிட நன்றாய் நடிக்கத் தெரியாத நடிகர்கள் எல்லாரையும் எனக்குப் பிடிக்கும்.

நிருபர்: நடிகை....?





நடிகர்: எல்லா நடிகைகளையுமே பிடிக்கும்.

நிருபர்: புதுமுகங்களைப் புகுத்துவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

நடிகர்: அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீங்க? 'புது முகம், புது முகம்னு' சொல்லிக்கிட்டு, எங்க பிழைப்பிலே மண்ணைப் போட்டுடறாங்க.

நிருபர்: தமிழ் நாட்டிலே சிறந்த நடிகர் யார் என்று நினைக்கிறீர்கள்?

நடிகர்: நான்தான்!

நிருபர்: உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?

நடிகர்: முதலாளியின் 'செக்'.

நிருபர்: பிடிக்காதது?


நடிகர்: மற்றவங்க நடித்த படம் வெற்றி விழாக் கொண்டாடுவது.

நிருபர்: சினிமாவை ஊக்குவிக்க, அரசாங்கம் என்னென்ன வழிகளில் உதவலாம் என்று நினைக்கிறீர்கள்?

நடிகர்: முதலாவதாக, சினிமா நடிகர்களுடைய வருமானத்துக்கெல்லாம் வரியை ரத்து செய்ய வேண்டும். இரண்டாவதாக, மற்றத் தொழிலாளர்களைப் போல் சினிமா நடிகர்களும் 55 வயது வரை நடிப்பதற்குச் சட்டம் போட வேண்டும். மூன்றாவதாக, சில படங்களை 'மோசம்' என்று பத்திரிகை விமர்சனம் செய்வதைத் தடை செய்ய வேண்டும். நான்காவதாக —

நிருபர் (எழுந்து): சரி, நேரமாகிறது !.... ரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் ?

நடிகர்: ரசிகர்கள் சினிமா அடிக்கடி பார்க்க வேண்டும். அதிலும் நான் நடிக்கும் படங்களைப் பல முறை பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் !



HTP-I-P-I-65/66 TM



நாடு : அமெரிக்கா

நடனம் : நவீனம்

ஓவியத்தில் மாடர்ன் ஆர்ட் பாணிகளைப் பார்த்து வியப்போ குழப்பமோ பிரமிப்போ இன்பமோ பெறுவது அவரவர்கள் மனோ பாவத்தைப் பொறுத்தது. பாராட்டுபவர்கள் பாராட்டுவார்கள்; பரிகசிப்பவர்கள் பரிகசிப்பார்கள் !

இந்த நவீன உத்திகள் ஓவியத்தில் மட்டுமல்ல; சமீப காலத்தில் இலக்கியத்திலும் நாடகத்திலும் நடனத்திலும் இசையிலும் புகுந்து கொண்டுள்ளன. புதிய புதிய பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

நடனத்தில் நவீன பாணியை அமெரிக்காவிலிருந்து வந்த பால் டெய்லர் குழுவினரின் நிகழ்ச்சியில் காண முடிந்தது. ''நான் தயாரித்துள்ள இந்த நடனங்களின் வாயிலாக நான் எந்தச் செய்தியையும் உங்களுக்குச் சொல்ல முற்படவில்லை. இவற்றைப் பார்க்கும் போது ஏதேனும் புதிராக உங்களுக்குத் தோன்றினால் அதை விடுவிக்கும் வேலையை உங்கள் மூளைக்குத் தர வேண்டாம். உங்கள் கண்களும் புலன்களுமே அந்தக் காரியத்தைச் செய்யட்டும்'' என்று பால் டெய்லர் ஆரம்பத்திலேயே கூறி விடுவதால் நடனத்தைப் பார்க்கும் போது நமக்கு ஒன்றும் புரியவில்லை என்பதற்காக அவரிடம் கோபப்பட்டுப் பயனில்லை.

எனினும், ஒரு விஷயம் தெளிவாகப் புரிகிறது. அது இந்தக் குழுவில் உள்ள அனைவரிடமும் உழைப்புக்குப் பஞ்சமில்லை என்பது தான். தாங்கள் மேற்கொண்டிருக்கும் பணியில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தாலொழிய இந்த உழைப்பு தோன்றாது. இந்த நம்பிக்கையும் உழைப்புமே அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்து விடுகின்றன. இல்லாமலா உலகப் புகழ் பெற்றிருக்கிறார்கள் ?

மழை நீர் விழும் ஓசை ; டெலிபோன் இயக்குநரின் பேச்சு போன்ற பல சப்தங்களையே இசையாக்கி அதற்கேற்ப நாட்டியமும் அமைத்திருக்கிறார் பால் டெய்லர். ரொம்பவும் நவீனமான முயற்சிகள் என்பதை ஒப்புக் கொண்டுதானே ஆகவேண்டும் !



கவிக்குயில்

டி. டி. விஜயராகவன்

பிறந்த நாள்: பிப்ரவரி, 13





இந்தியப் பெண்மணிகள் ஒருவிதத்தில் பாக்கியம் செய்தவர்கள். மேல்நாடுகளில் பெண்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட வேண்டியிருந்தது. இங்கிலாந்தில் வோட்டுரிமைக்காக இயக்கம் ஆரம்பிக்கப் பட்டுச் சில சமயம் பலாத்காரத்தில்கூடக் கொண்டு வந்து விட்டது.

1928ல்தான் இங்கிலாந்தில் பெண்களுக்கு முழு வோட்டுரிமை கிடைத்தது.

இந்தியாவிலோ ராஜாராம் மோகன்ராய், மகரிஷி கார்வே போன்ற தலைவர்கள் சமூக சீர்திருத்தத்துக்காகப் போராடும்போது பெண்கள் முன்னேற்றத்துக்கும் சேர்ந்து பாடுபட்டார்கள். காந்திஜி சுதந்திர இயக்கத்தின் தலைமையை எடுத்துக் கொண்டபின், அரசியலில் ஆண்களோடு பெண்களும் பெருவாரியாகப் பங்கு எடுத்துக் கொள்ளும் வண்ணம் சூழ்நிலையை மந்திரவாதி போல் மாற்றி விட்டார். இதன் காரணமாக நாடு சுதந்திரம் அடைந்தபின் நிறுவப்பட்ட அரசியல் சாஸனத்தில் சமத்துவம் என்ற ஷரத்தில் ஆண்களோடு பெண்களும் வாக்குரிமை, சொத்துரிமை, வேலை உரிமை போன்றவைகளில் சமமாகப் பாவிக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படைக் கொள்கை ஸ்தாபிக்கப் பட்டது.

இப்படிச் சந்தர்ப்பச் சூழ்நிலை சாதகமாக இருந்த போதிலும், எந்த இயக்கத்துக்கும் தலைமை அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதில் அழியாப் புகழை அடைந்தவர் சரோஜினி அவர்கள். அவர் பெண்கள் முன்னேற்றத்துக்கு மட்டுமல்லாமல், சுதந்திர இயக்கத்துக்கும் சிறந்த தொண்டாற்றினார். அதே போல் இலக்கிய வானில் பெரிய ஜோதியாக விளங்கினார். இத்தகைய மேன்மையின் வரலாற்றை அழகாகவும், எளிய நடையிலும், ஆர்வத்துடன் நமக்கு அளித்திருக்கிற *பத்மினி சென்குப்தா அவர்களுக்குப் பாரத மக்கள் மிகவும் கடமைப் பட்டுள்ளார்கள். இவர் கவி அரசியிடம் நெருங்கிப் பழகியவர். சென்னை சர்வகலாசாலையின் எம். ஏ. பட்டதாரி. ஆங்கில இலக்கியத்தை எடுத்துக் கொண்ட இவர் முதன்மையாகப் பரீட்சையில் தேறியவர். தவிர பத்திரிகைத் தொழிலிலும், சமூக சேவையிலும் ஈடுபட்டவர். ஒரு வங்காளியை மணந்து கொண்டார். சரோஜினி தேவியின் சரிதத்தை எழுதுவதற்கு இதற்கு மேல் என்ன தகுதி வேண்டும்?

சரோஜினி தேவியைப் பற்றி அவர் தெரிவித்திருக்கும் ஓர் ஆச்சரியமான தகவல் அவருக்கு வங்காளம் படிக்கத் தெரியாது என்பதே! காலம் சென்ற டாக்டர் பி. வி. ராய்

---

* சரோஜினி நாயுடு வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) ஆசிரியை: பத்மினி ஸென்குப்தா, ஆசியா பப்ளிஷிங் ஹவுஸ், பம்பாய்; விலை: ரூ. 26-00.





அவர்கள் இதைப் பற்றி அடிக்கடி கேலி செய்வதுண்டு. தாகூர் கவிதைகளை ஆங்கில மொழிபெயர்ப்பில் படித்து என்ன பயன் என்று அவர் கூறுவார். அதற்கு சரோஜினியின் பதில் அந்தக் கவிதைகளைத் தம்மால் படிக்கக் கேட்டு அநுபவிக்க முடிந்தது என்பதே. ஆனால் அவர் வங்காளம் கற்க முடியாமல் போன காரணத்தை ஸ்ரீமதி சென் குப்தா விவரிக்கிறார். சரோஜினியின் தகப்பனார் அகோரநாத் சட்டோபாத்யாயாவுக்குத் தம் பெண் ஆங்கிலத்தில் புலமை பெற வேண்டும் என்ற அவா. இதில் சரோஜினி ஆர்வம் காட்டாமல் போனதால் தகப்பனார் தமது ஒன்பது வயதுக் குழந்தை சரோஜினியை ஓர் அறையில் பூட்டி வைத்து விட்டார். சரோஜினிக்கு இதனால் மனத்தாங்கல் எதுவும் ஏற்படவில்லை. அதற்கு மாறாகத் தகப்பனாருடைய விருப்பத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்கிற வைராக்கியம் உண்டாயிற்று. இதன் காரணமாக அவர் வீட்டிலேயே பெற்றோர்களிடம் ஆங்கிலத்தில் மட்டுமே பேசலானார். சரோஜினியின் தாயார் மட்டும் ஹிந்தியில் பதில் உரைப்பாராம்.

ஆங்கிலத்தில் தமக்குக் கவிதை எழுதுவதற்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது என்பதைப் பற்றி சரோஜினியே விவரித்துள்ளார்.



சரோஜினி கணித பண்டிதையாகவோ அல்லது விஞ்ஞானியாகவோ திகழ வேண்டும் என்று அவர் தகப்பனார் கருதினார். பதினொரு வயதில் அல்ஜிப்ரா கணக்கு ஒன்றை வைத்துக் கொண்டு கஷ்டப்படும் போது, சரோஜினிக்குத் திடீரென்று ஒரு கவிதை உதயமாயிற்று. அதிலிருந்து அவரது கவிதை வாழ்க்கை ஆரம்பித்து விட்டது. அவர் சிறு வயதில் எழுதிய கவிதைகள் இப்பொழுதும் கல்கத்தாவில் உள்ள தேசிய நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

சிறு வயதிலிருந்தே, சரோஜினிக்கும் சென்னைக்கும் ஒரு பொருத்தம் ஏற்பட்டு விட்டது. சரோஜினி மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேற வேண்டும் என்ற விரும்பிய அவர் தகப்பனார் ஹைதராபாத்தில் வேண்டிய வசதி இல்லாததால் சென்னைக்கு சரோஜினியை அனுப்பினார். அவரது பன்னிரண்டாவது வயதில் சென்னை மாகாணத்திலேயே முதலாவதாக அந்தப் பரீட்சையில் தேறினார். இதனால் அவர் புகழ் இந்தியா முழுவதும் பரவியது.

அவருக்கு உடல் நலமில்லாததால், மூன்று வருடங்கள் வீணாகக் கழிந்து விட்டன. அதன்பின் அவர் இங்கிலாந்துக்குச் சென்று லண்டனில் உள்ள கிங்க்ஸ் காலேஜிலேயும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலும் கல்வி பயின்றார். ஆனால் அவருக்கு வகுப்பில் ஆசிரியர்கள் போதிக்கும் பாடங்கள் ரசிக்கவில்லை. அடிக்கடி 'மட்டம்' போட்டு விட்டு இங்கிலாந்தின் கிராமப் பிரதேசங்களுக்குச் சென்று இயற்கை அழகையும், பறவைகளின் கீதங்களையும் ஆர்வத்துடன் அனுபவிக்கத் தொடங்கினார்.

இதன் பலனாகத் தான் அவர் சிறந்த கவியாக மாறினார். 1905ல் அவருடைய முதல் புத்தகம் (The Golden Threshold) வெளியாயிற்று. அதற்கு முன்னுரை எழுதிய எட்மண்ட் காஸ் என்கிற பிரபல விமர்சகர் இதை மிகவும் பாராட்டி ஆங்கி



1. சரோஜினி தேவியும் காந்தியும். 2. ராஜாஜி கவியரசியுடன். 3. நேருஜி, கவியரசி சரோஜினிதேவி ஆகியோருடன் ஸ்ரீ சதாசிவம், ஸ்ரீமதி எம். எஸ். 4. ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் ஸ்ரீமதி சரோஜினியாரும்.

லம் பயின்ற இந்தியர்களில் சரோஜினிதான் முதல் ஸ்தானம் வகிக்கிறார் என்று எழுதினார். பல பத்திரிகைகள் இந்தப் புத்தகத்தை விமரிசனம் செய்தபோது கொடுத்த பாராட்டுகளுக்கு அளவேயில்லை. அவர் கவிதைகள் இந்தியாவின் பல பாகங்களிலும் ஒலித்தன. இந்தியாவின் 'கவிக்குயில்' என்ற பட்டப் பெயரும் கிடைத்தது. 1912ல் அவரது இரண்டாவது புத்தகம் வெளியாயிற்று. இதற்கு ஐந்து வருடங்களுக்குப்பின் வெளியானது அவருடைய மூன்றாவது புத்தகம் (The Broken Wing). 1917ல் கவிதைகள் எழுதுவதை நிறுத்திக் கொண்டு தேச சேவையிலும் சமூக சேவையிலும் மும்முரமாக ஈடுபடத் தீர்மானித்தார்.

ஃ ஃ ஃ

இதற்கெல்லாம் முன்பாகவே 1898ல் சென்னையிலே அவருடைய திருமணம் நடந்தது. அதுவே ஒரு கதை.

சரோஜினி தமது பதினைந்தாவது வயதில் ஹைதராபாத்தில் டாக்டர் கோவிந்த ராஜுலு நாயுடு என்கிற இளம் வைத்தியரைச் சந்தித்து அவரிடம் அன்பும் நட்பும் கொண்டிருந்தார். சரோஜினி பிராமண குலத்தைச் சேர்ந்தவர். ஆகவே, டாக்டர் நாயுடுவுக்கு சரோஜினியை மணம் செய்து கொடுக்க விருப்பமில்லாததால் சரோஜினியை அவர் பெற்றோர்கள் இங்கிலாந்துக்கு மேல் படிப்புக்காக அனுப்பி வைத்தார்கள் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதைப் பற்றி நூலாசிரியை பத்மினி ஸென்குப்தா வேறு விளக்கம் கொடுத்திருக்கிறார். அகோரநாத் சட்டோபாத்யாயா அவர்கள் ஒரு தீவிர சீர்திருத்தவாதி. அவர் பூணூலையே விட்டு விட்டதாகவும் தெரிகிறது. இப்படி இருக்கும் போது தம் மகள் விஷயத்தில் ஆசார நியதியை ஒப்புக் கொண்டு காதல் திருமணத்துக்குத் தடை விதித்திருக்க மாட்டார் என்று அவர் கருதுகிறார். திருமணத்துக்கு உடன்படாததற்குக் காரணம் சரோஜினிக்கு வயதாகவில்லை என்பதே. சிறு வயதிலேயே மணம் செய்விக்க அவர் விரும்பவில்லை.

இந்தக் காரணமே சரியானது என்று தோன்றுகிறது. ஏனென்றால் மூன்று வருடங்களுக்குப்பின் 1898ல் சரோஜினி இங்கிலாந்திலிருந்து திரும்பியபின் அவர் டாக்டர் நாயுடுவையே மணக்க விரும்பிய போது, பெற்றோர்கள் தடை செய்யவில்லை. சென்னையில் டிசம்பர் 2, 1898ல் நடந்த இந்த விவாகம் மிகவும் மகத்துவத்தை அடைந்தது. கலப்பு விவாகம் என்ற முறையில் அது ஒரு புரட்சியையே உண்டாக்கியது. மேலும் வங்காளத்தைச் சேர்ந்த சரோஜினி தென்னகத்தைச் சேர்ந்த டாக்டர் நாயுடுவை மணந்தது தேசிய ஐக்கியத்துக்கு ஒரு சின்னமாகவும் விளங்கியது.

அவர்கள் மண வாழ்க்கை குதூகலமாக இருந்தது. நான்கு குழந்தைகள் பிறந்தன. ஜயசூரியா, பத்மஜா (இப்பொழுது மேற்கு வங்காள கவர்னராக இருப்பவர்) ரண்தீரா, லீலாமணி ஆகியோர். ஆனால் சீக்கிரமே சரோஜினிக்குக் குடும்ப வாழ்க்கையில் இருந்த பற்றுக் குறைந்து தேச சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. டாக்டர் நாயுடு பரந்த மனப்பான்மையுடையவர். தம்முடைய மனைவியின் திறமையையும் சக்தியையும் அறிந்து அதற்குப் பேராதரவு அளித்தார். அவர் வரையிலும் வைத்தியத்திலும், பரோபகார சேவையிலும் தம் வாழ்நாட்களைக் கழித்தார்.

ஃ ஃ ஃ

சரோஜினி பொது வாழ்வில் ஈடுபடுவதற்குக் காரணமாக இருந்தவர் கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள். 1902ல், சரோஜினி கோகலேயைச் சந்தித்தபோது தேசத் தொண்டில் ஈடுபடும்படி அவர் தூண்டினார். ஒருமுறை கல்கத்தாவில் அவர்கள் சந்தித்த போது, கோகலே சரோஜினியைப் பார்த்து, "இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டார். "இன்னும் ஐந்து வருடங்களில் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டு விடும்" என்று சரோஜினி பதில் அளித்தார். அதற்கு கோகலே, "குழந்தாய். நீ ஒரு கவி. அதனால் உனக்கு அதிக நம்பிக்கை இருக்கிறது. ஆனால் உன் காலத்திலேயோ அல்லது என் காலத்திலேயோ இது நடவாது. ஆனாலும், உன் நம்பிக்கையை விணுக்காமல், அதற்காகத் தொண்டு செய்" என்று கூறினார்.

கோகலே சீக்கிரமே காலமானார். இதற்குப் பின் தான் சரோஜினிக்குக் காந்திஜியைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்கள் முதல் முதல் சந்தித்தது லண்டனில்தான். 1916 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்தச் சந்திப்பைப் பத்மினி ஸென்குப்தா தம் நூலில் வெகு ரசமாக வர்ணித்திருக்கிறார். சரோஜினி காந்தியைச் சென்று பார்க்கும் போது அவர் ஒரு பழைய வீட்டில் தரையில் உட்கார்ந்து கொண்டு ஒரு கிண்ணத்திலிருந்த தக்காளிக் கூழ்மைப் பருகிக் கொண்டிருந்தாராம். அவரைச் சுற்றி வேர்க்கடலைகளும், பிஸ்கோத்துகளும் சிதறிக் கிடந்தன. இதைப் பார்த்ததும் சரோஜினி சிரித்தார். பெரிய தலைவரைச் சந்திக்கப் போகிறோம், அவர் எப்படி இருக்கப் போகிறாரோ என்னவோ என்ற பயத்துடன் வந்திருந்தார் சரோஜினி. இவரைப் பார்த்தவுடன் அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது. காந்திஜி தலை நிமிர்ந்து பார்த்து, "நீங்கள்தான் ஸ்ரீமதி நாயுடுவாக இருக்க வேண்டும். உங்களைத் தவிர வேறு யார்தான் இப்படி மரியாதைக் குறைவாக நடந்து கொண்டிருக்க முடியும்? வாருங்கள், என் சாப்பாட்டைக் கொஞ்சம் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்றார். சரோஜினி, "வேண்டாம்! வேண்டாம்! சகிக்க முடியாத சாப்பாடு!" என்று பதில் அளித்தார்.

சுமார் முப்பது ஆண்டுகள் காந்திஜியும் சரோஜினியும் நெருங்கி அன்னியோன்னியமாகப் பழகினார்கள். ஆனால் காந்திஜியின் பல கொள்கைகளை சரோஜினி கடைப்பிடிக்க

ஐயங்கார் சங்கீதம்



1906: அரியக்குடி ஸ்ரீரங்கம் சென்று பல்லவி நரசிம்ம ஐயங்கார் அவர்களிடம் குருகுல வாசத்தில் ஈடுபட்டார். நாமக்கல் சேஷ ஐயங்கார் அப்போது அங்கே முன் மீனவராக இருந்து வந்தார்.

ஒருநாள் அவர் ராமானுஜத்தை அல்லூர் ஆலயத்தில் அமைந்துள்ள ஆயிரக்கால் மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார். ''நான்கு வேதமும் ஆறு சாத்திரமும் தெரியும்; வாய் மட்டும் ஊமை என்பது போல் வாய்ப்பாட்டுத் துறைக்குத் தயாராகிறவர்கள் விஷயத்தை மனத்தில் வாங்கிக் கொண்டால்மட்டும் போதாது: உடனுக்குடன் வாய் விட்டுப் பாடிச் சாதகம் செய்ய வேண்டும். அதற்கு ஏற்ற இடம் இது. நான் முன்னெல்லாம் இங்கேதான் சாதகம் செய்வேன். நீயும் செய்'' என்றார்.

மறு நாள் முதலே ராமானுஜம் அதைக் கடைப்பிடிக்கலானார். விடியற்காலம் மூன்று மணிக்கே கிளம்பி விடுவார். சில நாள் விடி நிலா துணை; மற்ற நாளில் இருளே துணை. பொழுது புலர்ந்து வெயில் ஏறுகிற வரையில் பாடுவார்.

இத்தகைய சாதகத்தில் உரம் பெற்று உருவானது ஐயங்கார் அவர்களின் சங்கீதம்!

1956: ''ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் கச்சேரியில் வர்ணம் பாட ஆரம்பித்து நாலைந்து ஆவர்த்தம் ஆவதற்குள்ளேயே எனக்குக் 'குஷி' கிளம்பிவிடும். காரணம் துளிக்கூட ஓட்டம் இழுப்பு இல்லாத பரிசுத்தமான லய சுத்தம்தான். நிரவல், ஸ்வரம் பாட ஆரம்பித்தால் கற்பனை புங்கானு புங்கமாய்ப் பொங்கி வரும். அவ்வளவு கற்பனையிலும் துளிக்கூட அநாவசியம் இராது. தவிர, தாம் பாடுகிறபோது எப்படி ஒரு நிமிஷத்தைக்கூட வீணடிக்க மாட்டாரோ, அதுபோலவே பக்கவாத்திய வித்துவான்களையும் வீண் பொழுது போக்க விடமாட்டார். உதாரணமாக, மிருதங்கம் வாசிப்பவர்கள் தனி ஆவர்த்தனத்தை விஷயமில்லாமல் நீண்ட நேரம் வளர்த்திக் கொண்டே போனால் சின்ன மோகாரா அல்லது ஏதாவது ஜதிகள் வாசித்து எடுப்பு எடுக்கும் சந்தர்ப்பத்தில் பல்லவி எடுப்பை எடுத்து மேலே பாட ஆரம்பித்து விடுவார். ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் சமயோசிதச் செயல்கள் லய விஷயத்திலும் கூடத் தங்கள் ஆட்சியைச் செலுத்தத்தவறுவதில்லை'' என்கிறார் பாலக்காடு மணி ஐயர்.

ஆதாரம்: ''எல்லார்வி'' எழுதிய அரியக்குடி வரலாறு.


லில்லை. அவருக்குக் கதராடை மேல் காந்திஜியைப் போல் அவ்வளவு பக்தி இல்லை. காந்திஜியுடன் அவர் இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டுக்குச் சென்றபோது அவர் உடுத்தியிருந்த பளபளப்பான பட்டுப் புடவை காந்திஜி அணிந்திருந்த எளிய உடையைப் பளிச்சென்று எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது என்று பத்திரிகைகளில் விமர்சகர்கள் சுட்டிக் காண்பித்திருக்கிறார்கள். ஒரு சமயம் சரோஜினி காந்திஜியை எரவாடா சிறையில் பார்க்கச் சென்றிருந்த போது, காந்திஜி நூல் நூற்றுக் கொண்டிருந்தார். சரோஜினியையும் நூல் நூற்குமாறு அழைத்தார் காந்திஜி. தமக்குக் கட்டை விரல் வலிக்கிறது என்று பதில் சொன்னார் சரோஜினி. காந்திஜி சிரித்துக் கொண்டே கிழக்கு இந்தியக் கம்பெனி அரசாண்ட காலத்தில் நெசவாளர்கள் கைப்பிடித்த வழியை சரோஜினியும் பின்பற்றுகிறார் என்று வேடிக்கையாகக் கூறினார். (கும்பெனியாரின் விருப்பத்துக்கு இணங்க மறுத்து, வங்க நெசவாளர்கள் தங்கள் கட்டை விரல்களை அறுத்துக் கொண்டார்கள்.)


நடைமுறையில் காந்திஜியும் சரோஜினியும் வேறுபட்டிருப்பதாக வெளிப் பார்வைக்குத் தோன்றினாலும் அவர்களுடைய உறவு ஆன்மீகமானது. இருவரும் மனித சமுதாயம் அன்பினால் பிணைக்கப்பட்டு நேர்மையாகவும் சுதந்திரமாகவும் இருக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தார்கள். இதுதான் அவர்களை ஒன்றாக இணைத்த முக்கியமான அம்சம்.

சுதந்திரப் போராட்டத்துக்காகவும், — பெண்கள் முன்னேற்றத்துக்காகவும் சேவை செய்த தலைசிறந்த தலைவர்களில் ஒருவர் சரோஜினி தேவி. காங்கிரஸ் அக்கிராசனர் பதவியை வகித்த முதல் இந்தியப் பெண்மணி அவர்தான். இந்தியா சுதந்திரம் அடைந்தபின் முதன் முதலாகக் கவர்னர் பதவியை ஏற்ற பெண்மணியும் அவர்தான். அவருடைய ஆங்கிலப் புலமையும், பேச்சுத் திறனும் பிரமிக்க வைப்பவை. இத்தகைய மேதையின் வாழ்க்கை வரலாறு பாரதமக்கள் அனைவருக்கும் ஊக்கமளிக்கக் கூடியது.

ஜிம்பி

வால்ட் டிஸ்னி


ஆ...ஹ்...ஹா! அது என்ன? நான்தான்
ஸ்ஸ் ஸ்ஸ்
ஸ்ஸ் ஸ்ஸ்
டேய்...ய்
9-18
வெளியே வாடா பொடியா!
?
அதிசயமா இருக்கே! அந்தப் பொடியன் எங்கே போயிருப்-பான?



திருவாளர் பூபதியைப் பேட்டி காணச் சென்றோம். ஆனால் ஒரு வார்த்தையாவது அவர் வாய் திறந்து பேச வேண்டுமே? ஊஹூம்! எவ்வளவோ முயன்று பார்த்தும் ஒரு மர்மமான அரசியல் புன்னகையை உதிர்த்து விட்டு மௌனமாகி விட்டார் அவர்!

பதின்மூன்று ஆண்டுகளாக இயங்கிவரும் குழந்தைநல இந்தியக் கழகம் ஏழைக் குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்வுக்கு வழி கோலுகிறது. உபகாரச் சம்பளம் கொடுத்துப் பல பால சேவிகைகளுக்குப் பயிற்சி அளித்துப் பாலர் பராமரிப்புப் பணியில் இறங்கத் தூண்டுகிறது. 'பாலவாடி'கள் என்று கூறப்படும் நர்சரி முறைப் பள்ளிகளைத் தோற்றுவித்துக் கல்வி புகட்ட வழி செய்கிறது. அதோடு குப்பங்களில் வாழும் தாய்மார்களுக்குச் சுகாதாரம் போதிக்கிறது; சிறந்த

பேசாத ஒருவருடன் பேட்டி!

பாலகனின் பெயர் பூபதி. தந்தையின் பெயர் ராஜா. சிற்றாள் வேலை செய்கிறார். தாயாரின் பெயர் சரோஜா. குடும்பக் காரியங்களைக் கவனிக்கிறார். பூபதிக்கு மூன்று வயதில் ஓர் அண்ணனும் உண்டு.

பிறந்த ஆறு மாதங்களுக்குள் சிறந்தவன் என்ற புகழைத் தட்டிக் கொண்ட இவனைப் பேட்டி காணச் சென்றோம். எங்கே, தெரியுமா? தேனாம்பேட்டை பாரதி தாசன் சாலையில் உள்ள தாய் — சேய் நல விடுதியில். இங்கேதான் இவன் பிறந்தது. எங்களைக் கண்டதும் முகத்தில் இளநகை ஓட எங்களுக்கு இனிய வரவேற்பு அளித்தான். அப்புறம் ஏதாவது கேட்கவேண்டும் என்றால் என் அம்மாவைக் கேளுங்கள் என்று வாசகமும் குறும்பும் இழையோட முகத்தைத் திருப்பித் தாயைப் பார்த்தான்! பெண்ணின் பெருமைக்கு அணி செய்யும் நாண முறுவல் துலங்கத் தலையைக் குனிந்தாள் அவன் அன்னை. படிப்பு வாசனை குறைவுதான் என்றாலும் பாரதப் பண்பு மிக உண்டு என்பதை அவளது அந்த முகபாவம் எங்களுக்குக் காட்டிக் கொடுத்தது.

பேட்டி கிடைத்தது: ஆனால் பேச்சு.....? எந்தக் கேள்விக்கும் மௌனமே அவனிடம் விடையாக அமைந்தது. பதில் என்று ஓரிரண்டு சொல் வந்தால், அதை அவனோடு நெருங்கிப் பழகிய டாக்டர் அவர்களே, துபாஷி பதவியேற்று விளக்கவேண்டி வந்தது! பதில் அவ்வளவு ரத்தினச் சுருக்கம்!

முறையில் குழந்தைகளைப் பராமரிக்கும் வழியையும் சொல்லித் தருகிறது.

நகரசபை போன்ற நிறுவனங்களும் இக்கழகத்தின் பணி சிறக்கப் பெரிதும் உதவுகின்றன. தாய்-சேய்நல விடுதிகள், சுகாதாரப் பார்வையாளர்கள், டாக்டர்கள் இவர்களது ஒத்துழைப்புடன் இயங்கி வரும் இந்த ஸ்தாபனத்துக்கு அரசாங்க உதவியும் கிடைக்கிறது.

'நிஜமாகவா?' என்று கேட்டு வியக்கத் தோன்றுகிறதல்லவா? நிஜம்தான்; பொய் இல்லை.

குடும்பக் கட்டுப்பாட்டுக்கான செயற்கை முறைகளுக்குத் திட்டம் தீட்டி ஒருபுறம் ஏராளமான பொருளைச் செலவிடும் அரசாங்கம், மறுபுறம் குழந்தைகளின் நலனிலும் நாட்டம் கொண்டிருப்பது உண்மைதான்; பாராட்டுதலுக்குரிய செயல்தான்.

இக்கழகத்தினர் ஆண்டுதோறும் குழந்தை தினத்தை ஒட்டிச் சிறப்பாக, நல்ல ஆரோக்கியத்தோடு வளர்க்கப்படும் குழந்தைகளுக்குப் பரிசளிப்பதென்று ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். ஒரு மாதக் குழந்தையிலிருந்து ஒரு வயதுக் குழந்தை வரை இப்போட்டியில் பங்கெடுத்துக் கொள்கின்றன. இப்பரிசுகள் பெறக்கூடிய குழந்தைகள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஒரு மாதம் முதல் நான்கு மாதங்கள் வரையுள்ள குழந்தைகள், ஐந்து முதல் எட்டு மாதங்கள் வரையுள்ள குழந்தைகள், ஒன்பது முதல் ஒரு வருஷம் வரையுள்ள குழந்தைகள்

என்று. இந்த ஆண்டு பரிசுகள் பெற்ற பல குழந்தைகளுள் ஒருவன்தான் பூபதி. இவன் கடந்த ஆண்டு ஜூன் மாத . மத்தியில் பிறந்தான்.

"ஏனம்மா ! குழந்தைக்கு ஏதாவது ஒளாக்ஸோ, அமுல் போன்ற புஷ்டியுணவு புகட்டுவதுண்டா?" என்று தாயை நோக்கிக் கேட்டோம்.

"நீங்க சொல்றெ பெயரைச் சொல்ல தற்கே நாங்க பணம் கொடுக்கணும் போல் இருக்குதே! அதெல்லாம் வாங்கிப் புகட்ட இங்கே யாராலே ஆகுமுங்க?"

"நீங்க என்ன உணவு சாப்பிடுகிறீங்க?"

"ரேஷன்லே கிடைக்கிற கல்லேயும் மண்ணே யும்தான் !"

என்ன நாருக்கான பொடி வைத்த பேச்சு !

"குழந்தைக்கு ஆகாரம் என்ன கொடுக் கிறீங்க?"

"இம்மாஞ் சின்னக் குழந்தைக்கு வேறு என்னத்தைக் கொடுக்க முடியுமுங்க? எல் லாம் தாய்ப் பாலுதானுங்க!" நாணம் பொங்க வந்தது பதில்.

"அப்புறம் வேறு எதுவும்....?"

"இவங்க காலையிலே ஓர் ஆழாக்கு, மாலை யிலே ஓர் ஆழாக்கும் பசும் பால் தராங்க. அதையும் கொடுப்பேனுங்க."

"ஆமாம்; தாய்ப்பால், பசும்பால் இரண் டும் கொடுத்துத்தான் இவள் பிள்ளையை வளர்க்கிறாள். இங்கே மாசம் ஒரு தடவை கொண்டு வந்து காட்டுவாள். நாங்கள் பரி சோதனை செய்து பார்ப்போம். மாதத்துக்கு ஒரு தரம் நாங்கள் டாக்டர்களோ, நர்சு களோ, சுகாதாரப் பார்வையாளர்களோ இவர்கள் பகுதிக்குச் சென்று பார்த்துவிட்டும் வருவோம். இவள் தன் வீட்டை ரொம்ப அழகாக, வெகு சுத்தமாக வைத்துக் கொண் டிருக்கிறாள்!" என்றார் 'துபாஷி' டாக்டர்.

"ஆமாம், குழந்தைகளைப் பரிசுக்குத் தேர்ந் தெடுக்கிற முறை எப்படி?"

"நீதிபதிகள் நியமிப்போம். பெரும் பாலும் அவர்கள் டாக்டர்களாக இருப்ப வர்கள். நன்றாக உடற் பரிசோதனை செய்த பின்பே தரமான குழந்தைகளைத் தேர்ந் தெடுக்கிறார்கள். பெரும்பாலும் ஏழைகள் வாழும் பகுதியைத்தான் இந்தப் போட்டிக் குத் தேர்ந்தெடுக்கிறோம்!"

"இந்தக் காலத்து அதிநாகரிக நங்கை களையும் பரிசளிப்பு விழாவின் பொழுது நீங்கள் அழைப்பது உண்டோ ?"

"என்ன ஐயா கேள்வி?" கூட வந்திருந்த நண்பர் கடிந்தார். அவர் வாய்க்குப் பயந்து நான் அந்த விஷயத்தைத் தொடராமல் விட்டு விட்டேன் !

டாக்டரிடம் நாங்கள் விடைபெறுவதற்கு முன்பாக எங்களிடம் விடைபெற்றுக் கொண்ட தாய், குழந்தையை வராந்தாவில் விட்டு விட்டு வேப்பிலை ஆர்க்கு ஒன்றைப் பறித்து வரச் சென்றிருந்தாள். இங்கோ குழந்தை அவள் வாங்கி வைத்திருந்த பசும் பாலில் கையை விட்டுத் துழாவிக் கொண் டிருந்தான். ஓடோடி வந்து வேப்பிலையைச் சுற்றித் திருஷ்டி கழித்த அவன் அன்னை, "அட போக்கிரி! கொட்டி விடாதே பாலே! அப்புறம் பால் கிடைக்காது!" என்று சிரித்து மகிழ்ந்த படி கூறினள்.

பூபதி திருஷ்டி படாமல் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்று மனத்துள் வாழ்த் திய எங்கள் கண் முன்னே திருவள்ளுவர் தோன்றிக் கூறினர் :

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

காரணம், பால் மணம் மாறாத பாலகன் பால்வடியும் தனது கையைத் தாயின் முகத் தில் தீற்றிக் கொண்டிருந்தான்.



★ இங்கிலாந்தில் பஸ் விபத்தில் சிக்கிய ஒரு மாது, பஸ் கம்பெனி மீது வழக்குத் தொடுத்தாள். அவள் காட்டிய காரணம்: விபத்தின் காரணமாக ஏற்பட்ட அதிர்ச்சியில் தம் கணவனுக்கு மிகப் பிடித்தமான இறைச்சிப் பண்டத்தைச் சமைப்பதெப்படி என்பதை அவள் மறந்து விட்டாள்!

★ மின்னசோட்டாவில் ஒருவர் தமது மனைவியின் நடத்தையை ரகசியமாகக் கண் காணித்துத் தகவல் தெரிவிக்குமாறு துப் பறிபவர் ஒருவரை நியமித்தார். மனைவி படுமோசமான நடத்தை உள்ளவள் என்று தகவல் தெரிவிக்கவே விவாகரத்துச் செய்து விட்டார். பிறகு அந்தத் துப்பறிபவர் மீது வழக்குத் தொடுத்தார், தமது திருமணத்தை முறித்ததற்காக. காரணம், அவர் உண்மை யில் கண்காணித்தது அவர் மனைவியையல்ல; வேறு யாரோ ஒரு மாதை!

★ காலிபோர்னியா உணவு விடுதி ஒன்றின் மீது ஒரு மாது வழக்குப் போட்டாள், தமது கையை முறித்துக் கொள்ள அது காரணமாக இருந்தது என்று. மெழுகு பூசிய வழவழா தரை மீது சுழற்சி நடனம் ஆட அந்த ஓட்டல் அனுமதித்ததால்தான் அவள் கீழே விழுந்து கை முறிய நேர்ந்ததாம்.

— ஏ. கே. கந்தசாமி

விநோத  வழக்குகள்



கல்லுக்குள் ஈரம்

ஐந்தாம் அத்தியாயம்

விருந்தாளி

மூன்பக்கத்து அறைக்குள் நுழைந்த ரங்கமணி, அறையைச் சுற்றிக் கண்களைச் சுழல விட்டபடி நின்று கொண்டிருந்தான்.

“உட்காருங்களேன்”—அந்தப் பெண் உபசரித்தாள். ரங்கமணி நாற்காலியில் அமர்ந்தான்.

“என் விலாசம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? ரிஷிதர் சொன்னாரா?” என்று மிகுந்த ஆவலோடு கேட்டான்.

“நான் உங்களைச் சந்திக்க வரவில்லை. நீங்கள் இங்கு இருப்பீர்கள் என்று எதிர்பார்க்கவேயில்லை!”

ரங்கமணியின் பதில் அவளைத் திகைக்க வைத்தது. தன்னைப் பார்க்க அவன் வரவில்லை என்று தெரிந்ததும் அவளுக்கு ஏமாற்றமாகக்கூட இருந்தது. மதுரையில் அவள் கையசைத்து விடை கொடுத்த போது, அதை லட்சியம் செய்யாமல் ரங்கமணி, முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்த நினைவும் அவளுக்கு அப்போது வரவே, அவன் மீது கோபம் தோன்றியது.



ர.சு. நல்லபெருமாள்

''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டாள்.

''சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை இல்லையா?'' ரங்கமணி கேட்டான்.

''அவர்களைப் பார்க்க வந்திருக்கிறீர்களா? ஊரில் இல்லையே! அவர் வர இன்னும் இரண்டு நாட்கள் ஆகும் என்று கடிதம் வந்தது'' என்றாள்.

ரங்கமணி சட்டைப் பையில் வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்து விட்டு, அந்த அறையில் தொங்கிக் கொண்டிருந்த படங்களில் கவனத்தைச் செலுத்தினான். கடிதத்தின் உறையைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்துப் படித்துவிட்டுத் தலை நிமிர்ந்தாள்.

'' பட்டணத்திலேயே சந்தித்து விட்டீர்களா ?''


'' அவர்தான் என்னை இங்கு போகும்படி கூறினார். நான் வரும் போது ஒரு வேளை அவர் இல்லை யென்றால், இந்தக் கடிதத்தை வீட்டில் உள்ளவர்களிடம் கொடுக்கும்படி சொன்னார். அவர் வரும்வரை இந்த வீட்டிலேயே தங்கும்படியும் சொன்னார்'' என்றான் ரங்கமணி.

''எல்லா விவரமும் இந்தக் கடிதத்திலேயே இருக்கிறது. நீங்கள் இந்த அறையிலேயே தங்கலாம்'' என்று கூறிவிட்டு, ''குமார்!'' என்று இரைந்து கூப்பிட்டாள்.

கொஞ்ச நேரத்தில் பதினைந்து வயதுப் பையன் ஒருவன் ஓடி வந்தான்.

''இந்தப் பையன் உங்களுக்கு வேண்டியதை யெல்லாம் செய்து தருவான்'' என்று கூறிவிட்டு, ரங்கமணியின் பதிலுக்குக்கூடக் காத்திராமல் அவள் வேகமாக வீட்டுக்குள் போய் விட்டாள்.

சிறிது நேரத்தில் ரங்கமணி உடை மாற்றிக் கொண்டு வெளியே புறப்பட ஆயத்தமானான். அப்போது கையில் காப்பி யுடன் அறைக்குள் நுழைந்தான் குமார். காப்பியை வாங்கிக் குடித்து விட்டுப் பாத்திரத்தைப் பையனிடம் நீட்டிக் கொண்டே, ''பையா! அந்தப் பெண் சர்தார் சொக்க



விக்கம்பிள்ளைக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான்.

''என் பெயர் குமார்; பையனில்லே'' என்றான் குமார் வெடுக்கென்று.

ரங்கமணி சிரித்தான்.

''அக்கா, சர்தாருக்கு மகள்'' என்றான் குமார்.

''உனக்கு அக்காவா?''

''அக்கா என்றுதான் கூப்பிடுவேன். நான் இங்கு வேலைக்கு இருக்கிறேன். வெளியே புறப்படுகிறீர்களே, நான் துணைக்கு வரட்டுமா?''

''நான் என்ன பெண் பிள்ளையா, துணைக்கு வரப் போகிறாய்?''

'' இரவு உங்களுக்குச் சாப்பாடா? பலகாரமா? அத்தை கேட்கச் சொன்னார்கள்.''

''அத்தையா ?''

''அக்காவுக்கு அத்தை. சர்தாருக்குச் சகோதரி.''

''இங்கு வழக்கமாக என்ன சாப்பாடோ அதுதான் எனக்கும்'' என்று சொல்லிவிட்டு வெளியே நடந்தான் ரங்கமணி.


மாலை ஏழு மணிக்கு ரங்கமணி வீடு திரும்பினான். வாசலில் குமார் நிலக்கடலையைக் கொறித்துக் கொண்டிருந்தான். நிலக்கடலையை வாயில் போட்டு மென்று கொண்டே ரங்கமணியைத் தொடர்ந்து அறைக்குள் நுழைந்தான். மின்சார விளக்கை ஏற்றிவிட்டு நாற்காலியில் அமர்ந்தான் ரங்கமணி. பக்கத்தில் கிடந்த பெஞ்சில் குமார் உட்கார்ந்து கொண்டான்.

''ஆற்றங்கரைக்குப் போனீர்களா, சார்!'' என்று குமார் கேட்டான்.

''ஆற்று மணலில்தான் இவ்வளவு நேரமும் உட்கார்ந்திருந்தேன்'' என்று கூறிக் கொண்டே நாற்காலியில் நன்றாகச் சாய்ந்தவாறு கால்களை மேஜை மீது தூக்கிப் போட்டுக் கொண்டான் ரங்கமணி.

''குளித்திருக்கலாமே? தாமிரபரணித் தண்ணீரின் குளிர்ச்சியில் மூளைக் கொதிப்பெல்லாம் தணியுமே!'' என்று கூறிவிட்டு ஒரு கடலையை எடுத்து வாயில் போட்டு மென்றான் குமார்.

''எனக்கென்ன மூளைக் கொதிப்பா ?''



"என்னவோ, அக்கா தனக்குள்ளேயே ஏதோ முனகிக் கொண்டது எனக்குக் கேட்டது!"

"என்ன....?" — பரபரப்புடன் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தான் ரங்கமணி.

"உங்களுக்கு அரைப் பைத்தியம் என்று.." இவ்வாறு சொல்லிவிட்டுக் குமார் வீட்டுக்குள் ஓடி விட்டான்.

சிறிது நேரத்தில் சாப்பாட்டை ரங்கமணியின் அறைக்கு எடுத்து வந்து பரிமாறினான் குமார். சாப்பிடும்போது ரங்கமணி கேட்டான் : "குமார், உன் அக்காள் முழுப் பைத்தியமாயிருப்பாளோ ?"

"ஏன் சார்?"

"இந்த அறையில் இத்தனை காந்தி படங்களை மாட்டியிருக்கிறாளே ! ஒரு படம் போதாது?"

"உண்மைதான் சார். காந்திப் பைத்தியம் அவளுக்கு உண்டு" என்றான் குமார். பிறகு கேட்டான்: "உங்களுக்கு எதில் பைத்தியம்? சாப்பாட்டிலா சார் ?"

இதைக் கேட்டதும் ரங்கமணி திடுக்கிட்டான். பையனின் குறும்பு அவனுடைய கோபத்தைக் கிளறியது.

"குனிந்த தலை நிமிராமலேயே ரசித்துச் சாப்பிடுகிறீர்களே, அதனால் கேட்டேன்" என்று கூறிச் சிரித்தான் குமார். அப்போ இருந்த பசியில் ஒரே மூச்சில் சாப்பிட்டுக் கொண்டிருந்ததை நினைத்ததும் ரங்கமணிக்கு வெட்கம் வந்து விட்டது.

இரவு ஒன்பது மணிக்குக் குமார் தன்னுடைய வீட்டுக்குப் போய் விட்டான். ரங்கமணிக்குத் தூக்கம் வரவில்லை. வராந்தாவில் நாற்காலியை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். வெளியே நிலவு காய்ந்தது. வீட்டினுள் எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்கு சன்னல் வழியாகத் தெரிந்தது. வீட்டுக்குள்ளிருந்த அறையில் சர்தாரின் மகள் ஒரு நாற்காலியில் அமர்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தாள். அவளையே சிறிது நேரம் கவனித்துக் கொண்டிருந்தான்.

கர்வம் பிடித்தவளா யிருப்பாளோ? புதிதாக வந்திருக்கிறேன்; ஒரு பையனை ஏவலுக்கு அனுப்பி விட்டுப் போய் விட்டாளே! அறை வசதியாக இருக்கிறதா என்றுகூடத் திரும்ப வந்து கேட்க வில்லையே ! என்னை அரைப் பைத்தியம் என்று பறைசாற்றி யிருக்கிறாளே ! கொஞ்சம் குறும்புக்காரப் பெண்ணாகவும் இருப்பாள் போலிருக்கிறது....

மேஜையின் மீதிருந்த விளக்கொளியில் அவள் முகம் தெளிவாகத் தெரிந்தது. முகத்தில் போதை தரும் அழகில்லை என்றாலும் மனத்துக்கு இதமான அமைதியான அழகு குடிகொண்டிருந்தது.

வீட்டுக்குள்ளிருந்த கடிகாரம் பன்னிரண்டு மணி அடித்த சத்தம் இலேசாகக் கேட்டது. அந்தப் பெண் இன்னும் படித்துக் கொண்டுதான் இருந்தாள். ரங்கமணிக்குத் தூக்கம் வரவே தன்னுடைய அறைக்குள் நுழைந்து கட்டிலில் படுத்தான்.

காலையில் எட்டு மணிக்குக் குமார் கதவைத் தட்டிய போதுதான் விழித்தான் ரங்கமணி. கதவைத் திறந்த போது குமார் சிரித்துக் கொண்டு நின்றான்.

"எவ்வளவு நேரமாகத் தட்டினேன். கும்பகர்ணன் உங்களைத்தான் வாரிசாக நியமித்து விட்டான் போலிருக்கிறது" என்றான்.

"ஏன், மணி எட்டுதானே ஆகிறது?"

"எட்டுதான். ஆனால் விடிந்து இரண்டு மணி நேரத்துக்கு மேலாகி விட்டதே, சார்!" என்றான் குமார்.

"நேற்று இரவு வெகு நேரம் தூங்கவில்லை" என்று தன் தூக்கத்துக்குச் சமாதானம் கூறிக் கொண்டான் ரங்கமணி.

அன்று முழுதும் ரங்கமணி வீட்டிலேயேதான் இருந்தான். சாப்பாட்டு நேரத்தில் மட்டும் குமார் சாப்பாடு கொண்டு வந்து பரிமாறி விட்டுப் போய்விட்டான். ரங்கமணி பொழுது போகாமல் திணறினான். அவனுடைய பார்வையில் சர்தாரின் மகள் தென்படவேயில்லை. மாலையில் கடைத்தெருப் பக்கம் சுற்றினான். ஒவ்வொரு தெருவிலும் முக்கியமான இடத்தில் அன்று மாலை நடைபெற விருந்த பொதுக்கூட்டத்தைப் பற்றிய விளம்பரம் இருந்தது. மீனாட்சிபுரம் மைதானத்தில் நடைபெறும் காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் குமாரி திரிவேணி பேசுவார்கள் என்ற செய்தி அந்த விளம்பரங்களிலிருந்தது. எங்கெல்லாமோ சுற்றிவிட்டு மாலை ஏழு மணி அளவில் மீனாட்சிபுரம் மைதானத்துப் பக்கம் வந்தான். கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. பெட்ரோமாக்ஸ் விளக்குகளின் ஒளி இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. மேடையில் யாரோ ஒரு காங்கிரஸ்காரர் பேசிக் கொண்டிருந்தார். ரங்கமணி ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்று பேச்சைக் கவனித்தான். கதர்ச் சட்டைக்காரர் பேசிமுடித்ததும் கூட்டத்திலிருந்து, "திரிவேணி பேசட்டும்" என்று பலர் கத்தினார்கள். சிறிது நேரத்தில் மேடையில் ஓர் இளம் பெண் தோன்றினாள். கூட்டம் ஆரவாரம் செய்தது. ரங்கமணி கூர்ந்து பார்த்தான். திகைத்து விட்டான். சர்தார் சொக்கலிங்கம்பிள்ளையின் மகள்தான் மேடையில் 'மைக்' முன்னால் வந்து நின்றாள்!


"இவளுக்குப் பேசவும் தெரியுமா ?" என்று முனகினான், ரங்கமணி.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவன் இதைக் கேட்டு விட்டு, "இந்த ஊருக்கு நீங்கள் புதிதா?" என்று கேட்டான். ரங்கமணி தலையை அசைத்தான்.

"திரிவேணியின் பேச்சே தனி பாணி. மழை பொழிந்தது போலிருக்கும். செத்த பிரேதம்கூட இவள் பேச்சைக் கேட்டால் விறு கொண்டு எழும். இவள் பேசுகிறாள் என்றால், சர்க்காருக்கு நடுக்கம்தான். பேச்சில் அனல் பறக்கும். வெள்ளைக்காரன் நாக்கைப் பிடுங்கிக் கொண்டுதான் சாக வேண்டும். ஒரு வருஷமாகத்தான் மேடையில் ஏறிப் பேசுகிறாள். ஒரு வருஷத்துக்குள் எவ்வளவு பிரமாதமாகப் பேசத் தெரிந்து கொண்டு விட்டாள். இப்போது பேசுவாள். கேட்டுப் பாருங்கள்" என்று உற்சாகமாகக் கூறினான் அந்த ரசிகன். மக்களின் உற்சாகத்தை ரங்கமணி வியப்போடு கவனித்தான்.

லக்மே டால்க் மட்டுமே அளிக்கும்

* நினைவில் நிலைக்கும் நாலு இனிய வாசனைகள்
* மிக மென்மையான பவுடர்



புதுமலர்ச்சி நீடிக்க ஒரு புதிய முறை!

தேர்ந்தெடுக்க வகைவகையான வாசனைகள், ஒவ்வொன்றுமே மென்மையான பவுடருடன் இணைந்து குலவும் மேன்மை - இவைதாம் லக்மே டால்க் சிறந்து விளங்குவதன் ரகசியம். அதன் மென்மையும், அதிகம் உறிஞ்சும் சக்தியும் அபாரம்...கடும் உழைப்பினூடே நாள் பூராவும் உங்களைக் குளுமையாகவும், புத்துணர்ச்சியுடனும் இருத்துகிறது!
லக்மே டால்க் – மிக மென்மையான பவுடர்... உங்களுக்கு ஏற்ற ஒரே டால்க்!

லக்மே டால்க்

லேவண்டர்
ஸாண்டல்
நிர்வாண்
வெட்டிவர்


ஹகோபா எம்ப்ராய்டரி
வேலைப்பாடமைந்த
துணிகள் பாங்கானவை,
பலதிறப் பயனுள்ளவை,
நீடித்துழைப்பவை
ஹகோபா

திரிவேணி பேசத் தொடங்கினான். அவனுடைய பேச்சின் தரமும், கம்பீரமும், மக்களை ஒருசில விநாடிகளில் பேச்சால் கவர்ந்துவிடும் திறமையும் ரங்கமணியைத் திகைப்பில் ஆழ்த்தி விட்டன. பதினாயிரம் பேர்கள் கூடியிருந்தார்கள். அத்தனை பேரும் அமைதியாக இருந்து அவன் பேச்சை ரசித்துக் கொண்டிருந்தார்கள். திடீர் திடீரென்று கைதட்டலும், ஆரவாரமும் கிளம்பின. இளம் ரத்தங்கள் அவனுடைய பேச்சால் கொதித்தன. ரங்கமணிகூட அவனுடைய பேச்சில் ஈடுபட்டுத் தன்னையும் மறந்து கைதட்டினான்.

அவன் பேசி முடித்ததும் கூட்டம் கலையத் தொடங்கியது. மணி ஒன்பதாகி விட்டது. ரங்கமணி வீடு நோக்கி நடந்தான். அப்போதுதான், தனக்காகக் குமார் சாப்பாட்டை வைத்துக் கொண்டு காத்திருப்பான் என்ற நினைவு வந்தது. வேகமாக நடந்தான். வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது குமாரைக் காணவில்லை. வாசலில் அத்தை நின்று கொண்டிருந்தாள்.

''உனக்காகக் குமார் காத்திருந்தான். இப்போதுதான் வீட்டுக்குப் போனான். சாப்பாட்டை அறைக்குள் வைத்திருக்கிறான்'' என்றாள் அத்தை.

''மன்னிக்க வேண்டும். நேரமாகி விட்டது'' என்று கூறிக் கொண்டே நிமிர்ந்து அத்தையைப் பார்த்தான்.

அவளுக்கு நாற்பத்தைந்து வயது இருக்கும். அதற்குள் தலை முழுதும் நரைத்து விட்டது. நெற்றியில் திருநீறு பளிச்சென்று அலங்கரித்தது. முகத்தில் சாந்தம் நிலவியது. கண்களில் கருணை ததும்பியது. அவளைக் கண்டதும் ரங்கமணியின் மனத்தில் ஒருவித பாசம் ஊறியது. தாயில்லாமல் வளர்ந்து விட்ட அவனுக்கு அவள் தாயாகத் தோன்றினாளோ என்னவோ! அவளைப் பார்த்தபோது கையெடுத்துக் கும்பிட வேண்டும் என்ற உணர்வு அவனுக்குத் தோன்றியது. ''தம்பி, சாதம் போட்டுமா?'' என்று கேட்டாள் அத்தை.


''வேண்டாம், வேண்டாம். நேரமாகி விட்டதால் எனக்குப் பசி மந்தித்துவிட்டது'' என்று கூறி, பக்தியோடு அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

''சாப்பிடாமலா படுத்துக் கொள்வாய்? உடம்பு கெட்டுவிடும். நான் பரிமாறுகிறேன். கொஞ்சமாவது சாப்பிடு'' என்றாள் அத்தை.

''இது எனக்குப் பழக்கந்தான். பசியில்லை'' என்று மறுத்து விட்டான் ரங்கமணி. அத்தை வீட்டுக்குள் போய் விட்டாள்.

உடைகளை மாற்றி விட்டு விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான். மறுநாள், அதிகாலையிலேயே விழித்து விட்டான். வராந்தாவில் வந்து நின்று கொண்டிருந்தான். திரிவேணி அங்கு வந்தான். ''நீங்கள் இரவு சாப்பிடவில்லையாமே. குமார் உங்களுக்காகக் காத்திருந்தானாம்'' என்றான் திரிவேணி.

''ஆமாம். நேற்று மீனாட்சிபுரத்தில் நடந்த கூட்டத்துக்குப் போய் இருந்தேன். அதனால்தான் வர நேரமாகி விட்டது'' என்றான் ரங்கமணி.



இந்தக் குழந்தைக்கு ராஜாஜி மண்டபத்தில் பிறந்த நாள் கொண்டாட்டம்!

பிரிட்டனில் பிறந்த இந்தக் குழந்தைக்குச் சென்னை ராஜாஜி மண்டபத்தில் பிறந்த நாள் கொண்டாடினார்கள். பிலிப் கோமகன் அருகிலுள்ள தள்ளு வண்டியிலுள்ள இந்தக் குழந்தை யார் என்று உங்களால் தெரிந்து கொள்ள முடிகிறதா? முடியாவிட்டால் 35-ம் பக்கம் புரட்டிப் பாருங்கள் உங்கள் பிரச்னை தீர்ந்துவிடும்.

"ஓ...நீங்களும் வந்திருந்தீர்களா?" என்று அவன் கேட்டபோது அவள் முகம் மலர்ந்தது.

"கூட்டம் முடியும் வரையில் இருந்தீர்களா?" என்று ஆவலோடு கேட்டாள்.

"இருந்தேன். குமாரி திரிவேணியின் பேச்சுக்குக் கைதட்டி விட்டும் வந்தேன்" என்றான் ரங்கமணி. திரிவேணியின் முகத்தில் நாணம் படர்ந்தது.

"உங்கள் அபிப்பிராயம் என்ன?" — தரையைப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"எதைப் பற்றி? உங்களைப் பற்றியா, பேச்சைப் பற்றியா?" என்று ரங்கமணி கேட்டபோது, 'களுக்'கென்று சிரித்தாள். "இரண்டையும் பற்றித்தான்" என்றாள்.

"இவ்வளவு பேசுவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லையே!" என்றான் ரங்கமணி.

"கூட்டத்துக்குத் தகுந்தபடி பேச வேண்டியிருக்கிறதே."

"நான் அதைக் குறிப்பிடவில்லை. இப்போது என்னோடு பேசுவதைக் குறிப்பிட்டேன்."

திரிவேணி திகைப்புடன் அவனைப் பார்த்தாள். "உங்களோடு என்ன பேசிவிட்டேன்?"

"பேசவே மாட்டீர்கள் என்று நினைத்தேன்...."

"ஏன்?"

"மூந்தாநாள் மாலை என்னோடு பேசினீர்கள். பிறகு, இப்போதுதான் வந்து பேசுகிறீர்கள்!"

"ஓ.... அதுவா .... மதியாதாருடன் நான் பேசுவது கிடையாது" என்றாள் திரிவேணி 'வெடுக்'கென்று. ரங்கமணி திடுக்கிட்டான். அவளையே திகைப்புடன் பார்த்தான். "மதுரை ஸ்டேஷனில் என்னோடு நின்று கொடி கட்டி விட்டுப் போகும்போது, நான் கையசைத்து விடை கொடுத்ததை லட்சியம் செய்யாமல் தானே போனீர்கள்?"

"அதற்காகத்தானா இந்தப் பழி தீர்ப்பு? அப்போது உங்கள் மீது எனக்குக் கோபம்."

"ஏன்?"

"இப்படிக் கொடி கட்டுவதும், தண்டவாளத்தில் உட்காருவதும் எனக்குப் பிடிக்காது. நேற்றுக் கூட்டத்தில் நீங்கள் பேசியது போல் மதுரை பிளாட்பாரத்தில் பேசியிருந்தாலாவது பிரயோசனம் இருந்திருக்கும். அந்த எரிச்சலால்தான் உங்களைக் கவனிக்காமலேயே அன்று வந்து விட்டேன். இப்போது கோபம் இல்லையே?"

"நீங்கள் கர்வம் பிடித்தவர் என்றுதான் முடிவு கட்டினேன்."

"இருக்கட்டுமே; கர்வம் கொள்ளக்கூடிய அளவுக்கு ஏதேனும் ஓர் அம்சம் என்னிடம் இருந்தாலே போதும்" என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டே.

"என்ன இருந்தாலும் நாமெல்லாம் ஒரே குடும்பந்தான்" என்றாள் திரிவேணி.

"ஒரே குடும்பமா....?"

"ஆமாம்" என்று கூறிவிட்டுக் கன்னத்தில் கைவைத்துக் கொண்டு கதவின் மீது சாய்ந்து நின்றாள். அவள் நின்ற விதம் வேடிக்கையாக இருந்தது.

"நாம் முன்பே உறவா?" ஒன்றும் புரியாமல் கேட்டான் ரங்கமணி. அவள் கலகல வென்று சிரித்தாள்.

"சுதந்திர இயக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மகாத்மா காந்தியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தாமே, நாம்?"

"ஓ, அந்த வழியிலா? அப்படியானாலும் என் குடும்பம் வேறு" என்றான் ரங்கமணி.

"அப்படியென்றால்?"

"சுபாஷ் போஸ், திலகர், சிதம்பரம் பிள்ளை ஆகியவர்களின் குடும்பத்தில் உள்ளவன் நான். முக்கியமாக பகத்சிங்கின் பாதையில் செல்பவன்."

"அந்தப் பாதையா? அதனால்தான் அப்பா உங்களை இங்கே அனுப்பி வைத்தாரா? அப்படியானால் உங்கள் புரட்சியை அப்பா வரும் வரை இந்த அறைக்குள்ளேயே நடத்துங்கள்" என்று கூறிச் சிரித்துக் கொண்டே வீட்டுக்குள் ஓடிவிட்டாள் திரிவேணி.

இரண்டு நாட்கள் பேசாமலேயே இருந்தாள். இப்போது, கொஞ்ச நேரத்துக்குள் எவ்வளவு பேசி விட்டாள்! அந்தப் பெண்ணின் குறும்பும், கலகலப்பும் அவனுடைய அயர்வை நீக்கி விட்டன.

மதுரை ஸ்டேஷனில் எஞ்சினில் கொடி கட்டிய தீரப் பெண்ணா இவள்! நம்பவே முடியவில்லையே! அந்தத் துணிவுக்கும், ஆற்றலுக்கும் இப்போது ஒரு குறும்புக்காரக் குழந்தையைப் போல் விஷமத்தனத்தோடு சிரித்து நிற்கும் இந்தச் செயலுக்கும் எவ்வளவு வித்தியாசம்!

அன்று மாலை ரங்கமணி வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்த போது திரிவேணி கையில் காப்பியுடன் அறைக்குள் வந்தாள்.

"எங்கே புறப்பட்டு விட்டீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே காப்பித் தம்ளரை அவனிடம் நீட்டினாள்.

"ஏன் குமார் இல்லையா?" என்று ரங்கமணி கேட்டான்.

"எங்கோ வேலையாக அத்தை அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் எங்கே புறப்படுகிறீர்கள்?"

"பொழுது போகவில்லை; பேச்சுத் துணைக்கும் ஆள் இல்லை. ஊரையாவது சுற்றுவோமே என்று கிளம்பினேன்."

"சுற்றிப் பார்க்க இந்த ஊரில் என்ன இருக்கிறது?"

"எனக்குப் பழக்கப்பட்ட ஊர்தான்."

"எப்போது திரும்புவீர்கள்?"

"எப்போது வரவேண்டும்?"

"சீக்கிரமாக வந்து சாப்பிடுங்கள். உங்களோடுதான் சாப்பிடப் போகிறேன். உங்களுக்காக நான் சாப்பிடாமலே காத்துக் கொண்டிருப்பேன்."

"எனக்காக உண்ணாவிரதம் இருப்பானேன்? ஓ, மறந்துவிட்டேனே. உண்ணாவிரதம் இருப்பதுதானே உங்கள் பொழுது போக்கு. பட்டினி கிடந்தே வெள்ளைக்காரனை விரட்டி விடலாம் என்று கனவு காணும் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தானே நீங்கள்! ஆனால் எனக்காக யாரும் அந்தப் பைத்தியக்காரத்தனத்தில் இறங்க வேண்டியிராது. இருட்டுவதற்குள் வந்து நிற்கிறேன், போதுமா?"

திரிவேணி சிரித்துக் கொண்டே தலையை அசைத்தாள். ரங்கமணி வெளியே சென்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இம் மாதிரி அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்:



★ கேசம் குறைதல்
★ மெழுக்கென்ற, துவண்ட ரோமம்



இளமையில் வழுக்கை
இந் நிலை ஏற்படுவதைப் பெரும்பாலும் தடுத்திருக்க முடியும்.

கேசம் குறைதல், ரோம உதிர்வு ஆகியவை உங்களைப் பாதித்தால் இன்றே ப்யூர் சில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்குங்கள். உங்கள் ரோமத்திற்கு ஆக்கம் தரும் பதினெட்டு அமினோ-அமிலங்கள் யாவும் அடர்வான நிலையிலே செறிந்துள்ளது ப்யூர் சில்விக்ரின். உச்சந் தலையிலே அழுத்தித் தேய்த்தால் ப்யூர் சில்விக்ரின் மயிர்க்கால்களை ஊடுருவி, நீடித்த நலனைக் கேசத்திற்கு மீட்டுக் கொடுக்கத் தேவைப்படும் இயற்கையான ஊட்டத்தை வழங்குகிறது.

ஆல் அபௌட் ஹேர் (ALL ABOUT HAIR) என்ற, படங்கள் கொண்ட இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினீர்களானால் இவ் விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1, சில்விக்ரின் அட்வைசரி சர்விஸ், தபால் பை 727, பம்பாய் 1.



ப்யூர் சில்விக்ரின்
கேசக் கோளாறுகளின் சிகிச்சைக்கான நேராக தீவிர குணம் செறிந்த தயாரிப்பு. ஒரு மாத சிகிச்சைக்குப் போதுமானது.

சில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்
நாள் முழுதும் உங்கள் கேசத்தைப் பாங்காகப் படியவைத்திருக்கும். கேசக்கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கப் போதுமான ப்யூர் சில்விக்ரின் அடங்கியது



Silvikrin

சில்விக்ரின் – கேச ஆரோக்கியத்திற்கான வழி

SP/1/P/3/66

ளுன். அவன் தெரு முனையில் சென்று மறையும் வரை வாசலில் நின்றே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு வாசற் கதவைத் தாளிட்டு விட்டு முன்பக்கத்து அறைக்குள் நுழைந்தாள். அறைக்குள் ரங்கமணியின் பெட்டியும் படுக்கையும் தாறுமாருகக் கிடந்தன. களைந்து போட்ட வேஷ்டியும் சட்டையும் அறைக்குள் சிதறிக் கிடந்தன. திறந்திருந்த பெட்டிக்குள் தந்தச் சிலுவை கிடப்பதைப் பார்த்தாள். அதைக் கையிலெடுத்து அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்துவிட்டு மீண்டும் பெட்டிக்குள் போட்டுப் பெட்டியைப் பூட்டினுள். "அதிசயமான ஜன்மம்!" என்று முனகிக் கொண்டே பெட்டியையும், படுக்கையையும் ஒழுங்காக எடுத்து வைத்தாள்!

ரங்கமணியை மதுரையில் சந்தித்த சம்பவம் அவள் நினைவில் நிழலாடியது. போலீஸ்காரர்களை மறித்துப் பயமுறுத்திய காட்சி, அவள் இதயத்தில் பச்சையாகப் பதிந்திருந்தது. அந்தச் சம்பவத்தையே மீண்டும் மீண்டும் நினைவில் கொண்டு வந்து, மனம் அசை போட்டுக் கொண்டிருந்தது.

அது ஒரு புதுமையான அநுபவம். அந்தச் சந்திப்பு எதிர்பாராமல்தான் நடந்தது. ஆனுல் அதில்தான் எத்தனை உணர்ச்சிப் பின்னல்கள்! எங்கிருந்தோ திடீரென்று வந்தான். கூட இருந்து உதவினுன். பிறகு திரும்பிப் பாராமலே போய்விட்டான். எவ்வளவு அகம்பாவம்......!

திரிவேணியின் சிந்தனையைக் கதவு தட்டும் சத்தம் கலைத்தது. மணி ஏழு இருக்கும். நன்ருக இருட்டி விட்டது. அறைக்குள் விளக்கைப் பொருத்தாமலேயே சிந்தனையில் லயித்து இருந்து விட்டாள். மின்சார விளக்கை ஏற்றிவிட்டு வாசற் கதவைத் திறந்தாள். வாசலில் ரங்கமணி நின்று கொண்டிருந்தான்.

இரவு இருவரும் ஒன்ருகவே அமர்ந்து சாப்பிட்டார்கள். அத்தை பரிமாறினுள். அப்போது திரிவேணி கேட்டாள்:

"எங்கே போயிருந்தீர்கள்?"

"கொக்கிரகுளம் ஆற்று மணலில் உட்கார்ந்திருந்தேன். வரும் வழியில் இந்து கல்லூரியில் ஏதோ ஒரு கூட்டம் நடந்தது. பாரதியாருக்குச் சிலை வைக்க வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள். பாவம் பாரதியார்!" என்ருன்.

"ஏன், பாரதியார் மீது இவ்வளவு பரிதாபம்?"

"கல்லாக்கி நிறுத்தி வைக்க நினைத்துவிட்டார்கள் அல்லவா? இனி அவர் சாதித்தவைகளை மறந்துவிட வேண்டியதுதான்!"

"ஏன் அப்படி?"

"நம் நாட்டுப் பண்பே அதுதானே! இருக்கும் போது சாக விடுவார்கள். செத்த பிறகு சிலை வைப்பார்கள். சிலை கடவுளாகி விடும். கடவுளாகிவிட்ட பிறகு, அவர் மனிதனாக இருந்த போது செய்தவைகளைப் பற்றி மக்களுக்கு என்ன கவலை?"

"அது சரி, நீங்கள் பேசும் ரசனையில் சாப்பிடக்கூட மறந்து உட்கார்ந்திருக்கிறீர்களே!" என்ருள் திரிவேணி சிரித்துக் கொண்டே.

"கூச்சமில்லாமல் சாப்பிடப்பா!" என்ருள் அத்தை பரிமாறிக் கொண்டே. ரங்கமணியின் உள்ளம் நெகிழ்ந்தது.

"சாப்பாட்டில் எனக்குக் கூச்சமே கிடையாதம்மா!" என்ருன் அவன்.

அன்று அத்தை பரிமாறினதால் கொஞ்சம் அதிகமாகவே சாப்பிட்டு விட்டான். அவனுடைய வயிரோடு மனமும் நிறைந்து நிக்ருமுக்காடியது. இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு, அவனும் திரிவேணியும் வராந்தாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். நிலவொளி எங்கும் பரவிக் கிடந்தது. திரிவேணி கேட்டாள்:

குழந்தை யார்? - விடை



பிலிப் கோமகனுக்கு அருகிலுள்ள தள்ளு வண்டியில் உள்ள குழந்தை இளவரசர் ஆண்ட்ருதான். இந்தக் குழந்தை பிறந்து முதல் பிறந்த நாள் வைபவமும் எலிஸபெத் ராணி சென்னை விஜயமும் 1961 பிப்ரவரி 19ந் தேதியா யிருக்கவே அன்று ராஜாஜி மண்டபத்தில் பிறந்த நாள் விருந்து நடந்தது. பிலிப் கோமகனுக்கும் அரசி எலிஸபெத்துக்கும் 'முதல் குழந்தை சார்லஸ் பிறந்தது 1948ல். இரண்டாவது இளவரசி ஆன் 1950ம் ஆண்டிலும் மூன்ருவதாக இளவரசன் ஆண்ட்ரு 1960ம் வருஷத்திலும் பிறந்தனர். பதினறு வயது நிரம்பிய ஆன்தான் பிரிட்டிஷ் அரச பரம்பரையிலேயே நவநாகரிகத் தோற்றம் கொண்டவர் என்று லண்டன் பத்திரிகைகள் கூறுகின்றன. விடுமுறை முடிந்து படிப்பைத் தொடரத் தமது பள்ளிக்குத் திரும்பிய ஆன் நவநாகரிக மோஸ்தரில் முழங்கால் தெரிகிற மாதிரியாக உடையணிந்திருந்தாராம்!

"அன்று கொடி கட்டும் போது அதை உருப்படாத வேலை என்றீர்களே, ஏன்?"

"பின்னே என்ன? எஞ்சினில் மூவர்ணக் கொடி பறந்து விட்டால் உடனே இங்கிலீஷ்காரன் தன் கொடியைச் சுருட்டி மடக்கி விடுவான் என்ற எண்ணமா? இதெல்லாம், அந்த வார்தாக் கிழவரின் பத்தாம் பசலி யோசனைகளில் ஒன்று" என்றான் ரங்கமணி.

"நம்முடைய எதிர்ப்பை இப்படிக் காண்பித்தால்தானே......"

"இப்படி நீங்கள் கொடியைக் கட்டி, பட்டினி கிடந்து கிடந்து உங்கள் எதிர்ப்பைக் காண்பித்து அதை வெள்ளைக்காரன் உணர்ந்து மூட்டை கட்டுவதற்குள் இன்னொரு முந்நூறு வருஷங்கள் ஆகிவிடும்."

"மகாத்மாவின் சத்தியாக்கிரகத்துக்குச் சக்தியில்லை என்கிறீர்களா? இந்தக் கொடியும் ஆர்ப்பாட்டங்களும் மக்களின் உணர்ச்சியைப் பொங்க வைக்காது என்கிறீர்களா?"

"சக்தியற்றவர்கள் செய்யக்கூடிய காரியம் தான் சத்தியாக்கிரகம். அவர்களுடைய சத்தியாக்கிரகத்துக்கு மாத்திரம் எப்படிச் சக்தி வந்து விடும்? வெள்ளைக்காரன் இந்த ராட்டினத்துக்கும், மூவர்ணக் கொடிக்கும், உண்ணாவிரதத்துக்கும் பயந்து ஓடப் போவதில்லை. ஒரு வேளை அவன் ஓடினால், தன்னால் ஆன இயலாமல் ஓடுவான்; இல்லையென்றால் நாம் நீட்டும் கத்திக்குப் பயந்து ஓடுவான். அவனை விரட்டப் பட்டினி கிடப்பது என்பது குளத்துடன் கோபித்துக் கொண்டு கால் கழுவ மறுப்பவன் கதை போலத்தான்."

"உங்களுக்குக் காந்தியிடம் நம்பிக்கையில்லை" என்றாள் திரிவேணி.

"கையாலாகாதவர்களுக்கும், கோழைகளுக்கும்தான் அவரிடம் நம்பிக்கை ஏற்படும்."

"அவரை நம்பும் நம் தலைவர்கள் அனைவருமே கையாலாகாதவர்களா? கோழைகளா?" என்றாள் திரிவேணி படபடப்புடன்.

"கொள்கைக்காகக் காந்தியைப் பின்பற்றுகிறார்கள். ஆனால், உள்ளத்தில், அகிம்சைத் தத்துவத்தின் பலவீனத்தை உணராமலிருக்க மாட்டார்கள். இந்த விஷயத்தில் சுபாஷ்சந்திரபோஸ் எவ்வளவோ, உயர்ந்து விட்டார். தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றை, காந்தி கூறுகிறார் என்பதற்காக ஏற்றுத் தம் ஆத்மாவை ஏமாற்ற நினைக்கவில்லை. தன்னம்பிக்கையும் துணிவும் உள்ளவன் வார்தாவின் திசையில் செல்ல மாட்டான்" என்றான் ரங்கமணி மிகுந்த உணர்ச்சியுடன்.

"நீங்களெல்லாம் சேணம் போட்ட குதிரைகள்தாம். உங்கள் பாதைதாம் கண்ணுக்குத் தெரியும். மற்றப் பாதைகளைப் பிடிவாதமாகத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டீர்கள்" என்றாள் திரிவேணி. ரங்கமணி கொட்டாவி விட்டான்.

"பாக்கிப் புரட்சியை நாளை வைத்துக் கொள்ளுங்கள். இப்போது தூங்கப் போங்கள்" என்று கூறிவிட்டு எழுந்தாள் திரிவேணி.

"சரி, நீங்களும் கனவில் சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருங்கள். காலையில் சந்திக்கலாம்" என்றான் ரங்கமணி.

"உங்களைவிட நான் வயதில் குறைந்தவள் தான். நீ என்றே கூப்பிடலாம். அநாவசியமாக நீங்கள் என்று நீட்டி முழக்க வேண்டாம்" என்றாள்.

"சரி, உங்கள் இஷ்டம்."

"என்ன.....?"

"ஓ.... மன்னிக்க வேண்டும். உன் இஷ்டம்..." என்றான். இருவரும் சிரித்தனர்.

ரங்கமணி தன் அறைக்குள் நுழைந்தான்.

"ஐயா, புரட்சிக்காரரே, பயமாயிருந்தால் கதவைத் தாழிட்டுக் கொள்ளுங்கள்" என்றாள் திரிவேணி புன்சிரிப்புடன்.

"அகிம்சாவாதிகளுக்குப் பயந்து தாழிட்டுக் கொள்ள வேண்டியதுதான்" என்று கூறிக் கொண்டே கதவை அடைத்து உள்ளே தாழிட்டுக் கொண்டான். திரிவேணி 'களுக்'கென்று சிரித்தாள்.

சிறிது நேரத்தில் ரங்கமணியின் அறையில் விளக்கு எரியத் தொடங்கியது. அதன் ஒளி சன்னலின் வழியாக வீட்டுக்குள் தெரிந்தது. கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். திரிவேணியைக் கூப்பிட நினைத்தான். இலேசாக இருமினான். திரிவேணி சிரித்துக்கொண்டே வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தாள்.

"திரிவேணி என்றே கூப்பிடலாம். வீணாகத் தொண்டை வறண்டு போகுமாறு இருமிச் சிரமப்பட வேண்டாம்" என்றாள். ரங்கமணி சிரித்துக் கொண்டான்.

"புரட்சி வீரருக்குத் தூக்கம் வரவில்லையா?" திரிவேணி கேட்டாள்.

"நீ சொன்ன மாதிரியே எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது" என்றான் ரங்கமணி.

"ஏன்?"

"இங்கே வந்து பார்!" என்று கூறித் திரிவேணியை அழைத்துக் கொண்டு தன் அறைக்குள் சென்று மேல் பக்கத்துச் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த மகாத்மா காந்தியின் நான்கு படங்களைச் சுட்டிக்காட்டினான்.

"என்னைப் பார்த்துப் பயமுறுத்துவது போலிருக்கிறது இந்தப் படங்கள். ஒன்று போதாதென்று நான்கு படங்கள்!"

"மோகனப் புன்னகையைக் கண்டா பயம்?"

"ஆமாம், அவர் சிரிப்பில் என் கொள்கை கரைந்து விடுமோ என்ற பயந்தான்."


"உங்கள் மீதே உங்களுக்கு நம்பிக்கையில்லை."

"நெருப்பு சக்தி வாய்ந்ததுதான். ஆனால் தண்ணீருக்கு அது பயப்படத்தானே வேண்டியிருக்கிறது" என்று கூறிக் கொண்டே காந்தியடிகளின் படங்களைக் கழற்றித் திரிவேணியின் கையில் திணித்தான்.

"இவைகளை உன் பக்கத்திலேயே தொங்கவிட்டுக் கொள்" என்றான். படங்களை வாங்கிக் கொண்டு சிரித்தவாறே அந்த அறையை விட்டு வெளியே நடந்தாள் திரிவேணி. அறைக் கதவை இழுத்துச் சாத்தித் தாழிட்டான் ரங்கமணி.

"தூம், எனக்கா, காந்திக்கா?" என்று கேட்டாள் திரிவேணி வெளியே நின்று.

"இப்போது உங்கள் இரண்டு பேருக்குந் தான்" என்றான் ரங்கமணி. பிறகு விளக்கை அணைத்தான். திரிவேணி சிரித்துக் கொண்டே போவது அவனுக்குக் கேட்டது. "நல்லபுரட்சி, நல்லகொள்கை!" என்று முணுமுணுத்தபடியே வீட்டுக்குள் சென்றாள் திரிவேணி. (தொடரும்)


எல்லாமே கருகிச்
சாம்பலாகிவிட்டது
கவனக் குறைவால், அணைக்கப்படாமல்
தூக்கி எறியப்பட்ட ஒரு சிகரெட்
துண்டு அனைத்தையும் நாசமாக்கி
விட்டது. வருடக் கணக்காகக் கட்டிக்
காத்து வளர்க்கப்பட்ட வாணிகம்
சாம்பலாகக் காட்சியளிக்கிறது.
உங்களுக்கும் இதுபோன்ற நிலை
ஏற்படலாம். இத்தகைய இடர் மற்றும்
இன்னல்களினின்றும் உங்களை நீங்கள்
காத்துக்கொள்ள முடியும். எல்.ஐ.சி.,
நெருப்பினால் ஏற்படும் இழப்பிற்குப்
போதுமான ஈடுசெய்து பாதுகாப்பளிக்
கிறது. விபத்து, கப்பல் மற்றும்
மோட்டார் விபத்து ஆகியவற்றிற்கும்
இன்சூரன்சு வசதி கிடைக்கிறது.
எல்லா வகையான
இன்சூரன்சுகளுக்கும்
எல்.ஐ.சி.

அத்தியாயம் 5

மயங்கிய இளவரசி!

'இளவரசியின் உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறது' என்று சொல்லி அழகாடியை நிலவறைக்குள்ளே அனுப்பிய ஆதனார் உண்மையிலேயே மனம் கலங்கினார்! அவர் எதிர்பார்த்தபடி மயக்க நிலை திருந்தவில்லை!

அன்று முழுதும் அறைவை அம்மியிலே ஏதேதோ பச்சிலைகளையெல்லாம் அரைத்து நெற்றியிலே தடவினார். சிக்கி நின்ற பற்களை அகற்றி வைத்திய முறையிலே தேன் மருந்துகளை நாக்கிலே தடவிப் பார்த்தார்! எதிலும் பயனில்லை!

இளம் நன்னிக்கு மயக்கம் தெளியவில்லை. உடற் கூண்டுக்குள்ளிருந்து உயிர்ப் பறவை சிறகை விரித்துப் பறந்துவிடுமோ என்று அஞ்சக் கூடிய நிலையிலே இருந்தாள் இளவரசி.

ஆதனார் நெற்றியைப் பிசைந்தார். கண்களை மூடி ஆழ்ந்து சிந்தனை செய்தார்.



வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

நாடியின் துடிப்பை அடிக்கடி சோதித்துப் பார்த்தார். இடையிடையே ஒப்பற்ற எழிலோடு கூடிய அந்த அழகு முகத்தைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டார். மலை கலங்கினாலும் நிலை கலங்காத அந்த மற்போர் ஆசிரியரின் உள்ளத்திலுமே கலக்கம் ஏற்பட்டது.

சித்தர்களின் மருந்து முறையிலே மிகவும் நுட்பமான ஒரு புகை மருந்து உண்டு. குடுக்கையிலே ஒரு மருந்துக்காற்றை அவசரமான வேளைகளில் கையாளுவதற்காக அடைத்து வைத்திருப்பார்கள். அந்தக் குடுக்கையை எடுத்து மருந்துப் புகையை நாசியிலே செலுத்தினார் ஆதனார். அளவோடு மெதுவாக இழை யிழையாகச் செலுத்தினார். குவளையிலே தண்ணீர் எடுத்துப் பக்கத்திலே வைத்துக் கொண்டார்.

இளவரசியின் கண்கள் திறந்தன. அங்குமிங்கும் விழிகள் ஓடின. 'தண்ணீர்' என்று மெல்லிய குரல் வந்தது. அருகிலே ஆயத்தமாக இருந்த குவளையிலே துணியை முக்கி எடுத்து வாயிலே பிழிந்தார். இரண்டு மூன்று மடக்குத் தண்ணீர் உள்ளே இறங்கியது. இது கண்டு, ''ஆண்டவனே!'' என்று சொல்லிக் கைகளைக் கூப்பி நிம்மதியை வெளியிட்டவாறு நாடியைப்



பிடித்துத் துடிப்பின் தன்மையைச் சோதித்தார் ஆதனூர். ஆனால் அடுத்த விநாடி மறுபடியும் இமைகள் மூடிக் கொண்டன இளவரசிக்கு!

''இளவரசி!'' என்று கூப்பிட்டார் ஆதனூர். நன்னி கண்களைத் திறந்தாள்.

''நான் எங்கே இருக்கிறேன்? கோபத்தோடு என்னைத் தனியாக விட்டு விட்டுச் சென்றாரே தந்தை. அவர் எங்கே?'' என்று கேட்டாள் இளவரசி.

அப்படி அவள் கேட்கும்போதே, தந்தைக்கும் அவளுக்கும் நடந்த கடுமையான சொற் பிணக்கு அவளுடைய விழிகளின் கலங்கிய நினைவு அலைக்களிலே ஒரு விநாடி மிதந்தது.

''இளவரசி! நீங்கள் இப்போது உங்கள் துன்பங்களிலிருந்து விடுபட்டு வந்து விட்டீர்கள். இனி நீங்கள் உங்களுடைய துயரங்களை மறந்து விடலாம். இனி நீங்கள்—''

ஆதனார் அந்தச் சொற்களை முழுவதும் முடிக்கவில்லை. மறுபடியும் இமைகளின் மீது மயக்கம் தவழ்ந்தது. விழிகள் செருகிக் கொண்டன. இளவரசி நன்னி மறுபடியும் நினைவு இழந்தாள்.

"அழுலாடி!" என்று ஆதனார் தமது மாணவனைப் பரிவோடு கூப்பிட்டார் அருகிலே.

"அழுலாடி! மீண்டும் மயக்கம் வந்து விட்டது அரச குமாரிக்கு! இனி இது தெளிவது என்பது என் கையில் இல்லை! என்ன செய்வது!"

இவ்வாறு மனச் சோர்வோடு கூறினார் ஆதனார்.

"அண்ணலே! என்ன இப்படிச் சொல்லி விட்டீர்கள்!" என்று மனம் சிதறிய குரலிலே கேட்டான் அழுலாடி.

"தம்பி, உயிருக்கு இப்போது ஏதும் கேடு இல்லை. அந்த அளவுக்கு உறுதி சொல்லலாம். ஆனால் குமாரியின் மனம் அதிர்ந்து போயிருக்கிறது. நீ அரசப் பள்ளியறையிலே புகுவதற்கு முன்பே, இளவரசியின் உள்ளம் அதிரும் படியாக ஏதோ வாக்குவாதம் நடந்திருக்க வேண்டும், தகப்பனுக்கும் மகளுக்கும் இடையிலே! மிஞிலியை மாலையிடும்படி கடுமையாக வற்புறுத்தி யிருப்பான் அந்தக் கொடுங்கோலன்! அந்தத் துயரம் இதயத்தை வலிமையாகத் தாக்கி யிருக்க வேண்டும். இதயம் ஒடிந்துபோய்ப் படுக்கையிலே துவண்டிருக்க வேண்டும் இளவரசி! பிறகு அந்த ஒடிந்து போன மெல்லிய இதயத்திலே நீ செலுத்திய நச்சுப் புகை புகுந்து கேடு விளைத்திருக்கிறது. என்ன செய்ய! நம்மிடமிடமுள்ள எல்லா முக்கிய மருந்துகளையும் பயன்படுத்தியாயிற்று! எனக்கு இனி என்ன செய்வதென்று ஒன்றுமே தோன்றவில்லை. என்னுடைய அறிவுமே மயங்குகிறது. துயரத்தினால்!"

இவ்வாறு கூறி ஆதனார் நிலவறையின் சாய்மானத்திலே அமர்ந்தார். பிறகு சொன்னார்:

"தம்பி, எனக்கு ஒரு எண்ணம் உதிக்கிறது. அப்படிச் செய்தால் தான் இளவரசியைப் பிழைக்க வைக்க முடியும். இல்லையென்றால், பொன்னனை ஒரு நல்லுயிரை இழந்து விடுவோம்! அது தவறு!"

ஆதனார் சாய்மானத்திலிருந்து எழுந்தார்.

"தம்பி, மயில் விசிறியினால் நீ இளவரசிக்குக் காற்று வீசிக்கொண்டு இங்கேயே அருகில் இரு. நான் சற்று நேரத்தில் திரும்ப வந்து விடுகிறேன்."

இப்படிச் சொல்லி விட்டு, அங்கிருந்து நகர்ந்து செல்ல முனைந்தார் ஆதனார். அழுலாடி ஒரே குழப்பத்தோடு அவரைப் பரிதாபமாக நோக்கினான்.

"தம்பி, நீ கலக்கமடையாதே. உயிருக்கு எத்தகைய கேடும் இப்போது இல்லை. அப்படி இருந்தால் நான் இந்த இடத்திலிருந்து நகருவேனா? நீ கவலைப்படாதே. இளவரசியை இன்றிரவே வேறு பெரிய சிகிச்சைக்காக இன்னொரு இடத்துக்கு எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை யெல்லாம் நான் உடனே செய்கிறேன். இதோ நொடியில் திரும்பி வந்து விடுவேன்."

இப்படிச் சொல்லிவிட்டு நிலவறையிலே தமது வைத்திய மாணவர்கள் இருவரையும் அருகில் அழைத்து அங்கேயே இருக்கும்படி கூறி விட்டு வெளியே வந்தார்.

நிலவறைக்கு வெளியே நாகமல்லனும் மற்ற மாணவர்களும் கூடியமர்ந்து ஏதோ பெரியதாக ஆயம் பேசிக் கொண்டிருந்தார்கள்! ஆசிரியரைக் கண்டதும் எல்லாரும் எழுந்து நின்றார்கள். நாகமல்லனுடைய கண்களை உற்று நோக்கினார் ஆதனார். நிலைமை புரிந்தது. மனத்துக்குள்ளே குமைந்த எண்ணங்கள் விழிகளிலே புகைந்தன. அதைப் புரிந்து கொண்ட ஆசிரியர் மாணவர்களிலே இரண்டு இளைஞர்களை மட்டும் தனியாக அழைத்தார். அழைத்து ஏதேதோ கட்டளைகளைச் சொன்னார். சொல்லி அந்த இருவரையும் அங்கிருந்து அனுப்பி வைத்து விட்டு நாகமல்லனுக்கு அருகிலே வந்தார்.

"தம்பி, என்ன இது? நீ இப்படியெல்லாம் பேசி உன்னுடைய துணைவர்களோடு சண்டை போடலாமா?" என்று பரிவோடு கேட்டார் நாகமல்லனை.

"துணைவனா? ஆசிரியர் பெருமானே! எனக்கு யார் துணைவன் என்கிறீர்கள்? தலைக்கு மேலே தூக்கித் தரையிலே கொண்டு அடிக்கப் போனானே, அவனா எனக்குத் துணைவன்? அந்த அரக்கனா என்னுடைய நண்பன்?"

இவ்வாறு கேட்டான் நாகமல்லன்.

"நாகமல்லா, என்ன பேசுகிறாய் நீ? அவன் உன்னைத் தூக்கிப் போடுவதற்கு முன்பு நீ என்ன செய்தாய்? அவனுடைய இதயத்தைத் தாக்கி விடச் வீசினாய். அவனுக்குச் சீற்றம் ஏற்படும்படி அவனைத் தாக்கி எறிந்து பேசினாய். அதை மறந்து விடாதே!

இன்னும் ஐந்து வருடங்களில்



தீப்பெட்டியின் விலை 25 பைசாவாகிவிடுமோ?

இன்று நாட்டில் நடப்பதென்ன?

கடந்த 5 வருடங்களில் விலைவாசிகள் எப்படி உயர்ந்துவந்திருக்கின்றன என்று பாருங்கள்:

● தீப்பெட்டிகள்	75%
● உணவு தானியங்கள்	50%
● மண்ணெண்ணெய்	28%
● சர்க்கரை	26%

கடந்த 5 வருடங்களில் விலைவாசிகள் சராசரி 50% உயர்ந்திருக்கின்றன.
அடுத்த 5 வருடங்களில் என்ன நடக்கும் என்று உங்களை நீங்களே கேட்டுப்பார்த்துக்கொள்ளுங்கள்.

இதற்கு நீங்கள் செய்யக்கூடியதுதான் என்ன? சுதந்திரா கட்சிக்கே வோட் செய்யுங்கள்.

சுதந்திரா கட்சி செய்யக்கூடியது என்ன?
ரூபாயின் மதிப்பை கண்ணியமாகவும், நிலையானதாகவும் செய்ய,

★ வீண் செலவுகளைக் குறைக்கும்.
★ தேசிய வளங்களை விரயமாக்கும் வீண் திட்டங்களை விட்டொழிக்கும்.
★ கரென்சி நோட்டுகளை அச்சடித்துக்கொண்டே போவதினால் விளையும் நாணய மதிப்பு வீழ்ச்சியை நிறுத்தும்.
★ மிதமிஞ்சிய சுங்கத் தீர்வைகளையும், இதர வரிகளையும் குறைக்கும்
★ நிலங்களிலும், ஆலைகளிலும் உற்பத்தியைப் பெருக்கும்.


அடுத்துவரும் பொதுத்தேர்தலில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

வோட் செய்வதற்கு முன் நன்றாக யோசனை செய்து இந்த வாய்ப்பை சரியானபடி பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

5 வருடங்களுக்குப் பிறகு காலம் கடந்துவிடக்கூடும்

★ சுதந்திரா கட்சிக்கே வோட் செய்யுங்கள்

அடிப்படையான காரணமே அதுதானே!''



''என்னங்க அது! 'வெயிட் மீஷின்' மேலேயே இவரு உக்காந்திருக்காரு?''

''அவர் உண்ணாவிரதமிருக்காருங்க. நிமிஷத்துக்கு நிமிஷம் எடை எவ்வளவு குறைஞ்சுகிட்டு வருதுன்னு பார்த்துப் பார்த்துக் குறிச்சுக்கிட்டு பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பி வைக்கறதுக்காகத் தான்!''

''ஐயா! கருணை கூர்ந்து அப்படிச் சொல்லாதீர்கள். நன்னனைத் தூக்கி வரும்படி சென்ற ஒருவன், அதைச் செய்யாமல், ஒரு பெண்மணியை, அதிலும் இருமணம் ஆகாத ஒரு கன்னியை, இளவரசியைத் தூக்கித் தோளிலே சாத்திக் கொண்டு வந்திருக்கிறான். அவனுக்குப் பரிந்து நீங்கள் எல்லாரும் ஓரம் பேசினால் எப்படி ஐயா?''

நாகமல்லனுடைய இதயத்தின் ஆழத்திலே மூண்டு எரிந்து கொண்டிருந்த ஒரு வாலிபப் பொறாமையும், பகைமை உணர்ச்சியும் அவனுடைய சொற்களிலே பொங்கி ஒலித்தன.

''நாகா, ஏதேதோ சொல்கிறாய் நீ. அரண்மனையிலே என்ன நடந்தது என்பது உனக்குத் தெரியாது!'' என்றார் ஆதனார்.

''நடந்தது என்ன என்பது யாருக்குமே தெரியாது. நீங்கள் எல்லோரும் அவன் பேச்சை நம்புகிறீர்கள். நான் நம்பவில்லை. நமக்குள் இது ஒன்று தான் வித்தியாசம். மற்றப்படி நடந்தது என்ன என்பது எனக்கும் தெரியாது உங்களுக்கும் தெரியாது ஆசிரியப் பெருந்தகையே!''

நாகமல்லனுடைய குரலில் உரமும் வஞ்சமும் அதிகமாயின. அதுகண்டு ஆதனார் புன்னகை செய்தார். சொன்னார்:

''ஒரே வயதுள்ள இரண்டு இளைஞர்களுக்குள் பொறாமை என்ற உணர்ச்சி எப்படி ஏற்படுகிறது. அது ஏற்பட்டால் என்னென்ன வகையில் நிகழ்ச்சிகள் உருவாகின்றன என்பது இப்போது எனக்கு மிக நன்றாகத் துலங்குகிறது! தம்பி, நீ நினைப்பது மிகவும் தவறான எண்ணம். ஒரு இளவரசிக்கு மயக்கம் உண்டாக வேண்டும் என்று இத்தனை கொடிய மருந்துப் புகையை யாரும் கையாள மாட்டார்கள். புரிந்ததா? நீ நினைக்கிறபடி வேறு தவறான எண்ணம் அழுவாடிக்கு இருந்திருக்கும் என்றால், இந்த மயக்க மருந்தை இத்தனை வன்மையாக அவன் உபயோகித்து இருக்கவே மாட்டான். தெரிந்ததா?''

இந்தச் சொற்களுக்கு விடை சொல்லும் முன்பு நாகமல்லனுடைய முகம் சிவந்தது. இதழ்களிலிருந்து படபடப்பும் நெருப்புக் காற்றும் புறப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து எத்தகைய கடுஞ் சொற்கள் வரும் என்பதைப் புரிந்து கொண்ட ஆதனார், மறுவிநாடியே குறுநகையோடு தமது பேச்சைத் தொடர்ந்தார்:

''நாகமல்லா, அப்படியே நீ சந்தேகப்படுவது போலவே, அழுவாடிக்கு இளவரசியிடம் ஒரு மோக உணர்ச்சி ஏற்பட்டிருந்தது என்றே வைத்துக் கொள்வோம். அப்படி இருந்தாலும் இதில் நீ கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது? இளவரசியின் தந்தை இருக்கிறான். அவன் பாடு, அழுவாடியின் பாடு!''

இப்படி ஆதனார் சொல்லி நிறுத்தினாரோ இல்லையோ, 'பளீர்' என்று பேசினான் நாகமல்லன்.

''தந்தை பாடு இவன் பாடு என்று எப்படி நாம் சொல்ல முடியும்? அந்தத் தந்தைக்குத் தெரியாமல் அல்லவா இவன் இந்தப் பெண்ணைக் கடத்திச் செல்லுகிறான்!''

''சரி; அப்படியானால் அந்தப் பெண் பாடு, இவன் பாடு. இதில் உனக்கு என்ன வந்தது?'' என்று சொல்லி மீண்டும் குறுநகை செய்தார் ஆதனார். பக்கத்தில் நின்ற மற்ற மாணவர்கள் இந்தப் பேச்சின் போக்கை ஊன்றிக் கவனித்த போதிலும் இது எங்கே சென்று நிற்குமோ என்று அஞ்சி நின்றார்கள்.

''ஆசிரியர் பெருமானே, அந்தப் பெண் பாடு, இவன் பாடு என்று நாம் எல்லோரும் கையைக் கழுவி விட்டால் எப்படி? நியாயம், முறைமை என்று ஒன்று இருக்கிறதே! நேற்று ஒரு பெண்ணைக் கைப்பிடித்து விட்டு இன்று இன்னொரு பெண்ணைக் கடத்திக் கொண்டு செல்கிறான். நாளைக்கு இன்னும் என்னென்ன செய்வானோ? பெண்களோடு பிறந்து; பெண்களோடு வாழ்பவர்கள் நாம். இவனைப்போல...''

"நாகமல்லா! போதும் நீ பேசியது. உன் மனநிலை எனக்குப் புரிகிறது. அதைப் புரிந்து கொள்ளவே இத்தனையும் பேசினேன் உன்னோடு! இளவரசியிடம் இத்தனை அன்பு செலுத்துகிறவன், அவள் மயக்கம் தெளிந்தாளா, இல்லையா, அவள் நிலைமை என்ன ஆயிற்று என்று இம்மியளவு கூட அக்கறை செலுத்தக் காணோமே! பெரிய அற முறைகளைப் பேச வந்து விட்டாயே! சரி, சரி!" என்று சொல்லிக்கொண்டே நிலவறைக்குள்ளே புகுந்தார் ஆதனார்.

"அண்ணலே!" என்று மகிழ்ச்சி பொங்க ஆசிரியருக்கு அருகிலே வந்தான் அழலாடி.

"அண்ணலே! மயக்கம் தெளிய ஆரம்பித்து விட்டது. நீங்கள் சென்று வருவதற்குள் மூன்று முறை கண் திறந்தாள் இளவரசி!" என்று களிப்போடு சொன்னான் அழலாடி.

"அப்படியா? தண்ணீர் கொடுத்தீர்களா?" என்று பரிவோடு கேட்டார் ஆதனார், அழலாடியையும் தமது வைத்திய மாணவர்களையும் பார்த்து.

"ஆமாம். முதல் முறை கண் விழித்ததும், 'நான் இருப்பது எந்த இடம்?' என்று கேட்டாள். சொன்னேன்!" என்றான் அழலாடி.

"என் பெயரைச் சொல்லிவிட்டாயா?" என்று விரைவோடு கேட்டார் ஆதனார்.

"ஆமாம் ஐயா! அந்தப் பெயரைக் கேட்டதும்தான் இளவரசியின் முகத்தில் மகிழ்ச்சி படர்ந்தது" என்றான் மாணவர்களில் ஒருவன். அழலாடி சொல்லுவான்:

"அண்ணலே! தங்களுடைய கூடத்தின் நிலவறையில் பாதுகாவலான சூழ்நிலையில் இருப்பதாகச் சொன்னேன். மிகுந்த அச்சமும், பதற்றமும் ஏற்பட்டிருந்த இளவரசிக்கு அந்தச் சொற்கள் நிம்மதி கொடுத்திருக்க வேண்டும். விழிகளை நன்றாகத் திறந்து சுற்றும் முற்றும் பார்த்து விட்டு எங்களை யார் என்று கேட்டார் இளவரசி. அதற்கு மேல் பேச முடியவில்லை. மயக்கம் வந்து விட்டது."

இவ்வாறு சொல்லி ஆசிரியரின் முகத்தையே பார்த்தான் அழலாடி.

"சரி; நல்ல முன்னேற்றம்தான். தண்ணீர் குடித்தாளா இளவரசி?" என்று கேட்டார் மீண்டும் ஆதனார்.

"இரண்டாம் முறை கண்களைத் திறந்ததும் நானே குவளையை எடுத்துத் தண்ணீர் கொடுத்தேன். கைகளை நீட்டி வாங்கிக் கொள்ள முயன்றாள். முடியவில்லை. பிறகு நானே ஊற்றினேன். குடித்து விட்டு மறுபடியும் இமைகளை மூடிக் கொண்டாள்" என்று சொன்னான் அழலாடி.

"சரி; மூன்றும் முறை என்ன என்ன ஆயிற்று?" என்று ஆவலோடு கேட்டார் ஆசிரியர். அழலாடி பதில் சொன்னான்:

"மூன்றும் முறை கண் விழித்ததும் ஆசிரியர் எங்கே என்று கேட்டாள் இளவரசி. மருந்து எடுத்து வரச் சென்றிருக்கிறீர்கள் என்றேன். இங்கே எப்படி வந்தேன் என்று கேட்டாள். இதற்கு நான் மறுமொழி சொல்வதற்குள் மீண்டும் மயக்கம் வந்து விட்டது."

"தம்பி, ஏதோ நாம் கொடுத்த மருந்து பழுதில்லை. வேலை செய்கிறது என்று தெரிகிறது. ஆனாலும் முற்றிலும் நம்முடைய வைத்தியத் திறமையை மட்டுமே நம்பிக் கொண்டு இருப்பது நல்லதில்லை. இளவரசி நன்னியிடம் எனக்குள்ள பாசம் அவளுக்குத் தெரியும். ஓரளவு தெரியும். நீங்கள் யாரும் அதை அறிய மாட்டீர்கள். எத்தனை ஆண்டுகள் அந்த அரண்மனையிலே வாழ்ந்தவன் நான்! பெற்றால் தான் மகளா? இல்லை. அரு நாட்டு இளவரசியிடம் இந்த ஏழை ஆசிரியனுக்கு ஒரு தந்தையின் பாசம் உண்டு. அதனால்தான் சொல்கிறேன், நான் அவளுக்கு வைத்தியம் செய்வது சரியில்லை. ஏதோ அவசரத்துக்கு இது வரை செய்தது சரி. பாசமும் அன்பும் செலுத்துகிற உரிமையுள்ளவர்களுக்கு ஒரு வைத்தியன் மருந்து கொடுக்கத் தொடங்கினால், உணர்ச்சி வேகத்தில் தடுமாற்றம் ஏற்படும். ஒரு வைத்தியன் தன்னுடைய நோய்க்குத் தானே மருந்து கொடுப்பது போன்றது அது! ஆற அமரச் சிந்திப்பதற்கு வேண்டிய அமைதியும் எண்ணத் தெளிவும் இராது. அதனால்தான் சொல்லுகிறேன், இளவரசியை இங்கிருந்து நாம் வேறு வைத்தியக் கூடத்துக்குக் கொண்டு போய்விட வேண்டும்! அதிலும் உனக்கும் நாகமல்லனுக்கும் இடையில் ஏற்பட்டுவிட்ட சிக்கலைப் பார்க்கும் போது அந்த எண்ணம் மீண்டும் வலுவடைகிறது. யாருக்கும் தெரியாமல், யாரிடமும் எந்தச் செய்தியும் தகவல்களும் உரைக்காமல், மிகவும் மறைவாக இங்கிருந்து நாம் புறப்பட வேண்டும். தெரிகிறதா?"

இவ்வாறு சொல்லி அழலாடியைத் தமது அருகிலே அழைத்தார் ஆதனார்.

"நாகமல்லனோடு இத்தனை தூரம் நீ ஏன் மல்லுக்கு நின்றாய்? தவறு. இளைஞர்கள் இருவரின் உறவிலே ஒரு பெண் குறுக்கிட்டு விட்டால் என் னென்ன நேரும் தெரியுமா? நினைக் குப் பார்க்கவே அச்சமாக இருக் கிறது!" என்றார் ஆதனார்.

"அண்ணலே, ஒரு தவறும் செய் யாத என்னை, அப்படி எண்ணிப் பார்க் கவே பார்க்காத என்னை அந்த நாகப் பாம்பு—"

"அழலாடி, நீயும் மனசைச் சூடேற் றிக்கொள்ளாதே. நடக்கக் கூடாதது ஒன்று நடந்தால், பிறகு அதைத் தொடர்ந்து, வரிசையாக நடக்கக் கூடாத, நடக்க முடியாத பல நிகழ்ச் சிகள் ஒன்றன் பின் ஒன்றாக நடக்கும். இது உலக நியதி. இனி அதையெல் லாம் பற்றி எண்ணிக் குழம்புவதில் பயனில்லை. நிகழ்ச்சிகளின் போக்கும் சிக்கலும், வருங்கால விளைவுகளும் எனக்கு ஓரளவு புரிகிறது. ஆகையால் உனக்கு ஒரு தற்காப்புச் சொல்கிறேன். நாகமல்லனை இனி நீ நம்பாதே. அவ னைப் பற்றி அசட்டையாகவும் இராதே. உன்னையும் இளவரசி இள நன்னிலை யும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு எனக்கு இருக்கிறது. உண் மையில் இனிமேல்தான் அந்தப் பெரும் பொறுப்பு எனக்குத் தொடங்குகிறது. சற்று நேரத்தில் நமக்காக ஆயச் சிவிகையும், குதிரைகளும் வருகின் றன. ஏற்பாடு செய்திருக்கிறேன். இளவரசியைப் பாதுகாவலோடு கொண்டு சேர்ப்பது முதன்மையான கடமை" என்றார் ஆதனார்.


ஃ ஃ ஃ



நாகமல்லனோ, மற்ற மாணவர்களோ யாரும் எங்கும் போகவில்லை. ஆதனாரின் கூடத்தி லேயே எல்லாரும் இருந் தனர்.

நிசியின் முன் பொழுது கடந்து விட்டது. ஆதனாருடைய கூடத்தின் முகப்பிலே ஒரு சிவிகை வந்து நின்றது. அதைத் தொடர்ந்து மூன்று குதிரை வீரர்கள் வந்தார்கள். இவர்கள் வந்து சற்று நேரத்துக்கெல்லாம் ஆதனார் அனுப்பிய இரண்டு மாணவர்களும், அவர்களோடு நாலைந்து வீரர்களும் வந் தார்கள். எல்லாரும் கூடத்துக்குள்ளே வந்து ஆதனாசிரியரின் கட்டளைக்காகக் காத்து நின்றார்கள்.

பரவசப் பாராட்டு!



அவள் அலுவலகத்துக்குள் நுழைந்ததும் மானேஜர் பர வசத்துடன் கூறினார்: "மிக வும் மகிழ்ச்சி அம்மா! நேரங் கழித்து வருபவர்களில் இன் றைக்கு நீதான் முந்தி வந் திருக்கிறாய்....!" —எம்.எம்.கே.

நாகமல்லனும் அவனோடு இருந்த துணைவர்களும் இந்தக் காட்சியை ஒரே ஆவலோடு பார்த்துக் கொண்டு நின்றார்கள். பகற் போதில் ஆதனார் இரண்டு மாணவர்களைத் தனியாக அழைத்து ஏதோ சொல்லி எங்கோ அனுப்பியது நாகமல்லனுக்குத் தெரியும். என்றாலும் இந்தச் சிவிகையையும், குதிரை வீரர்களையும் அவன் எதிர் பார்க்கவில்லை —திகைப்பும், ஏமாற்ற மும், அதனால் ஏற்பட்ட சீற்றமுமாக நிலைகொள்ளாமல் நின்றான் நாகமல்லன்.

மயங்கிய நிலையிலே இமைகள் மூடி இருந்த அரச குமாரியைச் சிவிகை யிலே ஏற்றினார்கள். பாதுகாவலாக அதைத் தொடர்ந்து சில வீரர்கள் நின்று கொண்டார்கள்.

குதிரைகள் ஆயத்தமாக நின்றன. அவற்றில் ஏறிச் செல்வதற்கு ஆயத்த மானார்கள் ஆதனாரும் அழலாடியும்.


"நாகமல்லா!" என்று கூப்பிட் டார் ஆதனார்.

"உன்னுடைய மன நிலைமை புரிவ தால் நாங்கள் எங்கே செல்கிறோம் என்பதை உன்னிடம் சொல்லப் போவ தில்லை. தெரிகிறதா? அறத்தின் பெய ரைச் சொல்லி அறமற்ற செயல்களைச் செய்யாதே. அவ்வளவுதான் நான் சொல்லுவேன்!"

இப்படிச் சொல்லிவிட்டுக் குதிரை யிலே ஏற முனைந்தார் ஆதனார்.

"ஐயா, மற்ற எதுவும் நான் சொல்ல விரும்பவில்லை. ஆசிரியருக்கு மட்டும் துரோகம் ஒரு நாளும் நான் செய்ய மாட்டேன். வணக்கம்!"

இப்படிச் சொல்லிவிட்டு, ஆசிரிய ரைப் பின்தொடர்ந்து குதிரையிலே ஏற முனைந்த அழலாடியை ஒரு நெருப்புப் பார்வை பார்த்தான் நாகமல்லன்! (தொடரும்)



கோவாவின் சரித்திரத்தில் ஓர் ஏடு

கேசத்தை அடகுவைத்த கவர்னர்!

வி. எஸ். ஸுக்டணகர்

போர்ச்சுகீசிய ஆட்சியின்கீழ் வந்த பிறகும் கோவாவில் ஏற்கனவே அங்கு நிலவி வந்த பல ஜனநாயகப் பண்புகளைப் போற்றிப் பாதுகாத்து வந்தான் கவர்னர் அல்புகுவர்க். கிராமப் பஞ்சாயத்து போன்ற நிறுவனங்களை ஆதரித்ததுடன் மேனாட்டு நடைமுறைப்படியும் சில ஜனநாயக வழிகளைப் புகுத்தினான். மக்கள் பிரதிநிதிகள் 'செனட்' என்ற அமைப்பில் ஒன்று கூடி நாடாள்வது என்பது இவற்றில் ஒன்று. இவன் பல்வேறு அலுவல்கள் நிமித்தம் வெளியூர்களுக்குச் செல்ல நேரிட்டபோதெல்லாம் தலைநகரை நிர்வகிக்கும் பொறுப்பு முழுவதையும் இந்த 'செனட்' அல்லது மக்கள் பிரதிநிதிகள் சபை ஏற்றுக்கொண்டது.

அல்புகுவர்க்குக்குப் பின் வந்த போர்ச்சுகீசிய கவர்னர்களுள் காஸ்ட்ரோ என்பவன் முன்னவனைப்போலவே ஜனநாயகப் பண்புகளில் பற்றுதல் மிகுந்தவனாக இருந்தான்.

இவன் ஒரு முறை ஆட்சிப் பொறுப்பை செனட் சபையிடம் விட்டு விட்டு டையூவுக்குப் படை திரட்டிக்கொண்டு சென்றான். டையூ கோட்டையைப் போர்ச்சுகீசியரிடமிருந்து ஒரு முஸ்லிம் சேனை பிடித்துக் கொண்டிருந்தது. அவர்களைப் போரிட்டு வெல்லச் சென்றவன் அவ்விடத்தை நெருங்கிய பிறகு இந்த யுத்தத்துக்குத் தேவையான அளவுக்குத் தன்னிடம் செல்வம் இல்லை எனக் கண்டான்.

உடனே கோவாவில் உள்ள செனட்டுக்கு ஆள் அனுப்பினான். என்ன தகவல் கொடுக்கச்சொல்லி? 'உடன் பணம் அனுப்புங்கள்' என்ற உத்தரவுடன் சென்றானா அந்தத் தூதன்? இல்லை! தனக்குத் தேவையான பணத்தைக் கடனாகக் கொடுத்து உதவுமாறு செனட் சபையைக் கேட்டிருந்தான் காஸ்ட்ரோ! இதற்காகத் தன் கேசத்தை அடகு வைக்க முன் வந்து கடிதத்துடன் கொஞ்சம் கேசத்தையும் கத்தரித்து வைத்து அனுப்பி யிருந்தான். அந்நாட்களில் பெருந்தனக்காரர்கள், சமூகத்தில் உயர் அந்தஸ்தில் உள்ளவர்கள் ஓர் அவசரம் நிமித்தம் இப்படிச் செய்வதுண்டு. நாணயம் மிக்க அவர்களது கேசத்துக்குக் கூட அந்த அளவுக்கு மதிப்பு இருந்தது! அதைத் திரும்பப் பெறுதவரை கடன் பெற்ற சீமானுக்கும் உறக்கம் பிடிக்காது! பெரிய அவமானமாகக் கருதுவான் அதை. அப்படி ஒரு வழக்கம் இருந்து வந்தது.

காஸ்ட்ரோவின் கடிதத்தையும் கேசத்தையும் கிடைக்கப் பெற்ற செனட் சபையினர் உள்ளம் நெகிழ்ந்தனர். தங்களுக்கு உத்தரவு போடாமல் ஜனநாயக அமைப்புக்கு மதிப்புக் கொடுத்துத் தங்களிடம் கோரிக்கை விடுத்த கவர்னரின் பெருந்தன்மையை வெகுவாகப் பாராட்டினார்கள். உடனே தேவையான அளவுக்குப் பணம் திரட்டி அனுப்பினார்கள். அதுமட்டுமல்ல; கவர்னர் காஸ்ட்ரோ அனுப்பி வைத்த கேசக் கற்றையும் அவனுக்கே திருப்பி அனுப்பி விட்டனர்.



பலவகையிலும் தகுதி வாய்ந்த ஓராயிரம் அறிவாளிகளை ஒரே காலத்தில் கழுவேற்றி விடலாம். அதனால் நாட்டுக்கு அப்படி ஒன்றும் தீங்கு நேர்ந்து விடாது. ஆனால் எதற்கும் தகுதியற்ற ஓர் அறிவிலியை அரியாசனத்தில் அமர்த்திவிட்டால் போதும்; தீமைகள் பல தலைவிரித்தாட, நாடு நலம் கெடக் கேட்கவே வேண்டாம். வழியில் போகிற ஓணானை மடியில் கட்டிக்கொண்ட கதைதான்!

(ஏ)மாற்று வேலை!

ஓர் எத்தன் ஒரு கடைக்குப் போய், வாழைப் பழம் கேட்டான். கடைக்காரன் வாழைப் பழம் கொடுத்தான். வாழைப்பழத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு ஆரஞ்சுப் பழம் கேட்டான் எத்தன். கடைக்காரன் ஆரஞ்சுப் பழம் கொடுத்தான். மீண்டும் ஆரஞ்சுப் பழத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு ரொட்டி கேட்டான் எத்தன். கடைக்காரனும் அதுக்குக் கொள்ளாமல் ரொட்டியைக் கொடுத்தான். ரொட்டியைத்தின்றுவிட்டுக் கிளம்பினான் எத்தன்.

''என்னய்யா, காசு கொடுக்காமல் போகிறீயே?'' என்றான் கடைக்காரன்.

''காசா? எதுக்கு?'' என்றான் எத்தன்.

''நீ தின்ன ரொட்டிக்குத்தான்'' என்றான் கடைக்காரன்.



''ஆரஞ்சுப் பழத்தைக் கொடுத்துத் தானே ரொட்டி வாங்கினேன்'' என்றான் எத்தன். கடைக்காரன் யோசித்தான்.

''சரி. அப்படியானால் ஆரஞ்சுப் பழத்துக்குக் காசு எடு'' என்றான்.

''ஆரஞ்சுப் பழத்துக்குக் காசா? என்னய்யா? வாழைப் பழத்தைக் கொடுத்துத்தானே ஆரஞ்சுப் பழம் கேட்டேன்'' என்றான் எத்தன்.

கடைக்காரனுக்குக் கோபம் வந்தது.

''சரி, அந்த வாழைப் பழத்துக்குத் தான் காசு கொடேன்'' என்றான்.

''என்னய்யா புரளி பண்ணுகிறீர்? வாழைப் பழத்தைத்தான் உன்னிடமே திருப்பிக் கொடுத்து விட்டேனே'' என்று கூறிக் கொண்டே நழுவினான் எத்தன்.

பாவம்! கடைக்காரனுக்கோ ஒரே குழப்பம். - குத்தாலம் வீ. சம்பந்தன்

வாழ்த்து பிறந்த கதை!

பொங்கல் வாழ்த்து அனுப்பும் பழக்கம் நம்மிடையே வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த விதம் வாழ்த்து அனுப்பும் முறையை முதன் முதல் ஆரம்பித்து வைத்ததில் இன்று தமிழ் வளர்ச்சிக் கழகப் பிரதம ஆசிரியராக விளங்கும் திரு ம. ப. பெரியசாமித் தூரன் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

1928ம் ஆண்டு. அந்த ஆண்டில் வனமலர்ச் சங்கம் என்று தூரனும் நண்பர்களும் நடத்திய சங்கத்தில் காரசாரமாக வாதம் செய்து கடையில் பொங்கல் வாழ்த்து அனுப்புவது என்று முடிவு செய்தார்கள். இதை எதிர்த்தவர்கள் 'மேனாடுகளைக் காப்பி அடிப்பதா?' என்ற முக்கிய காரணத்தாலேயே எதிர்த்தார்கள். ஆகவே தூரனும் பிறரும் கிறிஸ்துமஸ் கார்டு போலல்லாமல் கிராமத்திலிருந்து பனை



ஓலை கொண்டு வந்து அதைச் சீர்ப்படுத்திப் பச்சை சிவப்பு முதலிய மைகளில் அழகுபடுத்தி வாழ்த்து அனுப்பினார்கள். அந்தக் காலத்தில் அதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் எவ்வளவோ!

அவர்களுடைய தமிழ் ஆசிரியர் க. நமசிவாய முதலியார், திரு வி. க., பேராசிரியர் கல்கி முதலியவர்களுக்கு வாழ்த்துக்களை அனுப்பினார்கள்.

பிறகு அது அவர்கள் செய்த பிரசாரத்தால் நாடெங்கும் நடைபெறும் வழக்கமாக வந்து விட்டது.

அந்த வனமலர்ச் சங்கமே பித்தன் என்ற மாதப் பத்திரிகையை நடத்தியது.

அதன் மூலமாகவே திரு பெரியசாமி தூரனும் பேராசிரியர் கல்கியும் நண்பர்களானார்கள்.

பொங்கலோ பொங்கல்!
மங்களம் பொங்குக!

- வி. சு. வாசுதேவன்

இங்கிலாந்து



நல்லவேளை, இப்படி நடப்பது நம் நாட்டில் அல்ல!

மற்றப் பெண்களைத் தாக்கிக் கொண்டிருந்த ஒரு கணவனுக்கு 'ஷாக் ட்ரீட்மெண்ட்' (உண்மையிலேயே 'எலக்ட்ரிக் ஷாக்' தான்) கொடுத்துத் திருத்தி விட்டது லண்டன் ஆஸ்பத்திரி ஒன்று.

பத்து வருடங்களுக்கு முன் திருமணமான வனும் ஒரு பெரிய குடும்பத்திற்குத் தலைவனுமான அவனை ஒரு வெள்ளை திரைக்கு முன்பாக உட்கார வைத்து, அத்திரையில் அவனது மனைவியின் நிழற் படத்தையும் ஆசை நாயகி களின் உருவங்களையும் மாறி மாறிக் காட்டிக் கொண்டே இருந்தனர். ஆசை நாயகிகளின் படம் திரையில் தோன்றும் சமயங்களில் மட்டும் அவனது மணிக்கட்டின் மேல் எழுபது வோல்ட் சக்தியுள்ள மின்சாரத் தைப் பாய்ச்சிய வண்ணம் இருந்தனர். இப் படித் தினத்துக்குப் பத்து 'ஷாக்'குகள் விதம் ஆறு நாட்களுக்குத் தொடர்ந்து கொடுக்க, அவன் திருந்தாமல் என்ன செய் வான்? பாவம்!

செஞ்சீனு



பள்ளி மாணவர்கள் காதல் புத்தகங்களைப் படிக் கத் தடையில்லை. ஆனால் ஆசிரியர் மேற்பார்வையில் தான் படிக்க வேண்டும். இந்தச் சட்டம் செஞ்சீனு வைத் தவிர வேறு எங்கு இருக்க முடியும்?

மே. ஜெர்மனி



உங்கள் அலுவலகத்தின் ரகசிய தஸ்தாவேஜுகள், கடிதங்கள் இவைகளின் கார்பன் பிரதிகள் முதலியவை பிறர் கண்ணில் படக் கூடாது என்று எண்ணினால் இதோ, இந்தக் குப்பைக் கூடையில் போட்ட மறுகணம் அவற்றிலுள்ள பற்கள் அவைகளை உருத் தெரியாமல் காகிதக் கூழாக மாற்றி விடுகின்றன. எங்கே எங்கே என்று பறக்காதீர்கள். அந்தக் கூடை மேற்கு ஜெர்மனியில் இருக்கிறது. - ஆர். எஸ். மணி

பைத்தியம் எங்கே?

ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக் குப் பார்வையாளர் ஒருவர் வந்தார். ஒரு பைத்தியத்தைப் பார்த்து, "நீ இங்கே எப்படி வந்தாய்?" என்று கேட்டு வைத்தார்.

"அதுவா? உலகத்தை நான் பைத்தியக்கார உலகம் என்றேன். உலகம், என்னைப் பைத்தியக் காரன் என்றது."

"இதில் என்ன தவறு?"

"பிறர் காதுபட இப்படி இனி யும் ஒருமுறை சொல்லி விடா தீர்கள்! உங்களையும் இங்கே கொண்டு வந்து அடைத்துவிடும்."

"ஏன்?"

"பெரும்பான்மை வோட்டு பலம் உலகத்தின் கையில் அல்லவா இருக்கிறது!"



இரிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி அண்மையில் பிரிட்டனில் இராணியாரின் தலை பொறித்த தபால் தலைகள் வெளியிடப்பட்டன. அவற்றிலுள்ள சௌதாம்டனில் விற்கப்பட்ட 1 ஷி. 6 பெ. மதிப்புத் தபால் தலைகள் எட்டிலுள்ள அரசியாரின் தலையில் ஒரு பகுதியைக் காணோம். அச்சடிக்கும் போது தவறி விட்டிருக்கிறது. விஷயம் தெரியாமல் வியாபாரி ஒருவர் அவற்றை வாங்கி விட்டிருக்கிறார். அரசியாரின் தலைப் பகுதி இல்லாத தபால் தலைகள் என்றால் அவை அபூர்வமான தபால் தலைகள் ஆயிற்றே. அவைகளின் மதிப்பு உடனே உயர்ந்துவிட்டது. 12 ஷில்லிங்குக்கு வாங்கிய அந்தத் தபால் தலைகளை வியாபாரி நானூறு பவுன்களுக்கு விற்றிருக்கிறார்!

- "தி கார்டியன்"
- ஏ. கே. கந்தசாமி



ஏலவிடுதியில், தலைவரின் நாற்காலி தன் கதையைச் சொல்ல விரும்பியது. தலைவரது அந்த நாற்காலி மிகப் பழைமையானது. அதன் மூன்று கால்கள் சரியாயிருந்தன. ஆனால் நான்காவது கால் மட்டும் உருவம் மாறிக் குரூபமாகக் காட்சி அளித்தது. நான்காவது கால் உடைந்து விட்டதனால் கற்றுக் குட்டித் தச்சன் ஒருவன் அவசரத்தில் செய்து இருக்கியது போலிருந்தது. நாற்காலியின் முதுகில் தோல் வைத்துத் தைத்திருந்தது. அதிகமாக உபயோகிக்கப்பட்டதனால் அதுவும் தேய்ந்து போயிருந்தது. எப்பொழுதும் நாற்காலியின் முதுகில் தலைவர் தமது முதுகை வைத்து உராய்ந்து கொண்டே இருந்திருக்க வேண்டும். சாயம் போன தோலில் அதன் அடையாளம் நன்கு பதிந்திருந்தது; நாட்டின் விடுதலை வரலாறு முழுவதையுமே அதில் பொறித்து விடலாம் போல. நாற்காலியின் ஆசனத்தில் வெல்வெட்டு வைத்துத் தைத்த பஞ்சு மெத்தை பல இடங்களில் கிழிந்திருந்தது. அவற்றின் வழியே பஞ்சு புறப்பட்டுத் துருத்திக் கொண்டிருந்தது. நாற்காலிக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாலிஷும் மிகப் பழைமையாகிப் பல நிறம் காட்டிக் கொண்டிருந்தது; ஓரிடத்தில் கறுப்பு, ஓரிடத்தில் பழுப்பு, நாலாவது காலில் இலேசான வாதுமை நிறம் என்று இப்படி எத்தனையோ வகை வர்ணங்கள்.

அந்த நாற்காலியைப் பார்த்து ஏலவிடுதியில் இருந்த மற்ற மரச் சாமான்கள் உரக்கச் சிரித்தன. ஒரே மாதிரியான அமைப்பு, ஒரே நிறம், ஒரே மரம் என்ற பெருமிதம் அவற்றுக்கு. அவற்றின் சிரிப்பைப் பொறுக்க மாட்டாத நாற்காலி சீற்றமுற்றுக் கூறியது: ''என் மாறுபட்ட உருவத்தைக் கண்டு நகைக்காதீர்கள். நானும் ஒரு காலத்தில் உங்களைப் போல இளமையும் அழகும்கூடப் புது மெருகு அழியாமல் இருந்ததுண்டு. காலம் செய்த கோலம், என் நிலை இப்படி ஆகிவிட்டது. ஆனால் காலம் என்றைக்குத்தான் யாருக்குத்தான் இது வரை கைகொடுத்து உதவியிருக்கிறது? பிறவி என்று ஒன்று எடுத்துவிட்டால் மூப்பு உண்டு, மரணம் உண்டு. இது காலத்தின் நியதி. இதை மாற்ற யாராலும் ஆகாது.''

''மெய்தான், மெய்தான்!'' இரட்டைக் கட்டில் ஒன்று இரும்பிய வாறே கூறியது.


''போகட்டும், இப்பொழுது என் கதையைக் கேளுங்கள்!'' — நாற்காலி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுத் தொடர்ந்தது! ''நானும் ஏனைய வாழ்க்கை அநுபவங்களை என்னோடெடுத்து வந்திருக்கிறேன். நான் தேமபுரி நகரத்தைச் சேர்ந்த நாற்காலி. எங்கள் நகரத்தின் மக்கள் தொகை ஏழு லட்சத்துக்கும் சற்று அதிகம். பாதி மராட்டியர்கள். மறு பாதி உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இது மத்திய உத்தரப் பிரதேசத்தின் நல்ல நகரமாகும். ஆனால் இங்கே பெயருக்குக் கூட ஒரு தொழில் நிலையம் கிடையாது. பைத்தியக்கார நிலையங்கள் மட்டும் எண்ணிக்கையில் பதினொன்று இருக்கின்றன.''

''இந்நிலை ஏன்?'' விளக்குத் தண்டு ஒன்று வினவியது.

''அரசாங்கம் இங்கே ஒரு தொழிற்சாலை நிறுவலாம் என்று யோசிக்கும் போதெல்லாம் உ.பி.க்காரர்கள் கூறுவார்கள்: 'கரும்பு உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த நாட்டுப்புறங்களிலிருந்துதான் வருகின்றது. அதனால் ஆலை எங்கள் பகுதியில்தான் தொடங்கப்பட வேண்டும்.' உடனே மராட்டியர்கள் மறுப்பு விடுவார்கள்: 'ஆலைகளில் வேலை செய்வதற்குப் போகும் கூலிகள் அனைவரும் மராட்டியர்களே. எனவே, எங்கள் நகர்ப்புறப் பகுதியில்தான் ஆலை நிறுவப்பட வேண்டும்.'

ந.ந.க. தலைவர் கோவிந்தராம்

உருது: கிருஷ்ண சந்தர்
தமிழ்: ரா. வீழிநாதன்



''இதன் பலன், நகரத்தில் இரண்டு கட்சிகள் உருவாயின. இரண்டு கட்சிகளும் தனித்தனிக் கூட்டம், தனித் தனி ஊர்வலம் என்று நடத்தலாயின. நகரத்தில் வலுவான வேலை நிறுத்தம் தொடங்கியது. கடைகளெல்லாம் அடைக்கப்பட்டன. பள்ளி, கல்லூரி, அலுவலகம் எல்லாம் மூடப்பட்டன. மின்சார இலாக்காவைச் சேர்ந்தவர்கள்கூட வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள் என்றும் பார்த்துக் கொள்ளுங்களேன். நகரத்துக்கே மின்சார விநியோகம் தடைப்பட்டு விட்டது என்றும், கூட்டம் போடுவதற்கு மின்சார வசதி எங்கிருந்து கிடைக்கும்? மைக், ஒலிபெருக்கி இவை யெல்லாம் எப்படி இயங்கும்? எனவே, மிக நன்றாகப் பேசுபவர்களுக்குக்கூட மூச்சு இறைக்கத் தொடங்கியது. ஆனால் நகரம் முழுவதிலுமோ வேலை நிறுத்தம். மக்களுக்கு வேறு வேலை கிடையாது. அவர்களுடைய ஆர்வத்தைக் குறையாமல் நிலை நாட்டக் கூட்டம் என்றும், ஊர்வலம் என்றும் நடத்தியே ஆக வேண்டிய ஒரு நிலை. அந்த நிலைமையைச் சமாளிக்க ஒலிபெருக்கியின் உதவியின்றியே பேசக்கூடியவர்கள் தேவைப்பட்டார்கள். அந்தத் தேவையை உருவாக்கித் தந்த மாபெரும் தலைவர் அவர். நான் அவருடைய நாற்காலி.''

இத்தனை கூறியபின் நாற்காலி தன்னைச் சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டது. பிறகு தனது கதையைத் தொடர்ந்து கூறியது:

அந்தக் காலத்தில் நடந்த நிகழ்ச்சிதான் இது. எங்கள் நகரமான நேமபுரியிலே வாணியர் தெருவிலே பிச்சு என்றொரு பால்காரன் வசித்து வந்தான். அவன் தொழில் ஆரம்பத்திலே ஏதோ காமா சோமாவென்றுதான் நடந்து வந்தது. ஆனால் அரசாங்கம், பாலுக்குப் பதில் பால் என்ற பெயரில், சுண்ணாம்பு, மைதா, சாக்குக் கட்டிப் பொடி, வெள்ளை மரத் தூள் — இது போல் வெறுப்பான பொருள்கள் என்ன என்னவெல்லாம் உண்டோ, அவற்றைத் தண்ணீரில் கலக்கி விற்கலாம் என்ற உத்தரவு வழங்கியபின் பிச்சுவின் தொழில் நன்றாகச் சூடு பிடித்துக் கொண்டது. பார்க்கப் போனால் பிச்சு ரொம்ப நல்லவன். அவனுக்குத் தன் வேலை ஒன்றுதான் குறி. வேறு எதிலுமே தலையிடமாட்டான். அவனுடைய மூத்த மகன் கோவிந்தன் எட்டாவது வகுப்பில் 'கோட்' அடித்து விட்ட கதி என்று வந்து உட்கார்ந்தவன் பால் விற்கக்கூடப் போக முடியாது என்று மறுத்து விடவே, பிச்சுவுக்கு மிகவும் வருத்தமாகப் போய்விட்டது. 'எட்டாவது படித்துப் பெயில் ஆனவன் போய்ப் பால் விற்பதா? இது நடக்காத காரியம்!' ஐயத்திரிபுக்கு இடம் வைக்காமல் கோவிந்தன் மறுத்து விடவே, பிச்சுவுக்குப் பற்றிக்

கொண்டு வந்தது ஆத்திரம். மகனை அடிக்கக் கையைக்கூட ஓங்கி விட்டான். பதிலுக்குக் கோவிந்தன் கையில் தடியையே தூக்கிக் கொண்டு விட்டான்.

கோவிந்தன் ஆறு அடிக்கும் மேல் உயரமானவன். அவன் மோவாய் பெரியது. எனவே, மோவாய்க் கட்டைகள் மிக மிக வலுவுள்ளவைகளாகத் தோன்றின. அவனது விழிகள் கறுப்பானவை. ஆனால் சின்னச் சின்னவை. கண்களுக்கு மேலிருந்த புருவங்களோ நன்கு கறுப்போடி அடர்த்தியான நீண்ட மயிர் குவிந்து நிற்கக் காட்சி அளித்தன. சொல்லப் போனால் புருவங்களின் அமைப்பே விழிகளுக்கு ஒளி கூட்டியது. குறுகலான நெற்றி. தடித்த பெருத்த உதடுகள்; உதடுகளுக்கேற்ற பெரிய வாய். பெரிதிலும் பெரிது, எல்லாவற்றிலும் பெரிது அவன் குரல். வாயைத் திறந்து அவன் பேசினானேயானால், யாரோ அவன் தொண்டைக்குள் ஒலிபெருக்கியை வைத்துக் கட்டியிருக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றும். இல்லாவிட்டால் இத்தனை பெரிய குரல் எங்கிருந்து வரும்? படிப்பதிலோ எழுதுவதிலோ அவன் மனசு செல்லவேயில்லை. ஏழு முறைகள் அவன் எட்டாவது வகுப்பில் தோல்வியையே தழுவியிருக்கிறான். எட்டாவது முறையாகவும் அவன் தோல்வியை நாடிச் செல்லவே, பிச்சை அவனைப் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று தடுத்து நிறுத்தி விட்டான். பால் விற்கப் போக முடியாது என்று அவன் மறுத்து விடவே, தனது நண்பன் ஜும்மனின் பீடிகளை விற்கும் தொழிலில் அமர்த்தி விட்டான்.

ஜும்மனின் பீடிகள் உண்மையான பனாரஸ் புகையிலையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒன் ஜுக்கிளாஸ் பீடிகள் என்று புகழ் பெற்றிருந்தன. பழைய, மக்கி மடிந்த புத்தகங்களையும் பழைய இலைகளையும் நொறுக்கிப் பொடித்துப் புகையிலைச் சாற்றைத் தெளித்துச் சுருட்டப்பட்ட அவற்றுக்கு அந்நாட்களில் நகரத்தில் தான் எத்தனை மவுசு! பீடிக்கடை ஜும்மன் நாளொன்றுக்கு இரண்டு ரூபாய் என்று சம்பளம் பேசிக் கோவிந்தனை வேலைக்கு வைத்துக்கொண்டான். அவனுக்கு வேலை என்ன தெரியுமா? தன்னோடுகூட நாலைந்துபிள்ளைகளை அழைத்துக் கொள்ள வேண்டியது. தள்ளு வண்டியொன்றில் பீடிக் கட்டுக்களை எடுத்துக் கொள்ள வேண்டியது. நகரத்தின் நாற்சந்தி, முச்சந்துகளில் — நாலு பேர் கூடுமிடங்களில் நின்று கொண்டு தொண்டை கிழிய உரக்கக் கத்த வேண்டியது. ஜும்மன் மியானின் உண்மையான பனாரஸ் புகையிலையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'நம்பர் ஒன்' பீடிகளைப் புகழ்ந்து தள்ள வேண்டியது: மக்களை அந்தப் பீடிகளையே உபயோகிக்குமாறு தூண்ட வேண்டியது. கோவிந்தனுக்கு இந்த வேலை மிகவும் பிடித்துப்போயிற்று. தன் குரலை உபயோகிக்க நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது ஒரு காரணம். மற்றொன்று தலையிலே பூப்போட்ட கோணங்கிக் குல்லா, கையிலே மணி, பின்னால் ஏழெட்டுப் பிள்ளைகளின் வானரப் படை. இவையனைத்தும் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தன. சொல்லப் போனால் அவன் ஆசைக்கேற்பக் கிடைத்த அற்புதமான வேலையாக அமைந்து விட்டது இது. பால்காரப் பிச்சைக்கும் சொல்லவொண்ணாத சந்தோஷம், எப்படியோ தன்னுடைய பிள்ளையும் ஒரு வேலை என்று காலூன்றிக் கொண்டானே என்று!

ஒரு நாள் அவன் சிவாபதி சந்தின் முனையில் நின்று கொண்டு, உரத்த குரலில் பீடி விற்றுக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்த வழியே உத்தரப் பிரதேசக்காரர்களின் ஊர்வலம் ஒன்று வந்தது. 'ஷுகர் பாக்டரி — நமதே. சர்க்கரை ஆலை நமதே!' என்று கோஷமிட்டவண்ணம் பெரிய குதிரை மைதானத்தில் கூட்டம் போடுவதற்காகப் போய்க் கொண்டிருந்தது அந்த ஊர்வலம். ஊர்வலக்காரர்கள் 'ஷுகர் பாக்டரி நமது' என்று கோஷமிட்டார்கள். கோவிந்தன், 'பீடி நம்பர் ஒன் — நமது' என்று பறை சாற்றிக் கொண்டிருந்தான்.

கோவிந்தனின் கனமான குரல் கூட்டத்தின் கோஷத்தை மேவி ஒரு படி அதிகமாகவே ஒலித்தது. கூட்டத்தினர் வியப்பு மிகுதியினால் அவனையே திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டு முன்னேறினர்.

சிறிது நேரத்துக்கெல்லாம் கூட்டம் முன்னேறி வெகுதூரம் சென்று விட்டது. ஆனால் அதிலிருந்து பிரிந்து நின்று இரண்டு பேர் — ஜவாஹர் சட்டை அணிந்தவர்கள் — தன்னையே பார்த்து ஏதோ காதைக் கடித்துக் கொண்டிருப்பதைக் கண்டான் கோவிந்தன். பிறகு அவர்கள் அவனை நெருங்கி வந்து, "என்ன ஆள் அப்பா நீ! பீடி விற்கிற வேலையைச் செய்து கொண்டிருக்கிறாயே! ஒரு நல்ல தேசப் பணியாகச் செய்யக் கூடாது?" என்று கேட்டார்கள்.

"ஏன்? பீடி விற்கிறது என்ன தப்பாம்? நாளொன்றுக்கு இரண்டு ரூபாய் சம்பளம் கிடைக்குது! தேசப் பணியிலுயே என்ன கிடைக்கப் போவுது?" என்று அலட்சியமாகக் கேட்டான் கோவிந்தன்.

"நாளொன்றுக்கு ஐந்து ரூபாய் கிடைக்கும். சம்மதமா சொல்லு!"


"முழுச் சம்மதம்!"

இருவரும் கோவிந்தனின் கையைப் பிடித்துக் குலுக்கினார்கள். முதுகைத் தட்டிக் கொடுத்தார்கள். "ஆமாம், அங்கே என்ன வேலை செய்யணுங்கிறதை நீங்க சொல்லலிங்களே!" என்று கேட்டான் கோவிந்தன்.

இருவரில் அழகான ஜவாஹர் கோட்டு அணிந்திருந்த இளைஞர் தம் சட்டைப் பையைத் தொட்டுக் குலுக்கியவாறே கூறினார்: "இன்று இரவு பெரிய குதிரை மைதானம் இருக்கிறது. பார்! அங்கே நீ பேசணும்!"

"எதைப் பற்றி? பீடி 'நம்பர் ஒன்'னைப் பற்றியா? புகழ்ந்து பேசணுமா?"

"இல்லே. சர்க்கரை ஆலை உ.பி.க்காரர்களைச் சேர்ந்தது என்னும் விஷயத்தை நீ ஆதரித்துப் பேசணும்!"





முகப்பருக்கள் உங்களுடைய திருமணத்திற்குத் தடையாக நிற்கவேண்டாம்.


மருந்து கலந்த நிடால் கிரீமை உபயோகித்து முகப்பருக்களை அகற்றுங்கள்.

பரு, கரும்புள்ளிகள் எல்லாம் அகன்று பொலிவு நிறைந்த சருமத்துடன் நீங்களும் அழகிய மணமகளாகத் திகழலாம்.

மருந்து கலந்த நிடால் முகப்பரு கிரீமை 7 நாட்கள் உபயோகித்துப் பாருங்கள். பரு, கரும்புள்ளிகள், சினப்பு, இவைகள் சொட்டையோ, தடமோ ஒன்றுமில்லாமல் உதிர்ந்துவிடும். சருமமும் புத்துயிரளிக்கப்பட்டு பிரகாசமடைவதைக் காண்பீர்கள்.

கிருமி நாசினி கலந்துள்ளதால் நிடால் டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுகிறது. நறுமணமுள்ளது. யுவர்களுக்கும் பெண்களுக்கும் ஏற்றது.

உபயோக முறை டப்பாவில் அடங்கியுள்ளது.





Nital

MEDICATED PIMPLE CREAM

நிடால் முகப்பரு கிரீம்




7 நாள் முகப்பரு சிகித்சை

தயாரிப்பாளர் : கொச்சின் பாம் பிரைவேட் லிட்., சுவாதன ஹவுஸ், மந்த்ரா ரோடு, கொச்சி 2.

சென்னை, மைசூர், ஆந்திர, கேரள பிரதேசங்களுக்கு பிரத்யேக விநியோகஸ்தர்கள் :

கணபதி & கம்பெனி, 103-104, லிங்கி செட்டி தெரு, த. பெ. 1986, சென்னை 1.

எல்லா பிரபல மருந்து கடைகளிலும் கிடைக்கும்



வீணான மனக்காட்டு!

அமெரிக்க அறிஞர் பெஞ்சமின் பிராங்க்ளினை அவருடைய உறவினர் ஒருவர் அடிக்கடி கடன் கேட்டுத் தொல்லை தந்து வந்தார். பல தடவை களில் பெஞ்சமின் கடன் தந்திருக்கிறார். ஒருநாள் அவருக்கு 50 டாலர் தேவை என்று வந்தார். அதையும் அவர் தட்டாது தந்தார்.

தொகை அதிகமாக இருக்கவே, உறவினருக்கு மனக்கொன்று வாட்டியிருக்க வேண்டும். ஆகவே, பெஞ்சமினிடம் ஒரு காகிதமும், ஸ்டாம்பும் கொடுக்கும்படியும், தாம் ஒரு புரோ நோட்டு எழுதித் தருவதாகவும் கூறினார்.

"என்ன! என் பணத்தை வீணாக்குவது போதாது என்று என் காகிதத்தையும், ஸ்டாம்பை யும் சேர்த்து வீணாக்கப் பார்க்கிறாயா?" என்று கேட்டார் பெஞ்சமின்!

- இ. முத்துக்குமரன்

"ஆனால்... எனக்குக் கூட்டத்திலே — இட் டத்திலேயெல்லாம் பேச வராதுங்களே!"

"அதைப் பற்றி நீ கவலைப்படாதே. நீ அங்கே என்ன பேசணுங்கிறதை நாங்கள் சொல்லித் தரோம். உண்மையிலே எங்களுக்கு உன் குரல் ஒன்றுதானே வேணும்!"

பொய் இல்லை. அவர்கள் சொன்னது மெய் தான். மின்சாரம் இல்லாததனால் ஒலி பெருக்கி இயங்கவில்லை. மக்களோ மெது வான குரலில் பேசுகிறவர்களின் பேச்சைக் கேட்டு அலுத்துக் கொண்டார்கள், 'என் னடா பேசுகிறான் இவன், ஒன்றும் புரியாமல்' என்று! இந்த ஒரு விஷயத்திலே கோவிந்த னின் கனத்த குரல் பரவி ஒலித்து வெற்றி காணக் கூடியது என்பதை அவர்கள் கண் டார்கள். அதோடு கோவிந்தனுக்குக்கூடத் தன் குரலில் ஓர் ஈடுபாடு, பற்று. தானே பேசித் தானேகூடக் கேட்டுக் கொண்டிருக்க விரும்பினான் அவன். அதனால் அன்று இரவுக் கூட்டத்தில், அவ்விருவரும் அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருந்ததைக் காட்டிலும் சற்று அதிகமாகவே பேசி விட்டான். இரண் டொரு துணுக்குகளைத் தானாக இட்டுக் கட்டி அவன் அந்தக் கூட்டத்தில் உதிர்த் தான். அவை அந்த இடத்துக்கு உகந்தவை யாகவும் அமைந்து விட்டன. கடைசியில் அன்றைய கூட்டமும் பேச்சும் வெற்றிகர மானவை என்றும் பெயர் வாங்கின. அழகான ஜவாஹர் கோட்டு அணிந்த வாலிபர் - பின் னால் அவர் பெயர் காளி சரண்வர்மா என் றும், நகரசபைக் கவுன்ஸிலர் என்றும் தெரிய வந்தது — கோவிந்தனின் முதுகைத் தட்டிக் கொடுத்துக் கூறினார்: "இன்றிலிருந்து நீயும் ஒரு 'லீடர்' ஆகிவிட்டாய் அப்பனே!"

கோவிந்தனும் மகிழ்ந்து போய், "எச மானே! லீடர் என்று ஒருவன் ஆகிவிட்டால் அவனிடம் ஒரு நாற்காலி இருக்கும் என்று கேள்விப்படுகிறேனே! ஆனால் என் வீட்டில் ஒரு நாற்காலிகூட இல்லையே!" என்றான்.

காளி சரண்வர்மா அன்றைக்கே கையோடு கையாக என்னைக் 'குப்தா பர்னிசர் மார்ட்'டி லிருந்து விலைக்கு வாங்கினார். அதே கையோடு கோவிந்தனின் வீட்டுக்கும் அனுப்பி வைத் தார். கோவிந்தன் என் மேல் முதன் முறை யாக உட்கார்ந்து அளவிலாது மகிழ்ந்து போனான். தனது தந்தை, தாய், தம்பிக் கெதிரே கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்து தன் பெருமையை விவரிக்க லானான்:

"ஆமாம், ஐயாயிரம்னு ஐயாயிரம் பேர் இருந்தாங்க. எனக்குப் பூமாலை போட் டாங்க. நான் இனி மேல் லீடராக்கும்!"

அவன் தந்தை பிச்சை அப்பொழுது தான் எருமையைக் கறந்துவிட்டு வந்திருந் தான். எதுவும் தலைகால் விளங்காமல் தனய னைப் பார்த்தான். பிறகு பால் செம்பைக் குழாயடியில் வைத்துவிட்டு, "குழந்தாய்! 'லீடர்'லே எல்லாம் என்ன அப்பா இருக் கிறது! இரண்டு நாள் வாழ்வு அதெல்லாம்! அப்புறம் 'லீடர்' எல்லாம் இருக்கிற இடம் தெரியாமல் போய் விடும். பால் பாலாக, தண்ணீர் தண்ணீராகப் பிரிந்துவிடும். என்னைக் கேட்டால் நம்முடைய இந்தக் குடும்பத் தொழில்தான் நல்லது என் பேன். இதிலே ஒரு முறை பாலையும் தண்ணீரையும் கலந்து விட்டால், அப்புறம் ஆண்டவனே வந்தாலும்கூடப் பிரித்தெடுக்க முடியாது!" என்றான்.

பிச்சை வெகு நேரம் வரையில் பால் செம் பில் விழுந்து கொண்டிருந்த குழாய் நீரைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தச் செம்பு வழிய வழிய நிறைந்ததும், அதை எடுத்து நகர்த்தி விட்டு, இன்னொரு செம்பைக் குழாயடியில் நீர் பிடிக்க வைத்தான்.

கோவிந்தன் முடியாது என்பது போல் தலையாட்டி விட்டான். "அப்பா! நீ செய் கிற வேலையிலே மரியாதை மட்டு கிடையாது. நான் மதிப்பும் மரியாதையும் உள்ள வேலை தான் பார்க்க விரும்புகிறேன். லீடர் வேலை யைக் காட்டிலும் வேறு எந்த வேலைக்கு மதிப்பு இருக்கிறது என்று நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

பிச்சை வாயடைத்துப் போய் விட்டான். சரியாகச் சொல்லி விட்டானே பையன்! எப்படி அவன் பேச்சைத் தவிர்க்க முடியும்? கோவிந்தனின் சிம்மக் குரல், உ.பி.க்காரர்க ளின் எதிரிகளைக் குலைநடுங்க வைத்துவிட்டது. உ. பி.க்காரர்களின் ஊர்வலத்தில் நாளுக்கு நாள் மக்கள் எண்ணிக்கை வளரலாயிற்று. கடைசியில் ஒரு நாள் 'ஷுகர் பாக்டரி

மராட்டியர்களுக்கே' என்று கோஷமிடும் கோஷ்டியின் தலைவர் பாபு ஹிம்மத் ராவ் பண்டேர்கார் இரவு பத்து மணி சுமாருக்குக் கோவிந்தனின் வீடு தேடி வந்தார். அப்பொழுது கோவிந்தன் என் மேல் சப்பணம் கட்டிக் கொண்டு உட்கார்ந்து தன் வீட்டுக்காரர்களிடமே தற்பெருமையடித்துக் கொண்டிருந்தான். ஹிம்மத்ராவ் பண்டேர்கார், ''ஆமாம், இந்த உ.பி.க்காரர்கள் உனக்கு என்ன தருகிறார்கள்?'' என்று கேட்டார்.

''ஒரு 'ஸ்பீச்'சுக்கு ஐந்து ரூபாய்!''

''நாங்கள் பத்து ரூபாய் தருகிறோம். எங்கள் வேலையைச் செய்வாயா?'' என்று கேட்டார் பண்டேர்கார்.

'' தாராளமாக! இதற்குப் போய்க் கேட்பானேன்?'' என்ற கோவிந்தன் குரலில் மகிழ்ச்சி பொங்கக் கூறினான்: ''உ.பி.க்காரர்கள் ஐந்து ரூபாய் தருகிறார்கள். அதற்கு முன்னால் உண்மையான பஹாரன் புகையிலை — நம்பர் ஒன் பீடிக்காரர்கள் இரண்டு ரூபாய்தான் தந்தார்கள். நீங்களோ பத்து ரூபாய் தருகிறேன் என்கிறீர்கள். எனக்கு என்ன, மூஞ்சியை திரும்பித் திரும்பிப் போயிடுச்சா, உங்க வேலையைச் செய்ய மாட்டேன்னு சொல்ல?''

அன்று முதல் கோவிந்தன் 'சர்க்கரை ஆலை மராட்டியர்களுக்கே' கோஷ்டிக்கு வேலை செய்யத் தொடங்கி விட்டான். அதே பேச்சு, அதே குரல், அதே கோவிந்தன்! ஒரு வேறுபாடு — அப்பொழுதுக்கும், இப்பொழுதுக்கும் என்னவென்றால், முன் எங்கெல்லாம் உ. பி.க்காரர்கள் என்ற சொல் வந்ததோ, அங்கெல்லாம் மராட்டியர்கள் என்று வருகிறது. பாபு ஹிம்மத் ராவ் பண்டேர்கார் கோவிந்தனுக்குத் துணிவை உரம் ஏற்றினார். பெருங்கூட்டத்தில் அவனைத் திருவாளர் கோவிந்தராம் என்று அறிமுகப் படுத்தினார். நெறிபிறழாத நேர்மையாளர், நியாயம் தவறாத உ. பி.க்காரர் என்றெல்லாம் பட்டம் சூட்டிப் பெருமைப்படுத்தினார்.

கோவிந்தன் இல்லை, இல்லை, கோவிந்தராம் கேட்டுக் கொண்டதன் பேரில் இப்பொழுது பண்டேர்கார் அவனுக்கு ஒரு மேஜையும் வாங்கிக் கொடுத்தார். அது எனக்கு எதிர்த்தாற்போல் போடப்பட்டது. என் முதுகுக்கு நேர்த்தியான வழுவழுப்பான தோலுறை தைத்துப் போடப்பட்டது. இன்றும்கூட அது என் மீது இருப்பதை நீங்கள் காணலாம். கோவிந்தன் என் மீது அமர்ந்து கால்களைத் தூக்கி மேஜை மேல் போட்டுக் கொண்டு வீட்டார்களுக்குத் தன் வெற்றிக் கதையைக் கூறுவான். தெருவோர்களிடையே தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வான். நாளடைவில் தெருவார்களும் அவனிடம் அடங்கி நடக்கலானார்கள்; அவனுக்கு மரியாதை செலுத்தலானார்கள்.

கோவிந்தராமின் தலைமை இப்பொழுது சுடர்விட்டு ஒளிவீசலாயிற்று. முதலில் உ. பி.க்காரர்களுக்கும் அடுத்தபடியாக மராட்டியர்களுக்கும் பணி(?) ஆற்றியதனால், நகரம் முழுவதிலுமே அவன் புகழ் பரவி விட்டது. இரண்டொரு முறை அவன் இப்படிக்கூடச் செய்ததுண்டு. அதாவது மாலைக் கூட்டம் ஒன்றில் உ. பி.க்காரர்களின் சார்பாகப் பேசுவான். இரவுக் கூட்டத்தில் மகாராஷ்டிரர்களுக்கு ஆதரவு தேடுவான். ஆனால் ஒன்று. இருவரிடமும் பணம் வசூலிக்கத் தவற மாட்டான். இதையறிந்த ஒரு சிலர், ''என்னப்பா, இது? இப்படிச் செய்யலாமா?'' என்று கேட்டார்கள். அதற்கு அவன் என்ன பதில் சொன்னான், தெரியுமா? ''சர்க்கரை ஆலை மராட்டியர்கள் பகுதியில் திறக்கப்பட்டால் என்ன, அல்லது உ.பி.க்காரர்கள் தொகுதியில் நிறுவப்பட்டால் என்ன? இருக்கப் போகிறது ஹேமபுரியில்தானே?'' தகர்க்க முடியாத தர்க்கம்தானே இது?

பண்டேர்காரும் அவனை அதிகமாகக் கடிந்து கொள்ளவில்லை. மின்சார இலாகாவின் வேலை நிறுத்தம் 'வாபஸ்' வாங்கப்பட்டு நகரத்துக்கு மின்சார விநியோகம் கிடைத்திருந்தது காரணமல்ல; அதைவிட மேலான காரணமொன்று இருந்தது. மைக்கும் ஒலி பெருக்கியும் வாடகைக்கு வாங்கி வருவதென்றால், ஐம்பது — அறுபது ரூபாய்க்குமேல் பழுத்துவிடும் என்ற நிலை. எனவே, பத்து ரூபாய்க்கு அதைக் காட்டிலும் உயர்ந்த மனித ஒலிபெருக்கியே கிடைப்பதென்றால், வாய்ப்பைக் கைநழுவ விடலாமா?

ஆனால் பதினைந்து இருபது நாட்களுக்குப் பின் தலைவர் கோவிந்தனின் மவுசு நுரை போல் அடங்கி விட்டது. உ. பி.க்காரர்களும் மராட்டியர்களும் அன்றாடம் போடும் கூச்சலையும் சண்டையையும் கண்டு சலித்துப் போய் அரசாங்கம் ஹேமபுரியில் சர்க்கரை ஆலை நிறுவுவதில்லை என்று தீர்மானித்து விட்டது. அந்தச் சர்க்கரை ஆலையைச்சென்னை ராஜ்யத்தில் திறப்பது என்றும் முடிவு செய்தது. இப்படியாகத்தானே ஹேமபுரியில் மற்றோர் ஆலை உருவாவது தடைப்பட்டது. ஆம், இந்த நிகழ்ச்சிக்குப்பின் நிச்சயமாக ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. அது என்ன, தெரியுமா? ஒன்றுக்கு இரண்டாகப் புதிய பைத்தியக்கார விடுதிகள் நிறுவப்பட்டன நகரத்தில்! அத்தியாவசியத் தேவையாகி விட்டதே! திறக்காமல் என்ன செய்வது?

இந்த நிகழ்ச்சிக்குப்பின் பல மாதங்கள் வரை கோவிந்தனுக்கு வேலை எதுவும் இல்லாமல் போய் விட்டது. 'பீடி நம்பர் ஒன்'னை இனி அவன் விற்பது என்றால் எப்படி? பீடிக்கார ஜம்மன், பெருகியிருக்கும் அவனது செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணி, நாளொன்றுக்கு மூன்று ரூபாய் தருவதாக ஆசை காட்டி அழைத்தான். ஆனால் அவன் அதை வேண்டாமென்று உதறி விட்டான். அவன் தந்தையும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். ஆனால் அவன் கேட்கவில்லை. ''இனி நான் பீடி விற்பதா? என்ன அப்பா சொல்கிறாய் நீ? நடக்காத காரியம் இது! இதைக் காட்டிலும் பெரிய வியாபாரத்தில்தான் நான் இறங்கப் போகிறேன். எங்காவது சர்க்கரை ஆலைக்கு மூடு விழா நடத்த வேண்டுமா? என்னைக் கூப்பிடு. எங்கேயாவது நாட்டை விலை கூற

வேண்டுமா? என்னை அழை. மக்களின் மானத்தை ஏலம் கூறிக் காற்றில் பறக்கவிட வேண்டுமா? நான் தயார்! ஆனால் இனி என்னால் பீடி விற்க முடியாது! கண்டிப்பாக முடியாது!'' என்று கூறி விட்டான்.

தந்தை வாயடைத்துப் போய்விட்டான். தன் பிள்ளை மீண்டும் வேலையற்றுப் போய் விட்டானே என்ற வருத்தம் அவன் மனத்தை அரித்தெடுத்தது. கடைசியில் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். தன் இனத்திலேயே ஒரு பெண்ணைத் தேடி அவனுக்கு மணம் முடித்து வைத்தான். மருமகளின் பெயர் ரூபா. நிரம்ப அழகில்லை; படித்தவளும் இல்லை என்றாலும் எருமைகளைக் கறப்பதில் அபார சாமர்த்தியம் பெற்றிருந்தாள் அவள். அதனால்தான் பிச்சு ரூபாவைத் தன் பிள்ளைக்குச் சம்பந்தம் செய்து கொள்ளுவதை விரும்பி ஏற்றான். அதோடு அவனுக்கு இன்னொரு யோசனையும் கூட. 'உதவாக்கரைப்பிள்ளை ஒரு வேலையும் செய்வதில்லை. கால் கட்டு என்று ஒன்று போட்டுப் பெண்சாதி என்று ஒருத்தியும் வந்துவிட்டால் ஏதாவது வேலை செய்து ஆக வேண்டும் என்ற எண்ணம் எழாதா?' என்று எண்ணினான்.

நாட்கள் ஓடின; மாதங்கள் ஓடின.

பார்க்கப் போனால் மூன்று ஆண்டுகளே கூட ஓடிவிட்டன.

ஆனால் கோவிந்தனுக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. ஹேமபுரியில் தொழிலாலை எதுவும் நிறுவப்படவில்லை; சண்டை சச்சரவும் ஏற்படவில்லை. இதற்கிடையில்தான் என் முதுகுத் தோல் தேய்ந்து விட்டது; எனது ஆசனமும் கிழிந்து விட்டது. கோவிந்தனும் முன்னைக் காட்டிலும் பருமனாக, முன்னைக் காட்டிலும் பொல்லாதவனாக, முன்னைக் காட்டிலும் சாமர்த்தியக்காரனாக ஆகிவிட்டிருந்தான். ரூபாவின் மடியில் மூன்று குழந்தைகள் விளையாடின. பிச்சுவின் வீட்டில் வேண்டிய அளவு பால் இருந்தது. தண்ணீரும் பஞ்சமின்றித் தாராளமாகக் கிடைத்து வந்தது. எனவே, கஷ்டம் சிறிதுமின்றிக் குடும்பம் நடந்து வந்தது. கோவிந்தனும் இன்று கொழுத்துத் தன் வட்டாரத்தில் காளையாகத் திரிந்து வந்தான்; தலைவன் என்னும் பெயரையும் காப்பாற்றி வந்தான்.

மூன்று ஆண்டுகளுக்குப்பின் கோவிந்தனுக்கு மீண்டும் நல்ல காலம் பிறந்தது. ஆம், நகரசபைத் தேர்தல் நெருங்கி வந்தது. ஊர்வலமும், கூட்டமும், கூச்சலும் கொம்மாளமும் மேள—தாளங்களோடு வேடிக்கை விளையாட்டுக்களும், பேச்சுக்களும் சொற்பொழிவுகளுமாக ஏக அமர்க்களப்பட்டது. இந்தத் தடவை கோவிந்தன் மிகச் சாமர்த்தியமாகப் பணியாற்றினான். எல்லாக் கட்சிகளையும் அவன் கூர்ந்து ஆராய்ந்தான். 'எ. போ. மு.' கட்சிக்குத்தான் வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதாக உணர்ந்தான். 'எதற்கும் போர் முரசு' என்னும் கோஷம் தான் அந்தக் கட்சியின் கொள்கை. அந்தக் கோஷத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லின் முதல் எழுத்தையும் எடுத்தாண்டு சுருக்கப்பட்டு 'எ.போ.மு.' என்று வழங்கலாயிற்று. கோவிந்தனுக்கு இந்தக் கட்சிதான் மிகவும்

மர்ம ரசிகர்கள்!

பம்பாயில் பல ஆண்டுகளுக்கு முன் னர் தமக்குக் கிடைத்த ஓர் அனுபவத்தைப் பற்றிச் சுவையாகச் சொல்லுவார் ரவி சங்கர்.

'ஸிதார்' இசையில் வல்லுநராக அவர் பெயர் பெறத் தொடங்கிய காலம். மத்திய பம்பாயில் அவருடைய கச்சேரி ஒன்று நடந்து கொண்டிருந்தது.

நள்ளிரவு; கேட்போர் உற்சாகம் குறைந்து வருவதாக ரவிசங்கருக்குப் புலப்பட்டது. சலசலப்பு, கெக்கெலித்தல், கொட்டாவி ஆகிய அறிகுறிகள் அதிகமாகத் தென்படவே, வேக வேகமாகத் தம் கச்சேரியை முடித்துவிட முயன்று கொண்டிருந்தார் ரவி.

என்ன ஆச்சரியம்! இதுவரை தெம்பில்லாது இருந்த ரசிகர் கூட்டத்தில் திடீரென்று ஓர் உற்சாகம் பிறந்து விட்டது போல் தோன்றிற்று. தொடர்ந்து அவர் வாசிக்க வேண்டுமென்று ஒருமுகமாகப் பொதுமக்கள் உரக்க வேண்டிக் கொண்டார்கள். ஒரு கலைஞரைத் தூண்டுவதற்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

பொழுது புலரும்வரை அற்புதமாக வாசித்துப் புளகாங்கிதம் அடைந்தார் ரவி சங்கர்.

ஆனால் ரசிகர்களின் உற்சாகம் திடீரென்று தம்மை ஊக்குவித்ததன் மர்மம் பிறகுதான் ரவிக்குத் தெரிய வந்தது.

பம்பாயில் (சென்னை போலவே) நள்ளிரவோடு நின்று விடுகிறது மின்சார ரயில். பிறகு அதிகாலையில்தான் ரயிலைப் பார்க்க வேண்டும். எனவே, ''அது வரை ரயில் நிலையத்தில் போய்க் காத்துக்கொண்டிருப்பதைவிட, கச்சேரியைக் கேட்டுக் கொண்டே இருந்துவிடலாம்'' என்று ரசிகர்கள் தீர்மானித்துக்கொண்டதில்தான் அவர்களுடைய உற்சாகத்தின் மர்மம் இருந்தது. இப்படிச் சொல்லும் ரவிசங்கருக்கு அந்தச் சம்பவத்தைப் பற்றி இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

''வைரஜன்''

ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா



பிடித்திருந்தது. ஏனெனில், அதுவே அவன் மன நிலைக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. அந்தக் கட்சியில் சேருவதற்கு முன்னால், அந்தக் கட்சி நடத்திய கூட்டமொன்றுக்குச் சொற்பொழிவைக் கேட்கப் போனான் அவன். ஓர் இளைஞன் கோபத்தினால் முகம் சிவக்கக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தான்: ''இலங்கைக் காரர்கள் இந்தியர்களுக்குப் பிரஜாவுரிமை கொடுக்க மறுக்கிறார்களே, என்ன செய்வது?''

''போர் முரசு கொட்டு!'' கூச்சலிட்டது கும்பல்.

''தென்னாப்பிரிக்காவிலே நம்மைக் கறுப்பன் என்று கூறி அவமானப்படுத்துகிறார்களே, என்ன செய்வது?''

''கொட்டு போர் முரசு!'' கும்பலின் கூச்சல் இன்னும் ஓங்கி ஒலித்தது.

இந்த மாதிரித்தான் ஒரு நாள் பார்க்கில் தான் பிரமுகர் ஒருவர், கையை முஷ்டியாக மடக்கிக் காட்டி ஆட்டி ஆட்டி ஆக்ரோஷத்தோடு பேசினார். கோவிந்தன் அவருடைய பேச்சின் கருத்தைப் புரிந்து கொண்டானோ இல்லையோ, வலியச் சென்று தீர்ப்பளிக்கும் பொறுப்பைத் தன் கையில் எடுத்துக் கொண்டான்.

மறு நாள் அவன், 'எ. போ. மு.' கட்சியின் கூட்டமொன்றுக்குக் கையில் துப்பாக்கியோடு ஆஜரானான். மேடையேறி ஆவேசம் பொங்கப் பேசியவன் தன் பேச்சுக்கிடையில் இந்தச் சொற்களைப் புகுத்தினான்: ''நம்மைக் குத்த வருபவர்களை நாம் துப்பாக்கிக்கொண்டு தாக்குவோம்! இதயத்தைச் சல்லடையாகத் துளைப்போம். நாமார்க்கும் அஞ்சோம்!''

கூட்டமும் வெறியாட்டம் ஆடியது. 'கோவிந்தராம் வாழ்க!' என்னும் வாழ்த்தொலி வானை அளாவி நின்றது. மக்கள் வெறியுணர்வில் தலைக்குத் தலை என்னவெல்லாமோ கோஷங்கள் இடலாயினர். கோவிந்தராம் பொதுமக்களின் பிரியத்துக்குப் பாத்திரமானான். எ. போ. மு. கட்சியின் பெருந்தலைகள் நகரசபைத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் பட்டியலில் அவன் பெயரையும் சேர்த்துக் கொள்ள முடிவு செய்தன.

தன் வட்டத்து வேட்பாளனாகத் தேர்தலுக்கு நின்றான் கோவிந்தராம். ஆனால் வெற்றி கிடைப்பதற்கு முன்பே வேறு ஒன்று நிகழ்ந்து விட்டது. அவன் கையில் துப்பாக்கியோடு சொற்பொழிவாற்றிய சில நாட்களுக்கெல்லாமே போலீசார் அவனைக் கைது செய்தார்கள். நிறைந்த கூட்டத்தில் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தினான் என்று குற்றம் சாட்டப்பட்டதோடு, துப்பாக்கி லைசென்ஸ் அவனிடம் இல்லை என்றும், அவன் பேச்சு நாட்டோடு நாட்டினையும் மக்களோடு மக்களையும் மோத விட்டுத் துவேஷ உணர்வைத் தூண்டிவிடக் கூடியது என்றும் தாங்கள் சாட்டிய குற்றத்துக்கு வலுத் தேடிக் கொண்டார்கள்.

கோவிந்தராம் இரண்டரை ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுக் கம்பி எண்ணப் போய் விட்டான். இங்கு அவனுடைய எ. போ. மு. கட்சியும் தேர்தலில் தோல்வியைத் தழுவியது. வெற்றி வேறு ஒரு கட்சிக்கே கிடைத்தது. 'எவரிடமும் சமாதானமாகப் போ' என்பது அதன் கோஷம். சுருக்கமாக 'எ. ச. போ.' கட்சி என்னும் பெயரைச் சூடிக் கொண்ட கட்சி அது.

ஓர் ஆழ்ந்த நீண்ட பெருமூச்சுவிட்டு நாற்காலி மேலும் கூறலாயிற்று: அந்த இரண்டரை ஆண்டுகளில் என் வடிவமே அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி உருமாறி விட்டது. என் மீது சமயா சமயங்களில் பால் குடம், தண்ணீர்க் குடம் ஆகியவை வைக்கப்பட்டன. சிற்சில சமயங்களில் சிறு குழந்தைகள் என் மீது ஏறி அமர்ந்து மலஜலம் கழித்து விடும். சில சமயம் பிராயம் முதிர்ந்தவனான பிச்சை தன் அழுக்குத் துணியினால் முதுகைச் சொறிந்து கொண்டு, அந்த இன்பக் கிளுகிளுப்பில் என் கைப்பிடிகளையே தபலாவாக நினைத்துத் தாளம் போட ஆரம்பித்து விடுவான். தாளத்துக்கேற்பத் தனக்குத் தோன்றியபடி பாடவும் தொடங்கி விடுவான். ஒரு தடவை குழந்தைகள் என்னைக் குப்புறப் போட்டு இங்கும் அங்கும் வண்டி இழுக்கலாயின. இப்படி இழுக்கும் பொழுது ஒரு நாள் வீட்டுப் படிகளில் உருண்டு விட்டேன். என் கால் முறிந்து விட்டது. அங்கே என்னைக் கவனிக்க நாதி யார் ? கோவிந்தனோ சிறையில் கிடந்தான். கடைசியில் கிழவனான பிச்சையே தெருவில் உள்ள ஒரு கற்றுக் குட்டித் தச்சனைக் கூப்பிட்டு என்னை எப்படியோ 'ஒக்க'ப் பண்ணி உட்காரத் தகுதியுள்ளதாக ஆக்கி விட்டான். இந்த நான்காவது கால் அந்தத் தச்சன் செய்ததுதான். இந்த விநோதமான வாழுமை நிறங்கூட அவன் ஏற்றியதுதான்.

அந்தக் கதை எதற்கு? இரண்டரை ஆண்டுகள் எப்படியோ அழுது புலம்பிக் கொண்டு ஓடி விட்டன. கோவிந்தன் சிறையிலிருந்து விடுபட்டு வந்தான். ஆனால் அவன் இப்பொழுது பழைய கோவிந்தனாக இல்லை. குண்டர்களோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு வந்தான். சிறையிலிருந்து வெளி வந்ததும், 'எ. போ. மு.' கட்சி அதாவது 'எதற்கும் போர் முரசு' கொட்டும் கட்சியாளர்கள் மாலை போட்டு வரவேற்றார்கள்; பாராட்டுரை வழங்கினார்கள். அவன் நாட்டுக்காகச் செய்த தியாகங்களைப் பாமாலையாக்கிப் . பாடினார்கள். கோவிந்தராம் இரண்டே வார்த்தைகளில் நன்றி தெரிவித்தான். பின்னர் உடல்நலக் குறைவைச் சுட்டிக் காட்டி வீட்டிலேயே அமர்ந்து கொண்டான்.

நகர சபைத் தேர்தல் மீண்டும் தலைகாட்டியது. கோவிந்தராம் தனக்கு வேண்டியவர்களின் உதவி கொண்டு தன் வீட்டுக்கு முன்னே ஒரு 'ஹால்' கட்டிக் கொள்ள உத்தரவு பெற்றான். தொலை பேசி வசதியும் செய்து கொண்டான். தன் கொலு மண்டபத்துக்குப் புதுப் புது நாற்காலி — மேசைகள் தருவித்தான். ஆனால் என்னை மட்டும் மாற்றவில்லை. முன் அறையில் உள்ள எல்லாப் பொருள்களும் மாறி விட்டன. நான் மட்டும் அவனுடைய பழைய *நாற்காலியாகவே இருந்தேன். கோவிந்தராம் அடிக்கடி



என்னைத் தட்டிக் கொடுத்துக் கூறுவான்: ''இதுதான் என் தலைமைப் பதவியின் முதற் சின்னம். எனது நல்ல கெட்ட நாட்களின் தோழன். இதை நான் எந்த நாளும் மாற்ற மாட்டேன்.''

மக்கள் - அரசாங்க அலுவலகங்கள், தொழிற் பேட்டைகள் எங்கு பார்த்தாலும் தானாகவே அவனுக்கு ஆதரவு பெருகலாயிற்று. அவன் மக்களுக்குப் பலவகைகளிலும், ஒன்றா, இரண்டா; எண்ணவிட? — பணிகள் புரியலானான். அதே போல் மக்களிடமிருந்தும் பல காரியங்களைச் சாதித்துக் கொண்டான். நாளடைவில் நகரத்தின் மதிப்புக்குகந்த பெரும் புள்ளிகளில் ஒருவனாகவும் கருதப்பட்டான்.

இந்த முறை அவன் நகர சபைத் தேர்தலில் 'எ. போ. மு.' கட்சியிலிருந்து விலகி 'எ. ச. போ.' கட்சிக்குத் தன் ஆதரவைத் தந்தான். அந்தக் கட்சியும் அவனுக்கு ஆதரவு தந்து கட்சி வேட்பாளராக நிறுத்தியது. 'எவரிடமும் சமாதானமாகப் போ' என்னும் கொள்கையை அது வற்புறுத்தியதனால், கோவிந்தனின் முகம் எந்த நேரமும் எண்ணெய் வழியலாயிற்று. எனவே, அவன் முகம் வழுவழுவென்று மொழு மொழுப்பாகியது. எந்த நேரத்திலும் ஓர் அசட்டு முறுவல் அவன் முகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. சுருக்கமாகச் சொல்லப் போனால், அவன் முகம் முகமாயிராமல், ஏதோ வனஸ்பதி எண்ணெய் டின்னில் ஒட்டப்பட்ட லேபிளைப் போலக் காட்சி அளித்தது.

கொஞ்ச நாட்களுக்கெல்லாம் தேர்தல் முடிவு வெளியாயிற்று. இம்முறை எ.போ. மு. கட்சியோ, எ. ச. போ கட்சியோ வெற்றி காணவில்லை. பதிலாக, 'ச. ச. ச.' கட்சி வெற்றி கண்டது. 'சண்டை போட வேண்டிய சமயத்தில் சண்டை போடு; சமாதானமாகப் போக வேண்டிய சமயத்தில் சமாதானமாகப் போ' என்பதே அதன் கொள்கை. எனவே, கோவிந்தராம் நகர சபை அங்கத்தினராக ஆக முடியாமற் போய் விட்டது. ஆனால் அவனுக்கு அதன் காரணமாக அதிக மன வருத்தம் ஏற்படவில்லை. காரணம், அவன் சரியான வழியில்தான் போய்க் கொண்டிருந்தான். தலைமை என்பது என்ன கிள்ளுக்கீரையா? அதன் அஸ்திவாரம் பலமானதாக இருக்க வேண்டாமா? மேல் எழுந்தவாரியாகப் போடும் அஸ்திவாரம் அதிக நாட்கள் தாக்குப் பிடிக்காதே. பல்வகையான மக்களோடு தொடர்பு பூண்டு பழகினால்தானே பயன் தரும்? எனவே, யார் யார் எதை எதைக் கேட்கிறாரோ, அதை அதை அவர்களுக்கு வழங்க முயல வேண்டும். பெரும்பான்மையான மக்களை வாக்குரிமை வழங்கும் போது மகிழ்விக்கக் கூடிய கட்சி ஒன்றுதான் வெற்றி காண முடியும். இதற்குக் கொள்கைகள் உயர்ந்தனவாகவும், அழகியனவாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் ஒன்று. அதற்குள் ஒரு சிக்கலான முடிச்சு இருக்க வேண்டும். என்ன முயன்றாலும் அவிழக் கூடாது. அப்படியே அவிழ்ந்தாலும் புரியக் கூடாது.



ஔரங்கசீப் தம் மகனுக்கு அருளிய கற்கண்டு மொழி என்ன என்று தெரியுமா?

(தெரியாவிட்டால் அடுத்த பக்கம் பார்க்கவும்)

தேவைக்குத் தக்கபடி சுழற்றி மயக்கி மாற்றிக் கொள்ளக் கூடியதாகவும் அது இருக்க வேண்டும் என்பதையும் அநுபவத்தில் கண்டறிந்தான் கோவிந்தராம்.

மிகவும் மூளையைச் செலவிட்டு யோசித்து யோசித்து ஒரு புதுக் கட்சியை உருவாக்கினான் கோவிந்தராம். 'உங்களுக்கு எதில் நன்மை? முதலில் அதைக் கவனியுங்கள்!' என்பதே அதன் கோட்பாடு. 'உ. ந. க.' —அதாவது 'உங்களுடைய நன்மைக் கட்சி' தோன்றி விட்டது.

நகரசபைத் தேர்தலின் போது கோவிந்தராம், தான் ஆற்றிய சொற்பொழிவில் கூறியதாவது: இந்தத் தேர்தலில் எங்கள் கட்சி, உங்களுக்கு எது நன்மை பயக்குமோ, அதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குவதென முடிவு செய்திருக்கிறது. நீங்கள் வாக்குரிமை வைத்திருப்பவர்கள். நகரவாழ் மாந்தர்கள். கேட்கப் போனால் இந்த நகரத்தின் உண்மையான சொந்தக்காரர்கள் நீங்கள்தான். உங்களுக்குப் பயன் தருபவை என்ன, என்ன? யோசித்துப் பாருங்கள். வருமான வரியை அதிகரிப்பதா, குறைப்பதா? நகரத்துச் சாலைகளை அகலப்படுத்துவதா? குறுகலாக்குவதா? மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதா? ஏற்றுவதா? சிப்பந்திகளின் சம்பளத்தை உயர்த்துவதா, கட்டுப்படுத்துவதா? எங்கள் கட்சி உங்களுக்கு எதில் நன்மையோ, அதையே செய்வது என்று கங்கணம் கட்டிக் கொண்டு இத்தேர்தலில் குதிக்கிறது. உங்களை நாங்கள் வலுக் கட்டாயப்படுத்த வில்லை. உங்களுக்கு எது நன்மையோ, முதலில் அதைக் கவனியுங்கள்!''

சரியான பேச்சு! வார்த்தைக்கு வார்த்தை உண்மை! பொது மக்களுக்குப் பிடித்துவிட்டது. நகரசபைத் தேர்தல் நடக்கும் போதே தெளிவாகத் தெரிந்து விட்டது. எந்தக் கட்

கற்கண்டு மொழி !

"நீ கற்கண்டு போல இனிப்பாகவும் இருந்து விடாதே. வேப்பங்காய் போன்று கசப்பாகவும் இருந்துவிடாதே. கற்கண்டு போன்று இனிப்பாக இருப்பின் உன்னை எல்லோரும் தூக்கி விழுங்கி ஏப்பம் விட்டு விடுவார்கள். வேப்பங்காய் போன்று கசப்பாக இருப்பின் எல்லோரும் 'தூ தூ' என்று உன்னைத் தூற்ற ஆரம்பித்து விடுவார்கள்." இதுவே ஔரங்கசீப் தம் மகனுக்கு அருளிய உபதேசம்.

தகவல் : ப. ஜெயராஜா

சிக்கு வெற்றி கிடைக்கும் என்று! 'உங்களுக்கு எதில் நன்மை? முதலில் அதைக் கவனியுங்கள்!' — மக்களிடையே இதைப் பற்றியே பேச்சாகி விட்டது.

இதன் நிகழ்ச்சி நிரல்களிலே கோவிந்தராம் சலவைத் தொழிலாளிகளின் 'ரேட்'டை ஏற்றவும் சவுக்காரத்தின் விலையைக் குறைக்கவும் சம்மதம் தெரிவித்தான். குழாய்களில் வரும் நீரின் வேகத்தை அதிகரிக்கவும் தண்ணீர் வரியைக் குறைக்கவும் ஒப்புக் கொண்டான். தோல் மலிவாகவும் அதிகமாகவும் கிடைக்க வழி செய்யப் போவதாக தறி ஜனங்களுக்கு உறுதி கூறினான். வீட்டுச் சொந்தக்காரர்களை வீட்டை ரிப்பேர் செய்யும் சாக்கில் வாடகையை உயர்த்திக் கொள்ளலாம் என்று ஊக்குவித்தான்.

சில நாட்களில் தேர்தல் முடிவு வந்தது. அதிக வோட்டுக்கள், 'உங்களுக்கு எதில் நன்மையோ, அதை முதலில் கவனியுங்கள்' கட்சிக்கே கிடைத்தது. அதன் அங்கத்தினர்களே பெரும்பான்மையாக நகரசபை நுழைவு பெற்றார்கள். எல்லோரும் சேர்ந்து ஒருமித்த முடிவாக கோவிந்தராமையே நகரசபைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்தார்கள்.

முதல் கூட்டத்திலேயே 'உங்களுக்கு எதில் நன்மை?' என்ற கொள்கையை எப்படி அமல் நடத்துவது என்ற விஷயம் ஆலோசனைக்கு வந்தது. எல்லோரும் வெகு நேரம் வாதித்தார்கள். ஒருவன் ஒன்று சொன்னால் இன்னொருவன் வேறு ஒன்று சொல்லுவான். இப்படியாக ஆளுக்கு ஆள் யோசனை கூறத் தொடங்கவே, சொல்லை எப்படிச் செயலாக்குவது என்பது யாருக்குமே புரியாத சிக்கலாகி விட்டது. கடைசியில் கோவிந்தராம், 'உங்களுக்கு எதில் நன்மை?' என்ற கோட்பாடே எனக்குத் தவறாகப் படுகிறது. இதை மாற்றிவிட வேண்டும். அதற்குப் பதிலாக, 'நமக்கு எதில் நன்மை?' என்று மாற்றிச் செயல்பட வேண்டும். இரண்டெழுத்தைக் குறைத்து இரண்டெழுத்தை மாற்றிப் போட்டால் அதாவது 'உங்களுக்கு' என்பதை 'நமக்கு' என்று ஆக்கிவிட்டால் பிரச்னை சுலபமாகத் தீர்ந்துவிடும். உ. ந. க. என்பது நமது நன்மையைக் கோரும் ந. ந. க.வாகி விட வேண்டும்" என்றான்(ர்).

அவ்வளவுதான்! நாலு திசைகளிலிருந்தும் புளியம்பழம் உதிருவதுபோல் கைதட்டல் ஏற்பட்டது. 'ஆகா! நம் நகரசபைத் தலைவர் எத்தனை அழகாகத் தீர்ப்பளித்து விட்டார்! எத்தனை சாதுரியமான வழியைக் கண்டு பிடித்து விட்டார்! ஆகா! ஆகா! கோவிந்தராமுக்கு. ....ஜே!'

அன்று முதல் கோவிந்தராமின் கட்சிதான் நகரசபையைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறது. கோவிந்தராம் இப்பொழுது 'தலைவர் திலகம்' என்னும் அடைமொழிக்கு உரியவராக விளங்குகிறார். அவர் தமது தெருவை விட்டு விட்டார். சிவில் லைனில் மாளிகை கட்டிக் கொண்டு வாழ்கிறார். இரண்டாம் கல்யாணமேகூடச் செய்து கொண்டிருக்கிறார். இந்தப் புது அம்மாள் இந்தக் காலத்துப் புதுமாதிரியான 'பார்ஸி'களைப் போலவே புது நோக்குடையவர்; அழகுடையவர்.

என்னைப் பழைய வீட்டிலேயே விட்டு வரும் பொழுது கோவிந்தராமுக்கு மிகவும் மன வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் அவரது நாகரிக மனைவியாருக்கு வடிவம் கெட்ட என் உருவம் பிடிக்கவில்லை. தன் புது மாளிகைக்குத் திருஷ்டிப் பரிகாரமாகக்கூட வைத்துக் கொள்ள முடியாது என்று மறுத்து விட்டார். பாவம், தலைவர் என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அவள் பின்னால் சென்று விட்டார்!

அதற்குப் பின் பல ஆண்டுகள் நான் அந்தப் பழைய வீட்டிலேயே இருந்தேன். என் உருவம் முற்றிலும் மாறி, நான் எதற்கும் பயன்பட மாட்டேன் என்ற நிலை ஏற்பட்டு விடவே, ஒரு நாள் பிச்சு ஏலக்காரன் ஒருவனை அழைத்துவந்து என்னை 'அடிமாட்டு' விலைக்கு விற்று விட்டான். இருந்தாலும் விற்கும் பொழுது அவன் உள்ளத்திலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது. 'இது நமது மகனின் நாற்காலி அல்லவா?' என்று முனகினான். அவன் சொல்லில் ஏக்கம் கலந்து ஏலக்காரன் செவியிலும் ஒலித்தது.

அதைக் கேட்ட ஏலக்காரன், "உன் மகன் என்ன செய்கிறான்?" என்று கேட்டான்.

"நகரசபையின் தலைவனாக இருக்கிறான்!"

"அது சரி, என்ன செய்கிறான்?"

"யார் கண்டார்கள், என்ன செய்கிறான், என்று?" இவ்வாறு கூறிய பிச்சு மீண்டும் தொடர்ந்தான்: "ஆனால், இன்றும் அவன் பாலில் தண்ணீர் கலந்து விற்கிறான். புனையில் செய்யப்படாத ஒரு பொருளை 'நம்பர் ஒன் பீடி' என்று கூறி விற்கிறான் என்றுதான் நான் எண்ணுகிறேன்."

ஆம். நாற்றுக்கு நாறு உண்மையைக் கூறி விட்டான் பிச்சு.

ஏல விற்பனைக்குத்தான் வந்து சேர்ந்த கதையைத் தலைவனின் நாற்காலி சொல்லி முடித்ததும் அமைதி நிலவியது அங்கே.

ஆச்சரியகரமான, ஆனால் முழுக்க முழுக்க உண்மையான இந்தக் கதையைக் கேட்ட பிறகு பதில் பேச யாருக்குத்தான் நா எழும்?


கோபுர மார்க் பன்னீர்
சந்தனாதித் தைலம்
பேஸ் பவுடர்
லவ் பேர்ட்ஸ் பத்தி
K·T·R
K.T.R. வாசனாதி திரவியசாலை
விஜயபுரம் - திருவாரூர் - தமிழ்நாடு



40. பரமன் புண் ஆற்றிய பதிவிரதை

திருநாவுக்கரசரின் வரலாற்றிலேயே அப்பூதி நாயனாரின் வரலாறும் இணைந்து வந்து விட்டது. இனி திருநீலநக்க நாயனாரின் வரலாற்றுக்குச் செல்வோம்.

காவிரி பாயும் சோழவள நாட்டிலே அமைந்தது திருச்சாத்தமங்கை. 'ஒலி புனல்சூழ் சாத்தமங்கை' என்று நம்பியாரூரர் திருத்தொண்டத்தொகையில் அருளிச் செய்துள்ளார். இத்திருத் தலம் நன்னிலம் இரயில் நிலையத்துக்குக் கிழக்கே ஏழு கல் தொலைவில் உள்ளது.

இத்திருத்தலத்திலுள்ள கோயிலுக்கு அயவந்தி என்று பெயர். அயன் வந்தித்ததனால் அயவந்தி எனப்பட்டது. சுவாமி பெயர் அயவந்திநாதர். அம்பாள் பெயர் மலர்க்கண்ணியம்மை. நன்மை மிகுந்த அவ்வூரில் நறுநுதல் மாதர்கள், பூக்கள் நிறைந்த தடாகத்தில் நீராடுகின்ற போது, அன்னப் பறவைகளும் வந்து அவர்களுடன் நீராடும்.

திருச்சாத்த மங்கையில் வேதியர்கள் இடையறாது வேதங்களை அத்யயனம் செய்கின்றனர். அந்தணச் சிறுவர்கள் வேதம் பயில்கின்ற பொழுது, சாம வேதம் பாடுகிற பூவை என்கிற நாகணவாய்ப் பறவைகள் தாமும் அவ்வேதங்களைச் சொல்லுகின்றன — 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி சொல்லும்' என்பதே போல். சிறுவர்கள் பிழையாகக் கூறும் போது, பூவைப் பட்சிகள் திருத்தவும் செய்கின்றனவாம்.

நன்மை சாலும்அப் பதியினை நறுநுதல் மடவார்
மென்மலர்த்தடம் படியமற் றவருடன் விரவி
அன்னம் மூழ்துறை ஆடுவ; பாடுவ சாமம்
பன்மறைக் கிடையுடன் பயிற்றுவ பலபூவை

''பயில்வன'' என்று கூறாமல், ''பயிற்றுவ பலபூவை'' என்கின்றார் சேக்கிழார்.

அருள் நூல்களை ஆராய்ந்து பார்க்கின்றபொழுது அதன் சாரமாக விளங்கும் மெய்ப்பொருள் திருநீறேயாகும். உயிர்களைக் காப்பதும் திருநீறே. அதனால் அதற்கு ரட்சை என்ற ஒரு பெயரும் உண்டு. எனவே, திருச்சாத்த மங்கையில் வாழும் வேதியர்கள், திருநீற்றினைப் போற்றி, அதன் பெருமையை வளர்த்து, மூவகையான அக்கினிகளையும் வளர்த்தனர்.

மாதர்கள் தங்கள் கணவர்கள் வளர்க்கும் மூன்று அக்கினிகளை வளர்ப்பதோடு அமையாது, தமக்கே உரிமையாக விளங்கும் கற்புத் தீயையும் வளர்த்தார்கள் என்கிறார் சேக்கிழார். இந்த அரிய கருத்து மகளிர் மரபையே வாழ்விப்பதாகும்.



மாதரது கற்புத் தீ, கனலையும் தீர்க்கும் ஆற்றல் உடையது. கற்பு - கற்பிக்கப்படுவது; ஆன்றோர்களால் கற்பிக்கப்படுவது. கற்புத் தீயினால் தமயந்தி கணப்பொழுதில் வேடனை எரித்துச் சாம்பராக்கினாள்.

"சிறு விழிந்தான் சிலே வேடன் அவ்வளவில்
நீருக விழ்ந்தான் நிலத்து."

சீதாதேவியின் கற்புக் கனலால் கனல் வெதும்பியது. அக்கினிதேவன், அந்தத் தாயின் கற்புத் தீயினைக் கண்டு அஞ்சி, உடம்பெல்லாம் கொப்புளங்கள் தோன்ற வந்து அபயம் புகுந்தான்.

பெருமை பொருந்திய இத்திருச் சாத்த மங்கையில், நான்கு வேதங்களின் உட்பொருளை விளங்கச் செய்கின்ற நலமுடையவராகவும், ஆலமுண்ட நீலகண்டனார்பால் அடிமைத் திறம் பூண்டவராகவும் விளங்கினார் திருநீலநக்க நாயனார்.

"வேத உள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடி யாரையும் நயந்து
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும்" என்றே
காத லால்அவை இரண்டுமே செய்கருத் துடையார்

பொது நூலாகிய வேதம் 'சிவனைப் பூசனை செய்' என்று மட்டும் கூறுகின்றது. 'சிவார்ச்சனஞ் ஜன்ம' — (ஈசனை அர்ச்சிக்காத உடம்பில் தீ வை) என்று வற்புறுத்துகிறது. சிறப்பு நூலாகிய ஆகமம், பூசனை செய்யும் முறைகளை வகுத்துக் கூறுகிறது. ஆதலினால், 'மெய்த்த ஆகம விதிவழி வேதகாரணரை நித்தல் பூசனை புரிந்து' இவர் ஒழுகினார். சிவனடியார்களுக்குத்



■ அமெரிக்காவில் இரண்டு பேர்வழிகள் ஒரு ரயில்வேக் கம்பெனி மீது 10,000 டாலர் நஷ்ட ஈடு கோரி வழக்குப் போட்டார்கள். வழக்கமாக அவர்கள் ஜெயிக்கும் பந்தயத்தில் பணம் கட்ட முடியாமல் ரயில் வண்டி தாமதமாகக் குதிரைப் பந்தய மைதானத்துக்குப் போய்ச் சேர்ந்ததாம்!

- ஏ. கே. சுந்தரவல்லி



விநோத வழக்கு!

திருத்தொண்டுகள் யாவும் புரிந்து வந்தார்.

அன்று திருவாதிரை நாள். அது பரமனுர்க்கு உகந்த நாள் அல்லவா? அந்த நல்ல நாளில் திருநீலநக்கநாயனுர் தமது திருமாளிகையில் நித்தியவிதிப்படி பூசனை செய்தார். நைமித்திக விதிப்படி ஆலயத்துக்குச் சென்று இறைவரைப் பூசிக்க விரும்பினுர். வழிபாட்டுக்குரிய பொருள்கள் அனைத்தும் குறைவற எடுத்துக் கொண்டு, கோயிலுக்கு மனைவியாருடன் சென்ருர். அயவந்தியில் மேவும் அமுதத்தைக் கண்டு அயராத அன்புடன் தொழுதார். செந்திரு வனைய மனைவியார் அருகில் இருந்து, குறிப்பறிந்து ஏந்தித் தர அன்புடன் பூசனை புரிந்தார். எல்லையில்லாத தவமுடைய அந்த அந்தணர் பெருமான். பூசனை முடிந்தும் அன்பு நிரம்பாத திருநீலநக்க நாயனுர், நலம் தந்த நாதரை, வலம் வந்து வணங்கினுர்; துதி செய்தார். மறைகள் தேடும் மணிகண்டர் திருமுன் ஒருமைப்பட்ட உணர்வுடன் ஐந்தெழுத்தை ஓதி ஜபம் செய்து கொண்டிருந்தார். அருகில் நின்ற அம்மையார் இரு கண்களாலும் இறைவரை நோக்கி அன்பு செய்து கொண்டிருந்தார்.

அப்போது சிவபெருமானுடைய திருமேனியின் மீது ஒரு சிலந்தி விழ்ந்தது. அதனைக் கண்ட அம்மையார், சிலந்தியின் விடத்தினுல் இறைவர் திருமேனிக்குப் பங்கம் நேருமே என்று அஞ்சித் திடுக்கிட்டார். இளம் குழந்தை மேல் சிலந்தி விழுந்தால், தாய் எப்படித் தாங்காது ஓடி ஊதி அகற்றுவாளோ அது போல் விரைந்து சென்று அன்போடு சிலந்தியை வாயினுல் ஊதித் துமிந்தார்.

திருநீலநக்க நாயனுர் மனைவியாரின் அன்பை மனத்தில் கொள்ளாமல், ''இது பெரிய அநுசிதம்'' என்று வருந்தினுர். ''பெண்ணே! விமலர் மீது விழ்ந்த சிலந்தியை, வேறு முறையால் நீக்காமல் வாயினுல் ஊதி எச்சில்படுமாறு அநுசிதம் புரிந்து விட்டாயே? இது பெரும் பாவம். ஆதலினுல், உன்னை இனி யான் துறந்து விட்டேன்'' என்று கடிந்து கூறினுர்.

கதிரவன் மேற்கடலில் விழ்ந்தான். கணவனுர் தம்மை நீத்தது குறித்து வருந்திய அம்மையார் அஞ்சி ஒருபுறம் ஒதுங்கி நின்ருர். திருநீலநக்க நாயனுர் மீண்டும் பெருமானைப் பூசித்துவிட்டுத் தமது திருமாளிகையடைந்தார். அச்சம் கொண்ட அம்மையார் நடுங்கியவாறே திருக்கோயிலிலேயே தங்கியிருந்தார். எங்கும் இருண்டு விட்டது. அக்கங்குலில், மங்கை பாகனைத் தியானித்த வண்ணமே நாயனுர் பஞ்சணையில் படுத்துச் சிறிது கண்ணுறங்கினுர்.

பள்ளி கொள்பொழு தயவந்திப் பரமர்தாம் கனவில்
வெள்ளம் நீர்ச்சடை யொதுங்கும் மேனியுங் காட்டி
உள்ளம் வைத்தெமை ஊதிமுன் துமிந்தபால் ஒழியக்
கொள்ளும் இப்புறம் சிலம்பியின் கொப்புள் என்றருள.

அயவந்தித் திருவாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநீலநக்கருடைய கனவில் தோன்றி, '' அன்பனே! இதோ பார்; உன் மனைவி ஊதிய இடத்தைவிட மற்றை யிடங்களில் கொப்புளம்'' என்று அருளிச் செய்து தமது திருமேனியைக் காட்டியருளினுர். கனவு தெளிந்து எழுந்த நாயனுர் அஞ்சினுர். கங்கை முடிசேர்த்த மங்கை பாகரை வணங்கினுர்.

பொழுது விடிந்தது. அயவந்தி சென்று அரனுரை ஆராத காதலுடன் பணிந்தார் நாயனுர். பின்னர் மனைவியாரை அழைத்துக் கொண்டு திருமனை சேர்ந்தார்.

திருஞானசம்பந்தர் திருத்தலங்களையெல்லாம் வணங்கிக் கொண்டு, அயவந்தி மேவிய அண்ணலாரைத் தொழ வேண்டி சாத்தமங்கையை அடைந்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது மனைவியாராகிய மதங்க சூளாமணி அம்மையாருடன் வீணுகானம் செய்து கொண்டு வரவும், அடியார்த் திருக்கூட்டம் வெள்ளம் போல் சூழவும், பிள்ளையார் வருவதைக் கேள்வியுற்ற திருநீலநக்கர் எல்லையில்லாத உவகையுற்ருர்; உள்ளம் கிளர்ந்து எழுந்தார். தோரணங்களைக் கட்டினுர்; பூமாலைகளைத் தொங்கவிட்

டார்; பந்தரிட்டார்; கொடிகளை உயர்த்தினார். சுற்றமும் நண்பரும் சூழ எதிர்கொள்ளச் சென்றார். ஞான போனகரைத் தமது பொன்மாளிகை யிடை எழுந்தருளப் புரிந்தார். திருஞான சம்பந்தருக்கும் அடியவர் திருக்கூட்டத் துக்கும் உபசரிப்பு அளித்தார்.

அன்று இரவு உண்டபின் முத்தமிழ் வித்தகராம் திருஞான சம்பந்தர் திருநீலநக்கரை அழைத்து, "நம் முடன் வந்திருக்கும் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குப் படுக்க ஓர் இடம் கொடுத்து அருளுவீர்" என்று கூறினார். அந்தணராகிய திருநீலநக்கர், திருநீல கண்ட யாழ்ப்பாணரை இழிகுலத்தார் என்று கருதாமல் வீட்டின் நடுவில் யாக வேதிகைக்கு அருகில் இடம் தந்து உபசரித்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாகவேதிகையின் அருகில் சென்றவுடன் யாகாக்கினி முன்னையி லும் ஒரு மடங்கு ஓங்கி ஒளி செய்து வலஞ் சுழித்தது. சகோடயாழ்த் தலைவ ராகிய பாணர் தமது மனைவியாராகிய விறலியாருடன் படுத்துக் கண்ணயர்ந் தார். திருஞான சம்பந்தர், கதிரவன் உதிக்குமுன் எழுந்து அயவந்தி ஐயனைப் பாடி, அப்பதிகத்தில் திருநீலநக்கரு ரது அன்பைச் சிறப்பித்தருள அங் கிருந்து புறப்பட்டார். திருநீலநக்க நாயனார் அவரைப் பிரிந்திருக்க இய லாதவராய் அன்பினால் அவருடன் புறப்பட்டார். அவரை அங்கேயே இருந்து திருத்தொண்டு புரியுமாறு கட்டளையிட்டருளினார் ஞானசம்பந்தர்.

திருநீலநக்கநாயனார் முன்பு போல் சிவபூசை செய்து கொண்டு, திருஞான சம்பந்தருடைய திருவடித் தாமரை யைத் தியானித்துக் கொண்டிருந்தார். இவ்வாறு பலகாலும் பயின்று வந்த மறையவர் பிரானார், திருஞானசம் பந்தரின் திருமணத்தைச் சேவிக்கும் பொருட்டுப் பெருமண நல்லூரை அடைந்தார். திருமணத்தில் குழுமி யிருந்த பல்லாயிரக்கணக்கான வேத விற்பன்னர்கள், பண்டிதர்கள், புலவர் களின் இடையே திருமண வேள்விச் சடங்கைப் புரியும் பாக்கியமும் யோக்கிய மும் இவர் பெற்றார். நாயனார் திருமண வேள்விச் சடங்கைப் புரிந்து சிவஜோதி யில் கலந்து இன்புற்றார்.



தலைவியை மெல்லவே தாங்கி நடப்பேம்
எம்மிசைப் பாட்டெனு மினியநற் காற்றால்
அவளொரு மலர்போ லசைந்து செல்வாள்
அருவிநீர் நுரைமேல் வருமொரு பறவைபோல்
அசைந்தசைந் தகத்தமர்ந் தவள்வரு கின்றாள்
கனவில்வா மிதழெழும் களிமகிழ் நகைபோல்
மெல்ல மெல்ல மிதப்பாள் அவளே
மகிழ்ச்சி பொங்க மனங்களி தூங்க
யாமெம் இறைவியை ஏந்தினம் செல்வேம்
கோவையுள் இயைந்ததோர் திவ்விய முத்தை
ஏந்துதல் போலவே ஏந்திச் செல்வமே

மெல்ல மெல்ல மெல்லியற் சுமப்பம்
எம்மிசை யென்ற இன்பனித் துளிமேல்
விண்மீன் போன்றவள் விளங்கித் தோன்றுவள்
அலைநீ ரோட்டத் தழகுறு முடிமேல்
ஒளிரு ஞாயிறுபோல் ஒளிருவள் அவளே
மணப்பெண் விழிவரு மகிழ்த்துளி போன்று
மெல்லென மெல்லெனச் செல்லுவள் அவளே
மேன்மேல் நடந்தியாம் மெல்லிசை பாடுவேம்
கோவையுள் இயைந்ததோர் திவ்விய முத்தை
ஏந்துதல் போலவே ஏந்திச் செல்வமே.

மூலம் : கவிக்குயில் சரோஜினி நாயுடு

தமிழாக்கம்: பேராசிரியர் கே. எஸ். நாகராஜன்

ஜெனானாவின் மேல் மாடம்.


பாரசீகப் பட்டு மெத்தையில் வஞ்சிக் கொடியாகத் துவண்டு கிடந்த மெஹருன்னிஸாவின் உள்ளம், மத்தகஜங்கள் இறங்கிய மடுபோல் கலங்கிப் போயிருந்தது!

அவளது நெஞ்சப் புதையின் அடியிலே, நாள் நாளாக வளர்த்த ஆயிரம் கனவுகளும், கற்பனைகளும் குருடன் கை ஓவியமாக மக்கி விட்டிருந்தன. அவளாகத் திறந்து காட்ட இயலாத அந்த உணர்ச்சிகளை, அவள் கணவன் ஷேரப்கன் தோண்டியெடுத்துத் துலக்கி வைத்து அழகு பார்க்க வேண்டுமென விரும்பிய

அட்டைப் படக் கதை

பாரஸீக ரோஜா

தபஸ்வி



அவளது மானசீகக் கனவுகளை, அவை அழகாக உருப்பெற்று வருகையிலே, விதி ஏன் இப்படி அவளை இலவு காத்த கிளியாக்க வேண்டும்? தெய்வம், மனிதனை எவ்வளவுதான் சிரேஷ்டமான உணர்ச்சிகளுக்குப் பாத்திரமாக்கினாலும் அவற்றை முடிவில் பரிபூரணமாக அநுபவிக்க மட்டும் ஏனோ விடுவதே இல்லை!

சிந்தனைக்கு இடம் கொடுத்து வேதனைப்பட்டாள் மெஹருன்னிஸா. அவளது நீலோற்பல நீள்விழிகளிலே நீர் மல்க, ஆழ்ந்த பெருமூச்சொன்று தேம்பிப் பிரிந்தது!

பாரசீகத்தை விட்டுத் தொழில் தேடி வந்த கைஸ்பேக்கின் ஒரே மகள் தான் மெஹருன்னிஸா. அவளுக்குப் பூ என்றால் உயிர்!

கைஸ்பேக் அக்பர் பாதுஷாவிடம் வந்து வேலைக்கு அமர்ந்தபோது, ராணி ஸலீமா பேகத்துக்கு மெஹருன்னிஸாவின் மீது ஏற்பட்ட அன்பின் காரணமாக அவளுக்கு அந்தப்புரத்தில் தங்கும் வாய்ப்புக் கிடைத்தது. பாதுஷாவின் மூத்த புதல்வன் ஸலீம் அங்கு அடிக்கடி வருவான். அவனுக்கும் பூ என்றால் மோகம்!

தூரிகையின் வீச்சிலே விளையாத வண்ண ஓவியமாக நின்ற மெஹருன்னிஸா அவன் நெஞ்சை அள்ளிக் கொண்டதில் வியப்பு ஏதுமில்லை!

கொலைகாரனும் பக்காத் திருடனும் கூடத் தங்கள் செயல்களை மறைத்து விடலாம். ஆனால் காதல் விஷயம் இருக்கிறதே, அது அப்படியல்ல! அது மறைக்கப்படும் பொழுதுதான் அதிகமாக வெளிப்படும்!

ஆரம்பத்தில், ஸலீம் – மெஹருன்னிஸாவின் தொடர்பு அக்பரின் காதில் இலேசாக விழுந்தது. பிறகு அது கண்ணுக்குக் கண்ணாகவே பட்டு விட்டது!

அவர் சிந்தித்தார் : 'இந்துஸ்தானம் ரத்தப் பெருக்கின்றி உலகின் மகுடமாகத் திகழ வேண்டுமென்றால், இந்துக்களின் ரத்தமும் முகலாயர்களின் ரத்தமும் கலந்த ஒரு புதிய தலைமுறையை இந்துஸ்தானத்திலே சிருஷ்டிக்க வேண்டும்' என்று தீர்மானித்தார்..

அதன்படி உடனடியாக ஸலீமுக்கு ஒரு ராஜபுத்திரப் பெண்ணை மணம் முடித்து, மெஹருன்னிஸாவை ஷேர்ப்கனுக்குத் திருமணம் செய்து விட்டார் !

முழுமை பெற முடியாத இளமைக் கனவொன்றின் ஏக்கம் அவனுள் விசுவரூபமெடுத்து நின்றது !

காலம் நீர் வீழ்ச்சியிலே ஆண்டுகள் சிதறின.

ஒரு நாள், பொழுதுபோக்காக மெஹருன்னிஸாவும் ஷேர்ப்கனும் சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தனர். அப்போது பதைபதைத்து வந்த ஒரு சேவகன், "மன்னிக்க வேண்டும் ஹுஜூர் ! ஷா—இன்—ஷா — அவர்கள் இயற்கை எய்தி விட்டார்களாம்" என்று தெரிவித்தான்.

"என்ன?" ஆவி பறந்த உள்ளத்தின் அவலமாய் ஸ்தம்பித்துவிட்ட ஷேர்ப்கன், "மொகலாயர்களின் சூரியனே அஸ்தமித்து விட்டது!" என்றான் தழுதழுத்த குரலில்.

மெஹருன்னிஸா நினைவிழந்தாள்.

அக்பரின் மரணத்துக்குப் பின் ஸலீம், 'ஜஹாங்கீர்' என்ற பட்டம் சூட்டிக்கொண்டான். அதே வேகத்தில், "மெஹருன்னிஸாவுக்குத் 'தலாக்நாமா' கொடுக்க வேண்டும்" என்ற ஓலை அனுப்பினான். அதை எடுத்துச் சென்ற குத்புதீன், "இதற்கு ஒப்புக் கொண்டால் உம்மை வங்காள நவாப் ஆக்கும் பொறுப்பு என்னுடையது !" என்று ஆசை காட்டினான்.

"என்ன திமிர்!" என்று கொதித்தெழுந்தான் ஷேர்ப்கன். கை இடைவாளைப் பற்றியது.

"ஷேர்ப்கன்!" அமைதியாக விளித்த குத்புதீன், "அவ்வளவு மிடுக்கு இனி செல்லாது. நீ பாதுஷாவின் உத்தரவை மீறுவதானால் இந்தப் பர்த்வான் சுடுகாடாகி விடும்" என்று எச்சரித்தான்.

ஷேர்ப்கான் சிரித்தான்; மனித இதயத்தின் கோர உணர்ச்சிகளைச் சிதறும் சிரிப்பு அது.

"குத்புதீன்! இதில் நீ இறங்கியிருப்பது, வங்காள நவாப் பதவியைக் கைக் கூலியாக அடைகின்ற நோக்கத்தில்தான் என்பது நன்றாக எனக்குத் தெரியும். ஆயினும் ஒரு சந்தேகம். இப்போது உன் பேகத்தை உன்னோடு அழைத்து வந்திருக்கிறாயா அல்லது தில்லியிலேயே விட்டு விட்டு வந்திருக்கிறாயா?" என்று இடக்காகவே கேட்டான்.

"என்ன ஆணவம்!" பற்களை நெரித்தபடி இடைவாளை உருவிய குத்புதீனை அமைதியாகத் தடுத்தவன், "இது விஷயத்தில் ஷேர்ப்கனுக்கு எதிராக இயங்கும் திறன் அதற்கு இல்லை. நீ ஓலை தாங்கி வந்தவன். உன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு போய்ச் சேர் !" என்றான் உறுதியாக.

அவமானத்துடன் வெளியேறிய குத்புதீன், சில நாட்களில் ஷேர்ப்கன் ராஜத் துரோகி என்ற புரளியைக் கிளப்பினான். அதன் விளைவாக ஏற்பட்ட கலவரத்தில் ஷேர்ப்கான் கொலை செய்யப்பட்டு, மெஹருன்னிஸா கவர்ந்து செல்லப்பட்டாள் !

ஹாரமின் வாசலில் நின்ற பணிப் பெண்களிடம் சலனம் ஏற்பட்டது. காலடி வந்த திசையில் அவர்கள் சிரம் தாழ வணங்கியபடி பின்னோக்கி வெளியேறினர்.

காலடி ஓசை அவளை அணுகி வருகையில் மிரண்ட புறாவின் இறக்கைகளைப் போல் இதயம் அடித்துக் கொண்டது. அவள் உடல் குன்றிக் குறுகுவது போலிருந்தது. அவளால் தன் இமைகளை உயர்த்த இயலவில்லை. அமைதியாக எழுந்து நின்ற அவளது கரங்கள் இயந்திரமாக நெற்றியைத் தொட்டு வணங்கின.

பத்து வருடங்களுக்கு முன் பார்த்த சிறுமி இன்று சௌந்தரிய தேவதையாக நிற்பதைக் கண்டு பிரமித்துப் போனான்.

"மெஹர்!"

மௌனம்.

"மெஹர், என் மீது கோபமா ?"

மௌனம்.

"பேசு மெஹர்......!"

"நான் ஆனந்தப்படுவேன் என்றுகூட எதிர்பார்த்தீர்களா, ஜஹாம்பனா?" என்று வினவினாள் மெஹருன்னிஸா. தொடர்ந்து, "நீங்கள் இதைவிட என்னைக் கொன்றிருக்கலாம். உலகத்தின் எழிலெல்லாம் உங்கள் காலடியில் தஞ்சமடைய வேண்டும் என்ற பேராசை உங்களுடையது!" என்றாள்.

" மெஹர் !" என்று குறுக்கிட்ட ஜஹாங்கீர் கூவியே விட்டான். அவன் குரல் கம்மியது. "உன் ஸலீமையா நீ பேராசைக்காரன் என்று கூறுகிறாய்? நீ வாஞ்சை ததும்பப் பார்த்ததும், வாய் நிறையப் பேசியதும், அரும்பு வயது தொட்டு உள்ளத்தோடு உள்ளம் வைத்து ஊறி வளர்ந்த நம் அன்பு வெறும் கானல் நீர்தானா ? மெஹர், தெற்கே தண்டி யாத்திரைக்கு நான் சென்ற போது, நீ உனது அன்பின் சின்னமாக அழகிய ரோஜா மலரைப் பறித்து என்னிடம் கொடுத்தாயே, அந்த நிகழ்ச்சி......"

"நினைவிருக்கிறது, ஹுஜூர்! ஆனால் அந்த மலர் என்றோ வாடிப் போய்விட்டது" என்று கூறியவள் அங்கிருந்து நகரப் போனாள்.

"நில்!" ஜஹாங்கீரின் குரலில் கடுமை தொனித்தது. அவள் நின்றாள்.

"இது உங்கள் உத்தரவா ஜஹாம்பனா?"

"உத்தரவு அவசியமென்றால் அப்படியே வைத்துக் கொள் !"

மெஹருன்னிஸா பதுமையாக நின்றாள். அவளுக்கு மிகவும் அண்மையில் வந்த ஜஹாங்கீரின் பார்வை அவளது அங்கமெல்லாம் விழுந்து புரளுவது போன்ற உணர்ச்சி! அவள் மனம் வேதனையால் துடிக்க, இமை விளிம்பில் பனித் திரள் கூடியது.

"மெஹர் ! கண்ணீரைத் துடைத்துக் கொள்; அதைக் காணும் நெஞ்சுரம் எனக்கு

இல்லை!" முதுகைத் திருப்பி நின்ற ஜஹாங்கீர், கரங்களைப் பின்னால் இறுகக் கோர்த்தபடி வெளியே தெரியும் ஆகாயத்தைப் பார்த்தான். வெளிக் கூட்டம் ஒன்று வரிசையாக வந்து ஒரு வட்டம் அடித்துவிட்டு மேற்கே சென்றது!

"மெஹர்! அப்பாஜான் அவர்களின் பிரிவுத் துயரைக் காட்டிலும் உனது நினைவு தான் என்னை மிகவும் வாட்டியது. மகுடம் தாங்கியவுடன் எனது மானசீகக் கனவு நிறைவேறிவிட்டதாகக் கருதினேன். ஆனால் என் ஊகம் எவ்வளவு தவறானது! இதுவரை அதன் விளைவாக வேதனைப்பட்டதும் இல்லை. இந்துஸ்தானத்தின் சக்கரவர்த்தியாக இருப்பினும், உன் அன்பைப் பெற முடியாத துர்ப்பாக்கியத்தால் வறியவனாகிவிட்ட உன் ஸலீம், உன் வருகைக்காகத் தன் இதயக் கதவுகளைத் திறந்து ஒவ்வொரு கணமும் தவம் இருப்பான்! உன் வருகையின் எதிர்பார்ப்பில் அவன் ஏமாற்றமே அடைந்தாலும், உன்னை எதிர்பார்ப்பதில் ஓர் இன்பம் இருக்கிறதே. அதற்காக அவன் ஏமாந்து கொண்டே இருக்கவும் விரும்புவான்! வருகிறேன், மெஹர்!"

இப்படிக் கூறி முடித்த ஜஹாங்கீர், தாள முடியாத சுமை ஏற்றப்பட்ட ஒட்டகம் போல் அமைதியாக அங்கிருந்து வெளியேறினான். வெளியேறுகையில் அவளை ஒரு முறை திரும்பிப் பார்த்தான். அகன்ற அவளது விழிகளில் ஆழ்கடலின் மடியில் தவழும் அலைகளைப் போல் எல்லையற்ற சோக அலைகள் முட்டி மோதி இமைக் கரைகளில் கண்ணீர்த் திவலைகளை வாரியடிப்பது அவனுக்கு நன்றாகத் தென்பட்டது!

வருடங்கள் நான்கு உருண்டு விட்டன. அந்த நான்கு வருட காலம் ஜஹாங்கீர் அவளை நெருங்கவேயில்லை. மெஹருன்னிஸா ஜஹாங்கீரின் அன்னை ஸலீமா பேகத்தின் மாளிகையில் தங்கியிருந்தாள். ஜஹாங்கீர் அவளை மறப்பதற்காக மதுவை நாடினான். மது அவன் உடலை அரித்தது. மன நோய் அவன் உள்ளத்தை அரிக்கத் தொடங்கியது.


தர்பார் முறையாக நடைபெறவில்லை.

சிருங்காரமும் சங்கீதமும் குலவ வேண்டிய மாளிகை பாழடைந்தாற்போல் கிடந்தது. நிலாவொளி முற்றத்தில் விரக்தி மேலிட்ட உள்ளத்துடன் தன்னந்தனியாக அமர்ந்திருந்தான் ஜஹாங்கீர். காய்ந்த மாங்கொட்டையென உலர்ந்த முகம்; குழி விழுந்த கண்கள்; வறண்ட சிரிப்பு. எலும்புக்கூடான உடல்.

வெறித்த சூழ்நிலை; ஜீவனில்லாத மௌனம்!

சலனமற்ற அந்த அமைதியைக் கலைப்பது போல் எங்கிருந்தோ பாதசரங்களின் மெல்லிய ஒலி கேட்கிறது.

மது மயக்கம் தெளியாத விழிகளை உயர்த்திப் பார்த்தான் ஜஹாங்கீர்.. "யாரது?.... மெஹர்! சை.... இதென்ன கனவுகள்!" என்று அலுப்புடன் முனகிக் கொண்டவன், அந்த எண்ணத்தையே அகற்ற முயலுபவன்



"உங்க படத்தில் எனக்கு வில்லனாக நடிக்க சான்ஸ் தரீங்களா? இல்லே; இன்றே, இங்கேயே, இப்போதே நான் ஆட்டம் நடத்தவா?"

போல் மது ஊற்றியிருந்த கோப்பையைக் கையில் எடுத்தான்.

மீண்டும் பாதசரங்களின் ஒலி.

அவன் திகைப்புடன் திரும்பினான். எதிரே லஸ்தர் விளக்கொளியில் மெஹருன்னிஸா!

'புர்கா' மறைத்திராத அவள் மேனியை விலை மதிப்பற்ற ஆடை ஆபரணங்கள் அலங்கரிக்க, அழகுச் சுடர் வீசும் நயனங்களில் இன்பத்தின் அறைகூவல் விளங்க நின்றிருந்தாள்.

"ஸலீம்!"

ஜங்கார நாதம் கேட்டாற் போன்று ஜஹாங்கீரின் உடல் சிலிர்த்தது. சற்றே அசைந்தாலும் அழைத்த குரல், காணும் அழகு கலைந்து விடுமோ எனச் சலனமற்றிருந்தான். அவனால் தன் கண்களை நம்ப முடியவில்லை.

"ஸலீம்!"

ஜஹாங்கீர் எழுந்து நின்றான்.

"மெஹர்!" என்று மாலதிக் கொடி போன்ற அவள் கரத்தைப் பற்றினான். கண்கள் நான்கும் கலந்துறவாடிய சங்கமத்தில் ஆனந்த உவர்த்தாரை வழிந்தோடியது!

ஜஹாங்கீர்—மெஹருன்னிஸா 'நிக்காஹ்' மிக விமரிசையாக நடந்தது. மெஹருன்னிஸா பெண்களில் சூரியன் — நூர்ஜஹான் என்ற பெயரில் புகழடைந்தாள். மதுவும் நூர்ஜஹானும் தவிர உலகில் தனக்கு இன்றியமையாதது இல்லை என்பதே போல் முகலாய சாம்ராஜ்யத்தின் சகல பொறுப்புக்களையும் அவன் அவளிடமே ஒப்படைத்தான். போர் முனை முதல் பிரதானிகள் புதல்விக்கு வரன் பொறுக்குவது வரை எல்லாம் நூர்ஜஹான் ஆணைப்படிதான் நடந்தன.

குளிர் காலம்.

ஜஹாங்கீரின் உடல் நிலை மேலும் நலிவுற்றது. சீதோஷ்ண மாற்றம் வேண்டித் தன் பரிவாரங்களுடன் காஷ்மீரத்துக்குப் புறப்

பட்டான். இயற்கை வனப்பின் ஒவ்வொரு அணுவிலும் பிரேம கீதத்தின் ஸ்வரங்கள் மனோகரமாய் ரீங்காரிக்கும் இன்பச்சூழ்நிலை! ஆனால் நூர்ஜஹானின் மனம் ஆறுதலடையவில்லை. ஜஹாங்கீரின் உடல் நிலை அவள் நிம்மதியைக் குலைத்தது.

ஒரு நாள், எழிலார்ந்த மலர்ச் சோலை ஒன்றுக்கு நூர்ஜஹானை அழைத்துச் சென்றான் ஜஹாங்கீர். அந்த அழகிய சோலை முழுவதையும் சுற்றிக் காண்பித்துவிட்டு இறுதியில் பளிங்குக் கல் ஆசனம் ஒன்றில் அமர்ந்தான்.

''நூர்!.... முன்பொரு முறை, உன் தந்தையின் சமாதியைப் பார்க்கச் சென்றிருந்தோமே, நினைவிருக்கிறதா? அப்போது 'ஞாபகச் சின்னம்' பற்றி நீ உன் கருத்தைச் சொன்னாய். இது வரை எத்தனையோ அழகிய நினைவுச் சின்னங்களை எழுப்பி, முன்னோர் தங்கள் நினைவை நிலைநாட்டிப் போயிருக்கின்றனர். என்றாலும், நமது ஜீவிய காலத்திலேயே நம் நினைவுச் சின்னத்தை எழுப்புவதை ஒரு நாகரிகமாக நான் கருதவில்லை. அதோடு மற்றொரு காரணம், என்னால் உன் மரணத்தைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது! ஆனால் எனக்கு ஓர் ஆவல்! நம் காதலின் சின்னம் நமக்குப் பிறகும் உலகில் நிலைத்திருக்க வேண்டு மல்லவா? ஆகவேதான் இவ்விரு நந்தவனங்களையும் ஏற்படுத்தினேன். இன்று இவை இரண்டையும் என் அன்புக் காணிக்கையாக உனக்குத் தருகிறேன். இவை நம் காதற் சின்னங்களாக என்றும் நிலைத்திருக்கும்'' என்றான்.

''இவ்வளவு சௌந்தரியமான காணிக்கையை நான் இப்போதுதான் முதன் முதலாகப் பெறுகிறேன்'' என்றாள் நூர்ஜஹான். அவள் கண்கள் பனித்த மகிழ்ச்சியால்.

ஜஹாங்கீர் ஆக்ராக் கோட்டையை நோக்கித் திரும்பினான். ஆனால் திரும்பும் வரையில்கூடக் காலன் காத்திருக்கவில்லை. பைரம் காலா என்ற ஊரில் நோய் முற்றியது; படுத்த படுக்கையானான். ஹக்கீம்களின் முயற்சியும் தோல்வியுற்றது. அருகிலேயே நிழலாக இருந்தாள் நூர்ஜஹான்.

அவன் உயிர் அஸ்தமித்துக் கொண்டிருந்தது.

''நூர்.....! மட்டற்ற வேதனையுடன், நிர்ப்பந்தமாக உன்னைப் பிரியும் இந்த வேளையில் என் நெஞ்சை உறுத்தி வரும் வேதனை ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மானிடர் உள்ளம் அடுக்கான புரைகள் உடையது. அதன் ஆழத்தில் இன்பநினைவுகள் ரகசிய அநுபவங்கள் வாசம் செய்யும் இடம் ஒன்றுண்டு. அந்த மன ஆழத்தில், என்னைப் புரிந்து கொண்ட விதத்திலே, நீ என்னைப் பற்றி என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறாய் என்பதை இன்றுவரையில் என்னால் கணிக்கவே முடியவில்லை. என் வரையில் புதிராகவே இருந்து விட்டாய் நீ!... நான் தவறு என்று ஒன்றைச் செய்திருந்தால் அது மனப்பூர்வமாக உன்னை நேசித்ததுதான்! ஷேரப்கனிடம் நீ உயிரையே வைத்திருந்தாய் என்று எனக்கு முன்பே தெரிந்திருந்தால் என் காதலை என் உள்ளத்திலேயே புதைத்திருப்பேன். ஆனால் தவற்றை நான் உணரும் போது விதி விபரீதமாகி விட்டிருந்தது! ஷேரப்கனைவிட நூறு மடங்கு அதிகமாக நானும்தான் உன்னைக் காதலித்தேன். ஆனால் அவன் கொடுத்து வைத்தவன்; பாக்கியவான்! அவன் இருந்தும், இறந்தும் என்னைத் தோல்வியுறச்செய்து விட்டான்! திசை காட்டி எப்போதும் ஒரே திசையைக் காட்டுவது போல் உன் மனம் அவனிடமே நிலைத்திருந்தது. நான் உன்னுடையவனாக இருந்தேனே தவிர, நீ என்னுடையவளாக என்றுமே இருந்ததில்லை! அது உன்னாலே இயலாததும்கூட. ஷேரப்கனையும் காதலித்து, என்னையும் நீ காதலித்திருந்தால் நானே உன்னை மதித்திருக்க மாட்டேன்! எனவேதான் அந்த இடைவெளி நம்மிடையே இருந்தது. இதற்காக ஷேரப்கன்மீதோ, உன்மீதோ எனக்குத் துவேஷமில்லை; வருத்தமில்லை! உங்கள் ஆதர்ச வாழ்க்கையில் குறுக்கிட்டதற்காக இத் தண்டனை எனக்கு வேண்டியதுதான்!......''

கட்டுக்கடங்காத துக்கம் பீறிட்டு வந்தது நூர்ஜஹானுக்கு. அவள் கண்கள் பொங்கின. அந்தக் கண்ணீர் வெள்ளத்தை அவள் மிகவும் சிரமப்பட்டுத் தடுக்க முயன்றாள். ஆனால் ஓரிடத்தில் அணை போட்டால் மற்றோரிடத்தில் உடைப்பு! அவள் கண்களுக்கு அணை போட்டாள்; கண்ணீர் நின்றது. அந்த விளைவு? இதயம் பிளந்தது; ரத்தம் கசிந்தது!

பதிவி என்ற உரிமையுடன் எவன் அவளை அடைந்திருந்தானோ, எவன் அவளது ஆசைகளிலும் விருப்பங்களிலும் அணுவளவும் அக்கறை கொள்ளவில்லையோ, எவனுடைய அதிகாரச் செருக்கு அவள் மீது இருந்து வந்ததோ அவனிடம் அந்த ஷேரப்கானிடம் தன் சர்வ கனவுகளையும் அர்ப்பணித்து விட்டு அவனுக்கு அடிமையாக இருந்தாள் அவள்!

ஆனால் ஸலீம்? தன் வாழ்நாளில் அவளைக் காதலித்ததைத் தவிர வேறொன்றுமே செய்யவில்லை! தன் ராஜ்ய நிர்வாகத்தையே அவள் காலடியில் வைத்து விட்டான்! இந்த ஒப்பற்ற அன்புக்கு ஈடாக அவளால் என்ன செய்ய முடிந்தது? ராஜ்யப் பொறுப்பில் நீதி வழங்கும் விஷயத்தில் குடிமக்களால் 'நீதியின் பிரதிநிதி' என்று கௌரவிக்கப்பட்ட நூர்ஜஹான், அந்த உரிமையைத் தனக்குத் தந்த ஜஹாங்கீர் விஷயத்திலே அவள் நீதி வழங்கத் தெரியாமல் குன்றிக் குறுகிப் போனாள்! அவன் கரத்தை அவள், தன் கன்னங்களில் எல்லையற்ற வாஞ்சையுடன் ஒற்றிக் கொண்டு விம்மினாள்.

''நூர்! என் அன்பே! நீ எனக்காக அழுது கொண்டிருக்கிறாயா? அந்திம காலத்தில் தன் காதலியின் கண்ணீரைப் பார்த்துக் கொண்டு விடைபெறுவது எத்தகைய மகா பாக்கியம்! எத்தகைய அபூர்வ சமாதானம்! எனக்கு இன்று அவை கிட்டின. இந்தப் பாக்கியத்தை மட்டும் பெற்றுக் கொண்டு போகிறேன். குதா ஹாபீஜ்!''

''ஸலீம்!'' என்று இதயம் வெடிக்கப் புலம்பினாள் நூர்ஜஹான். அவள் கதறல் அவன் காதுகளில் விழவில்லை. அழகிய மலரொன்று மணமாய், இதழாய், இதழின் இதயமாய்க் கமழ்ந்து, முடிவில் கருகிற்று!



பாதுகாப்பு பலே ஜோர்

தொப்பி, மார்புக்கவசம் இரும்பினால்,கவசம்
பற்களுக்கும் உண்டு-புளோரைடினால்.
பற்களின் எனாமல் பற்சேதத்தை எதிர்க்க
அதிக பலமடைகிறது. புளோரைட் சேர்ந்தால்.
பற்களுக்கு புளோரைட் பாதுகாப்பு அளியுங்கள்.
பினாகா புளோரைடினால் தினமும்
பல் துலக்குங்கள்.



பற் பாதுகாப்பில் ஒரு
புதிய சாதனை

முள்ளும் மலரும்

முதல் பரிசு நாவல்

அத்தியாயம் 28

மங்கா அதற்குமேல் அங்கே நிற்க வில்லை. ''சரி, எனக்கு வேலைக்குப் போக நேரமாயிடுச்சு. நான் வரேன்'' என்று அவள் பரபரப்புடன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பிறகும் வள்ளி அப்படியே பிரமை பிடித்தாற்போல் நின்று கொண்டிருந்தாள்.

''வள்ளி, வள்ளி!'' என்று அஞ்சலை அத்தை அழைக்கும் குரலைக் கேட்ட போதுதான் அவளுக்கு உணர்வு வந்தது. கண்களில் தேங்கி நின்ற கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வேக மாக வீட்டுக்குள்ளே சென்றாள்.

''வாசல்லே மங்காப் பொண்ணோட குரல் கேட்டுச்சே. உள்ளே வராமே அப்படியே போயிடுச்சா?'' என்று கேட்டாள் அத்தை.



''ஆமாம் அத்தை! இதைக் குடுத் திட்டுப் போயிடுச்சு!''

''என்ன இது? நகைப் பெட்டி மாதிரி இருக்கே'' என்று அதைக் கையில் வாங்கித் திறந்த அஞ்சலை அத்தை உள்ளே இருந்த கழுத்தாரத் தைக் கண்டதும் பிரமித்துப் போய் விட்டாள்.

''இது ஏது மங்காவுக்கு?''

''எனக்குத் திருமணப் பரிசாக் குடுக் கச் சொல்லி அந்த ஐயா குடுத்திட்டுப் போனாராம்.''

அத்தை புரிந்து கொண்டாள். அவள் நெஞ்சிலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு எழுந்தது. ''என்னமோ வள்ளி, இப் படியெல்லாம் நடக்கும்னு யார் எதிர் பார்த்தாங்க?'' என்றாள்.

''நான் குடுத்து வச்சது எதுவோ அதுதானே எனக்குக் கிடைக்கும்?'' என்றாள் வள்ளி.

''அந்த ஐயா பாவம், என்ன நெனைச் சுக்கிட்டாரோ? இங்கே இருந்த வேலை யைக்கூட விட்டுட்டுப் பட்டாளத் திலே சேர்ந்திட்டதாப் பேசிக்கிட றாங்க. எங்கே இருந்தாலும் அது நல்லாயிருக்கணும்'' என்று பெரு மூச்செறிந்தாள் அஞ்சலையத்தை.

அத்தையின் கையிலிருந்து அந்த நகைப் பெட்டியை வாங்கி மூடிய வள்ளி அதைத் தன்னுடைய சிறிய இரும்புப் பெட்டிக்குள், காளியண் ணன் சமீபத்தில் வாங்கிக் கொடுத்த சேலைப் பொட்டலத்துக்கடியில் பத் திரப்படுத்தி வைத்துப் பெட்டியைப் பூட்டினாள்.

அதே சமயம் வாய்க்காலில் பல் துலக்கிவிட்டுத் திரும்பிய காளி

யண்ணன் அங்கு வந்தான். அத்தை பர பரப்புடன் கொண்டு வந்து கொடுத்த தேநீரைப் பருகியவாறே அவன் கூறி னன்: ''அத்தை! அந்த முனியாண்டி தன் மனசிலே என்ன நினைச்சுக்கிட்டிருக்கான் தெரியலையே.''


''என் தம்பி, நீயா நின்னு முடிச்சு வைச்சது தானே. அவன் மனசைப் பத்தி உனக்கா தெரியாது?'' என்றாள் அத்தை மனக் கடுப்பை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல்.

''கலியாணத் தேதி நெருங்கிக்கிட்டிருக்கு. அந்த ஆள் இன்னும் இந்தப் பக்கமே எட்டிப் பாக்காம இருந்தா என்ன அர்த்தம்னு கேக்கறேன்.''

''அது அந்த ஆளையே கேக்க வேண்டிய கேள்வி இல்லே?''

''கேட்கத்தான் போறேன். மாலையிலே டூட்டியிலேருந்து திரும்பி வரும் போது கையும் மெய்யுமா அந்த முனியாண்டியைப் புடிச்சிக் கிட்டிப் போட்டு முடுக்காமே விடப் போறதில்லே'' என்றான் காளியண்ணன் தீர்மானமாக.

அன்று மாலை சோதனைபோல் அடுத்தடுத்து அவனுக்கு வேலை இருந்து கொண்டேயிருந்தது. அன்று சனிக் கிழமை யாதலால் பவர் ஹவுஸ் பகுதியிலிருந்து உச்சிக் கடவுக்கு வரும் தொழிலாளரின் தொகை வழக்கத்தைவிட அதிகமாக இருந்தது. ஆறு மணிக்கே முடிய வேண்டிய 'டூட்டி' ஏழு மணி வரை நீடித்தது. கடைசி முறையாக மேலே வந்து நின்ற டிராலியில்தான் மங்கா திரும்பி வந்திருந்தாள். காளியண்ணனைப்



உமா சந்திரன்

பார்த்ததும் பாராதது போல் அவன் அங்கிருந்து போக ஆரம்பித்தபோது காளியண்ணன் ''ஏ மங்கா!'' என்று அழைத்தவாறு வேகமாக அவளுக்கு முன்னே சென்று நின்று கொண்டான்.

''என்ன?'' என்று கேட்டாள் மங்கா, இரு கைகளையும் இடுப்பில் ஊன்றிக் கொண்டு.

''நான் ஒரு ஆள் இருக்கிறது தெரியலே? திரும்பிக் கூடப் பாராமே போறியே?'' என்றான் காளியண்ணன்.

''பாக்கும்படி நீ இருந்தாத்தானே?''

''என்ன கொறைச்சலைக் கண்டுட்டே?''

''உன் மனசையே கேட்டுக்க.''

''சரி, சரி, நாளைக்கு வள்ளியை அழைச்சுக்கிட்டு உங்க வீட்டுக்கு வரதா இருந்தேன்'' என்றான் காளி.

''எதுக்கு?''

''உனக்குப் பரிசம் போட.''

''ஓகோ! என் சம்மதமில்லாமே எதுவும் நடந்திட முடியாது தெரியுமில்லே!''

''உன் சம்மதத்தைப் பத்தித்தான் எனக்குக் கவலை யில்லையே.''

கண்களை உருட்டி அவனை ஒரு பார்வை பார்த்தாள் மங்கா. ''இதோ பாரய்யா... வள்ளியக்காவும் நானும் ஒண்ணுன்னு நெனைச்சுக்கிடாதே. யாரும் என் இஷ்டத்துக்கு விரோதமா என்னைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆமாம்'' என்றாள்.

''இஷ்டமில்லாமே இருந்தாத்தானே அந்தப் பேச்சு'' என்று சிரித்தான் காளி.

''நெனைச்சுக்கிட்டு இரு'' என்று நொடித்து விட்டு மங்கா அங்கிருந்து நகர்ந்தாள்.

உடும்புக் கொட்டகையில் ஏறக் கட்ட வேண்டிய வேலைகளையெல்லாம் கவனித்துவிட்டுக் காளியண்ணன் அங்கிருந்து புறப்பட மேலும் அரை மணி நேரம் பிடித்தது. அதுவும் ஒரு விதத்தில் நல்லதாய்த்தான் முடிந்தது. காலையில் கிழூருக்குப் போயிருந்த முனியாண்டி அப்போதுதான் கடையில் வந்து உட்கார்ந்திருந்தான்.

''மாப்பிள்ளே...''

கடைக்கு வெளியே காளியண்ணன் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் முனியாண்டி கல்லாப் பெட்டியை விட்டு வெளியே எழுந்து வந்தான்.

''என்னய்யா கண்ணிலே படற தில்லே?'' என்றான் காளி.

''ஒருத்தர் கண்ணிலே படறதுக்காக ஒரே இடத்திலே உட்கார்ந்திருக்க முடியுமா? ஓடியாடி உழைச்சால்தானே வேலை நடக்கும்?'' என்றான் முனியாண்டி.

''அடேடே, மாப்பிள்ளை முறுக்கை இப்பவே காண்பிக்க ஆரம்பிச்சிட்டயா? பலே... பலே'' என்று சிரித்தான் காளியண்ணன்.

முகத்தை 'உர்'ரென்று வைத்தவாறு முனியாண்டி ஒரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான்.

''எனக்கும் ஒரு பீடி'' என்று காளியண்ணன் கேட்டதும் வேண்டா வெறுப்பாக ஒரு பீடியை அவன் கையில் கொடுத்துவிட்டுச் சும்மா இருந்தான் முனியாண்டி.

''ஏனய்யா, நான் ஒத்தைக்கை ஆளாச்சே... பத்த வைக்காமே நின்னா எப்படி?'' என்று காளி சிரித்தபோதும் அவன் கடுகடுப்பு மாறவில்லை. கனிந்து கொண்டிருந்த தன் பீடியைக் காளியின் முகத்துக்கெதிரே நீட்டி அவன் பீடியைப் பற்ற வைத்துக் கொண்ட பிறகு புகையை ஒரு தரம் உறிஞ்சி மூக்கிலேற்றிக் கொண்டு இருமினான்.

அவனது இருமல் அடங்கியதும் காளி கூறினான் — ''இன்னிக்கு சனிக் கிழமை. அடுத்த வெள்ளிக் கிழமை கலியாணத்துக்குத் தேதி குறிச்சிருக்கு. நெனைப்பு இருக்கில்லே.''

''நெனைப்பு இல்லாமப் போயிட்டா எவ்வளவோ நிம்மதியா யிருக்குமே'' என்று முனியாண்டி கூறியதும் காளியண்ணனுக்குத் திக்கென்றது.

''என்ன சொல்றே?''

''உள்ளதைத்தான் சொல்லறேன். ஊருக்கு இளைச்சவன் புள்ளையார் கோயில் ஆண்டின்னு சொல்லுவாங் கல்லே. அது சரியாய்த்தான் போச்சு.''

''மாப்பிள்ளே!''


''தெரியாத்தனமாத்தான் நான் தலையைக் குடுத்திட்டேன். உண்மை. தெரிஞ்சப்புறம் சொல்லவும் முடியாமே, மெல்லவும் முடியாமே முழிச்சிக்கிட்டிருக்கேன்.''

''என்ன உண்மையைக் கண்டுட்டேடய்யா?'' என்று கத்தினான் காளி.

''அதைச் சொல்ல வேறே வேணுமா? ஊரறிஞ்ச சேதியாச்சே அது! தங்கச்சிக்குக் கெட்ட பேர் வந்திடக் கூடாதேன்னுதானே என் தலையிலே கட்டி யிருக்கே!''

''என்ன சொன்னே?'' என்று ஆவேசத்துடன் அவன் சட்டைக் காலரைப் பற்றி முறுக்கினான் காளி.

''கழுத்தை நெரிச்சுக் கொன்னு போட்டுடு. அடுத்த வெள்ளிக்கிழமை வரைக்கும் உயிரோட இருக்கிறதை விட இப்பவே என் உயிர் போயிட்டா நல்லாத்தான் இருக்கும்'' என்று குமுறினான் முனியாண்டி.


சக்திக்கும், வலிமைக்கும்!
பால்
கோகோ
சர்க்கரை
மால்ட்
Bournvita
THE IDEAL FOOD DRINK FOR STRENGTH AND VIGOUR
ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புகளும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச் சுவையாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.
காட்பரீஸ்
போர்ன்விடா
CP-578 TAM

''கூடாது. அடுத்த வெள்ளி வரையிலே நீ உயிரோடு இருந்துதான் ஆகணும். அன்னிக்கு மட்டும் ஏதாவது தப்புத் தண்டாவா நடந்துக்கிட்டே, அந்த இடத்திலேயே உயிரோட புதைச்சிடுவேன்'' என்று உக்கிரமாகக் கூறியவாறு அவளை உலுக்கிய காளி, அவளை அப்பால் தள்ளிவிட்டு வேகமாக அங்கிருந்து சென்று விட்டான்.

இரவு வெகு நேரம் வரை அவன் வீட்டுக்குத் திரும்பவில்லை. எங்கெங்கோ கால் இழுத்த போக்கில் சுற்றியலைந்து விட்டு அவன் வீடு திரும்பியபோது நடுநிசியாகி விட்டது. யாருடனும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் படுத்து விட்டான். அதன் பிறகும் தூக்கம் அவன் இமைகளை மூட வெகு நேரம் பிடித்தது.

மறு நாள் காலையில் மாயாண்டியின் அவலக் குரலைக் கேட்டு அவன் கண் விழித்தான்.

''ஐயோ, காளியண்ணே, காளியண்ணே... நடக்கக் கூடாதது நடந்து போச்சு. அந்த முனியாண்டிப் பய நமக்கெல்லாம் துரோகம் செய்திட்டுப் போயிட்டான்!'' என்று உணர்ச்சி மிகுதியில் உளறிக் கொட்டியவாறு மாயாண்டி அவனருகே ஓடி வந்தான்.

ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தான் காளியண்ணன்.

''நிதானமாகத்தான் சொல்லித் தொலையேன். என்ன நடந்திச்சு?'' என்றான் எரிச்சலுடன்.

''முனியாண்டிப் பய நம்பிக்கைத் துரோகம் செய்திட்டான் காளி. என்னோட அங்கியை இழுத்துக்கிட்டு ஊரை விட்டே போயிட்டான்!''

காளியின் திகைப்பு எல்லை மீறியது.

''என்ன சொல்லறே மாயாண்டி?'' என்று கத்தினான்.

''நான் ஏமாந்திட்டேன், காளியண்ணே. அங்கிக்கும் அவனுக்கும் ரொம்ப நாளாகவே தொடர்பு இருந்திச்சாம். எனக்கு ஒண்ணுமே புரிஞ்சுக்கத் தெரியல்லே, காளியண்ணே! ஒண்ணுமே புரிஞ்சுக்கத் தெரியலே. படுபாவி என் குடும்பத்துக்கே கொள்ளி வச்சிட்டுப் போயிட்டானே. இனிமே நான் என்ன செய்யப் போறேன், எப்படி வாழப் போறேன்!'' என்று புலம்பினான் மாயாண்டி.

''ரெண்டு பேரும் ஊரை விட்டே ஓடிப் போயிட்டாங்கன்னு சொல்றே?''

''ஆமாம் காளியண்ணே... இதுக்குன்னு எத்தனை நாளா திட்டம் போட்டு வச்சிருந்தாங்களோ. நேத்து



தாயார்: உன் பெண்டாட்டி ஏதோ கூட்டணிக்கு ஏற்பாடு செய்திருக்காளாமே! என்னையும் சேர்த்துக்கொள்ளச் சொல்லேன்.

மகன்: நாசமாப் போச்சு! உன்னை ஊருக்கு விரட்டத்தான் நாலு நாட்டுப் பெண்களுமாகச் சேர்ந்து திட்டம் தீட்டியிருக்காங்க!

ஜோருவிலிருந்து லாரியை முனியாண்டியே ஓட்டி வந்தானும். நடு ராத்திரியிலே கடைச் சாமானையெல்லாம் அள்ளிச் சுருட்டி லாரியிலே போட்டுக்கிட்டு, அங்கியையும் வரச் சொல்லி அழைச்சுக்கிட்டு லாரியிலேயே ஊரை விட்டு ஓடியிருக்கானே பாவி. இவன் வெளங்குவானா? நல்லாயிருப்பானா? இந்த ஏழையை அழ வச்சிட்டு இவன் சொகமா வாழ்ந்திட முடியுமா?'' என்று மாயாண்டி உரக்க ஒப்பாரியே வைக்க ஆரம்பித்து விட்டான்.

''சீ... நீயும் ஓர் ஆம்பிள்ளையா?... மூடு வாயை'' என்று காளியண்ணன் அதட்டியதும்தான் அவன் கூச்சல் அடங்கியது.

முதலில் ஜோர் போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோனில் தகவல் தெரிவிப்பதென்ற முடிவுடன் இருவரும் உச்சிக்கடவுக் காரியாலயத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

''அந்தப் பய மட்டும் என்கிட்ட உயிரோட சிக்கட்டும், அந்த எடத்திலேயே கண்ட துண்டமா வெட்டிப் போட்டுடறேன்'' என்று ஆக்ரோஷத்துடன் கத்திவிட்டுத்தான் சென்றான் காளியண்ணன்.

வள்ளி சூனியத்தைப் பார்த்தவாறு நின்றாள்.

''ஐயோ, வள்ளிக் கண்ணு! தெய்வம் உன்னை ஏன்தான் இப்படியெல்லாம் வாட்டி வெடுக்குதோ தெரியலியே'' என்று அரற்றியவாறே அவளை

அணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தாள் அஞ்சலை அத்தை.

ஃ ஃ ஃ

ஓங்கி உயர்ந்த வெண்பனிச் சிகரங்களைப் பார்த்தவாறு ஊசியிலை மரங்கள் செறிந்து வளர்ந்திருந்த மலைச் சரிவின் சமதரையான விளிம்புப் பகுதியில் மலையோடு ஒட்ட வைத்திருந்தது போல் அமைந்திருந்தது அந்த ராணுவ ஆஸ்பத்திரி. மலையணங்குக்கு அணிவித்த ஒட்டியாணம் போல் அந்தச் சரிவோடு ஒட்டியமைந்திருந்த குறுகலான சாலை வழியே அவ்வப்போது ராணுவ லாரிகளும், 'ஜீப்'களும் அந்த ஆஸ்பத்திரிக்கு வந்து போய்க் கொண்டிருந்தன. சண்டை எங்கோ இருபது மைல் தொலைவுக்கப்பால் நடந்து கொண்டிருந்தது. அங்கே விட்டு விட்டு ஒலிக்கும் பீரங்கி முழக்கம் அந்தத் தொலைவிலிருந்து காற்றில் மிதந்து கரைந்து பசித்திருக்கும் கிழட்டுச் சிங்கத்தின் உரமிழந்த உறுமலைப் போல் காதில் வந்து விழுந்து கொண்டிருந்தது. உறுமல் அடங்கும் வரை இந்த லாரிகள் — ஜீப்களின் போக்கு வரத்து இருந்து கொண்டுதான் இருக்கும். காலை ஆரம்பித்த சங்கிலித் தொடர் இன்னும் நீடித்துக் கொண்டிருந்தது. இன்னும் எவ்வளவு நேரமோ?

ஆஸ்பத்திரியின் மாடிப் பகுதி பால்கனியில் போடப்பட்டிருந்த நாற்காலியொன்றில் அமர்ந்து வெண்பனி இமயத்தின் வீரத் தோற்றத்தை ரசித்துக் கொண்டிருந்த குமரன் ஆஸ்பத்திரி வாயிலில் ஒரு ஜீப் வந்து நின்றதைக் கண்டதும் சற்று முன்னுக்கு நகர்ந்து எட்டிப் பார்த்தான். ஆஸ்பத்திரி ஆர்டர்லிகள் ஜீப் அருகே விரைந்து சென்று பிரக்ஞையிழந்த நிலையில் ஸ்ட்ரெச்சரில் கிடத்தப்பட்டிருந்த ஒரு ஜவானைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றனர். ஒரு பெருமூச்சுடன் பின்னுக்குச் சாய்ந்தான் குமரன். இரண்டு வாரங்களுக்கு முன்னால் இதே மாதிரிதான் குற்றுயிரான நிலையில் அவன் அந்த ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்திருந்தான். மார்பில் பட்ட குண்டு அனுப் பிசகியிருந்தால் அவன் உயிரையே குடித்திருக்கும். ஆனால் அவனுடைய ஆயுள்தான் கெட்டியாயிற்றே. மேலோடு உராய்ந்து சென்ற குண்டு விலாப் பக்கமாகப் பாய்ந்து அவனுக்கு உயிர்ப் பிச்சை அளித்து விட்டது. குண்டை யகற்றிச் சேதமான ரத்தத்துக்குப் பதில் ரத்தத்தை அவன் உடலில் செலுத்தியதும் ஒரே வாரத்தில் அவன் எழுந்து நடமாடும் சக்தியைப் பெற்று விட்டான். இப்போது காயம் நன்றாக ஆறி விட்டது. பழைய பலமும் அநேகமாகத் திரும்பி விட்டது. ஆனால் ஆஸ்பத்திரி டாக்டர் ரகுநாத் அவனுக்கு அங்கிருந்து விடுதலையளிக்க இசையாமல் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தார்.

''காப்டன் குமரன்! உங்கள் துடிப்பை நான் உணராமல் இல்லை. ஆனால் என்னுடைய பொறுப்பையும் நீங்கள் உணர வேண்டும். நீங்கள் இங்கு வந்து சேருவதற்குள் எவ்வளவு ரத்தம் உங்கள் உடம்பிலிருந்து சேதமாகி இருந்தது தெரியுமா? உங்கள் உடம்புக்கு ஏற்ற ரத்தம் தெய்வாதீனமாக எங்கள் சேமிப்பில் இருந்ததால்தான் நீங்கள் உயிர் தப்பினீர்கள். இப்போதுதானே உடம்பு சரியாயிருக்கிறது. உடம்பில் இன்னும் கொஞ்சம் நல்ல ரத்தம் ஊறட்டுமே?'' என்று கூறித் தட்டிக் கழித்து வந்தார்.

தன் உடலில் ஓடிக் கொண்டிருந்த ரத்தத்தில் ஒரு பகுதி தன்னுடைய சொந்தமில்லை என்று நினைத்துப் பார்த்தபோது குமரனுக்குச் சிரிப்பு வந்தது. எந்தப் புண்ணியவான் எப்போது தானம் செய்த ரத்தமோ, இன்று அவன் உயிருக்கு அதுவே ஆதாரமாயிருந்தது என்பது விந்தையிலும் விந்தையல்லவா? அந்தப் புண்ணியவான் எங்கு இருக்கிறாரோ? அவர் ரத்த தானம் செய்த போது அது எங்கே எப்போது யாருடைய உயிரை மீட்டுக் கொடுக்க உதவப் போகிறது என்று சிறிதாவது சிந்தித்துப் பார்த்திருப்பாரா? ஓர் உயிர் இன்னோர் உயிரின் தவிப்பை யுணர்ந்து செய்த தானமல்லவே அது! இந்த விதத்தில் ஏற்பட்ட உயிர்த் தொடர்பு என்றாவது மறக்கக் கூடியதா? உயிருக்குயிர் பேதமில்லை என்ற நினைவில் குமரனின் நெஞ்சம் பொங்கி நின்றது. அதே சமயம் உயிரை உயிர் அழிக்கத் துடிக்கும் கொடுமையை நினைத்து அவன் இதயம் விம்மியது.

''காப்டன்! நீங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்களா! உங்கள் வார்டில் உங்களைக் காணாததும் நான் எப்படித் திகைத்துப் போய் விட்டேன் தெரியுமா?'' என்று சிரித்துக்கொண்டே குமரனுக்காகச் சூடான பானம் நிறைந்த கோப்பையுடன் அங்கு வந்த டாக்டர் அமிலா, கோப்பையைக் குமரனுக்கு எதிரே யிருந்த டீபாயில் வைத்து விட்டுத் தானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

''சாப்பிடுங்கள்.''

''அதிருக்கட்டும், என்னைப் பற்றி என்ன நினைப்பு ?'' என்று கேட்டான் குமரன், கோப்பையைக் கையிலெடுத்துப் பருகியவாறு.

''எங்கே சொல்லாமல் கொள்ளாமல் போர் முனைக்கே புறப்பட்டுப் போய் விட்டீர்களோ என்ற நினைப்புத்தான். வேறென்ன?'' என்று சிரித்தாள் அகிலா.

''அவ்வளவு துடிப்பு எனக்கு இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் உங்களுடைய தகப்பனாரின் பொறுப்பைக் கருதித்தான் என்னுடைய துடிப்புக்கு அணை போட்டு வைத்திருக்கிறேன்.''

''சற்று முன்புதான் அப்பா உங்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். அதற்குள் புதுக் கேஸ் ஒன்று வந்து விடவே அதைக் கவனிப்பதில் ஈடுபடும்படியாயிற்று'' என்றாள் அகிலா.

''ஸீரியஸ் கேஸா இது ?''

''இங்கு வரும் எந்தக் கேஸ்தான் சீரியஸ் கேஸ் இல்லை? நீங்கள் மட்டும் சாதாரண நிலையிலா இங்கு வந்தீர்கள்? நீங்கள் பிழைத்ததே மறு பிழைப்பாயிற்றே.''

''எனக்கு ஆயுசு கெட்டியென்று தான் எவ்வளவோ தடவை சொல்லியிருக்கிறேனே !'' என்று சிரித்தான் குமரன்.


''இருங்கள், நான்காவது வார்டில் ஒரு சிறிய வேலை இருக்கிறது, கவனித்துவிட்டு ஐந்தே நிமிஷங்களில் வந்து விடுகிறேன்'' என்று கூறிய அகிலா சுறுசுறுப்பே உருவாக அங்கிருந்து எழுந்து சென்றாள்.

அவள் கொண்டு வந்து கொடுத்திருந்த பானம் இதமான சூட்டுடன் உடலுக்குத் தெம்பு ஊட்டுவதாக மட்டுமில்லை; உள்ளத்துக்குத் தெம்பு ஊட்டும் அவளது அன்பும் அதில் கலந்திருந்தது என்ற உணர்வுடன் அதைப் பருகி அதன் இனிமையை நெஞ்சில் நிறைத்துக் கொண்டபோது அகிலாவின் உயர்ந்த பண்புகளைப் பற்றிய எண்ணங்கள் குமரனின் மனத்தில் வட்டமிட்டன.

பத்து வருஷங்களுக்கு முன்பே மனைவியைப் பறி கொடுத்து விட்ட மேஜர் ரகுநாத்துக்கு வாழ்க்கையில் இருந்த ஒரே பிடிப்பு அவரது ஒரே மகள் அகிலாதான். ஹாஸ்டலில் தங்கிச் சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்து வந்த அகிலா இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் படிப்பை முடித்துப் பட்டமும் பெற்றாள். அதன் பிறகு ஓராண்டு ஆஸ்பத்திரிப் பயிற்சிக்காக அவள் சென்னையிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. அது முடிந்ததும் அவள் விரும்பியிருந்தால் ஒரு டாக்டரையே மணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையையும் மருத்துவத் தொழிலையும் ஒருங்கே ஆரம்பித்திருக்கலாம். ஆனால் அகிலாவின் விருப்பம் வேறு விதமாயிருந்தது. இமய எல்லையில் சீனர் ஆரம்பித்த வெறியாட்டத்தால் நாடெங்கும் இளம் உள்ளங்களில் தோன்றிய உணர்ச்சி வேகம் அகிலாவையும் ஆட்கொண்டது. உரிய தகுதி பெற்றதுமே தந்தை பணியாற்றி வந்த ஆஸ்பத்திரியில் அவருக்கு உதவி டாக்டராக அமர்ந்து போர்க்களத்தில் ரத்தத்தைச் சிந்தும் ஜவான்களுக்குத் தொண்டு புரிய அவள் தீர்மானித்தாள்.

எப்போதும் சிரித்த முகத்துடன் கலகலவென்று பேசியவாறு ஓடியாடி ஒவ்வொருவர் தேவையையும் கவனித்து வந்த அகிலா, நோவும் பிணியும் துன்பமும் தவிர வேறெதையும் கண்டறியாத அந்த ராணுவ ஆஸ்பத்திரியின் வறண்ட சூழ்நிலையை ஒரேயடியாக மாற்றி விட்டாள். **(தொடரும்)**

சுவரிலிருந்து கூரை வரை,
நிலையான பொருள்களி
லிருந்து அலங்காரங்களுக்கும்



ஏரோப்ளே
சாம்ப் ப்ளேவுட்ஸ்

அழகாக ■ வசீகரமாக ■ இலாபகரமாகச் செய்ய ஏற்றவை

ஏரோப்ளே சாம்ப் ப்ளேவுட்ஸ் சிற்பிகளுக்கும், வீடு கட்டுபவர்களுக்கும் டிஸைன் செய்ய பலவிதத்தில் உதவுகிறது. சுவருக்கும், கூரைக்கும், மரச்சட்டம் செய்வதற்கும், நாற்காலிகள், மேஜைகள், கட்டில்கள், ட்ரெஸிங் மேஜைகள், அலமாரிகள், சாமான் வைக்கும் சிறு அறைகள், புத்தக ஷெல்புகள் முதலிய சாதனங்கள் எல்லாவற்றிற்கும்—சாம்ப் ப்ளேவுட்டின் அழகான க்ரெயின்களிலும் தனிப்பட்ட ஷேடுகளும் நிறங்களும் கிடைக்கின்றன. இவையெல்லாம் டெஹ்ராடூனிலுள்ள FRI னாலும், கல்கத்தா N.T.H னாலும் அங்கீகாரம் பெற்றவை.

தயாரிப்பவர்கள்,
வுட்க்ராப்ட்ஸ் அஸ்ஸாம்
ப்ரொ: ஜே ஸ்ரீ & அசட் இண்டஸ்ட்ரீஸ் லிட.,
இந்தியா எக்ஸ்சேஞ்ச், கல்கத்தா–1

—வெறும் மனிதன்—

மீனாட்சி கிருஷ்ணா

வங்க விரிகுடா எனும் நீலப் பெருங் கடல் என் எதிரே பரந்து விரிந்து கிடந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பூகோள வரி வடிவத்தை ஆகாயத்துடன் இணைத்தபடி எங்கும் ஒரே நீலமயம். தண்ணீர் நீல நிறமாக இருக்குமா, இல்லையா என்பதெல்லாம் விஞ்ஞான ரீதியில் செயல்படுத்தும் ஆராய்ச்சியாளரின் பிரச்னைகள். ஆனால் அன்றாடப் பிரச்னைகளின் பிணி மனித மனத்தை அரித்துத் தின்று விடாதிருக்க மாற்றுத் தேடி விச்ராந்தியாக இந்த வெண்மணற் பரப்பிலே சம்மணம் போட்டு அமர்ந்து காற்றை உறிஞ்சும் ஜீவன்களுக்குப் பார்வை பேதம் உண்டாக்கி, கண்ணுக்கினிமையான இளநீல வண்ணத்தை நிரந்தரமாகப் படைக்கிற இயற்கை அன்னைக்கு என் பாராட்டுதல்களைப் பரிமாறிய வண்ணம் உட்கார்ந்திருந்தேன். இந்தப் பழக்கம் எனக்குப் புதிது அல்ல. ஒவ்வொரு முறையும் தெற்கே வரும்போது எப்படியாவது சென்னையில் இரண்டு நாட்கள் போட்டு, ஒன்றிரு சங்கீதக் கச்சேரிகள், பைகிராப்ட்ஸ் சாலையின் அழுக்கு நிறைந்த வியாபாரம், மரீனா விஜயம் ஆகிய அவசியமில்லாதிருந்தும் முக்கியமானதென நான் கருதிய இத் திருப்பணிகளிலே என்னை ஈடுபடுத்திக் கொள்வது பதினைந்து ஆண்டுகளாக வந்த பழக்கம். இன்றும் அது போன்ற அனுபவத்தை எண்ணற்ற வெண்ணலைகள் காலப் பிரமாணத்தில் இயக்கி எனக்கு அளித்துக் கொண்டிருந்தன. மூன்றாண்டுகளாகத் தவறி விட்டதாலோ என்னவோ, இம்முறை அது எனக்குப் புதுமையான உணர்வு ஊட்டியது.

—"மீனு வடை... நெய் முறுக்...!" —வயதான ஒருவரின் குரல்தான். என்றாலும் அதில் தொனித்த கம்பீரம் என் சிந்தனை இழைகளை அறுத்து விட்டது. அவரை அழைத்துச் சிறிது வியாபாரம் செய்ய எண்ணினேன். பெரியவர் அருகில் வந்தார்.

"ரெண்டு நெய் முறுக்குக் கொடுங்கோ!"

முறுக்குப் பொட்டலத்தை என்னிடம் நீட்டிய பெரியவர், "யாரது. அரசங்குளம் அம்பியோ, எப்போ வந்தாப்பிலே... பாத்து ரொம்ப காலமாச்சு!" என்றார்.

தன் நினைவுக்கு வந்த நான் சற்றே நிலை தடுமாறினேன். "யாரு? சகஸ்ரநாம அய்யர்வாளா? கொஞ்சம் கவனமில்லாமே இருந்துட்டேன். க்ஷமிக்கணும்!"

"பரவாயில்லே, அதுனாலே என்ன? லோகம் போற வேகத்துலே எவ்வளவோ பெரிய பிரச்னைகள் எல்லாம் மனுஷனைத் தின்னுண்டிருக்கச்சே, ஓர் அப்பாவிக் கிழவனைப் பத்து வருஷங்களுக்கப்புறம் நினைவு வைச்சுக்க முடியுமா, என்ன?"

"ஐயய்யோ, அபசாரம்! ஆமாம், இதென்ன திரும்பவும் டப்பா வியாபாரம்? தங்கசாலை தோட்டம் எல்லாம் என்ன ஆச்சு?"

"அதெல்லாம் ஒண்ணும் கேட்காதே அம்பி! நான் சொல்லக் கடமைப்பட்டவன்தான் என்றாலும் அவ்வளவு பெரிய கதையை இப்போ அந்த நிமிஷத்திலே சொல்லிட முடியாது! சுருக்கமா, இதுவும் உருளும் சகடத்தின் ஒரு நிலைன்னு வச்சுக்கோயேன்!"

"அதெல்லாம் புரியாமலா இருக்கேன் மாமா, ஏதோ நமக்குள்ளே விட்ட குறை தொட்ட குறைன்னு ஒண்ணு இருக்கோல்லியோ! அதுனாலேதான் ஒங்க நிலைமை என்னோடதுன்னு நெனைச்சுக் கேட்டேன்!"


"இப்ப என்ன கெட்டுப் போச்சு, நாளைக் கார்த்தாலே சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வா. எல்லா விவரமும் நிதானமாச் சொல்றேன். இப்போதைக்கு என் கர்மாவை நடத்தியாகணும்... அய்யாப் பிள்ளைத் தெருவிலே பழைய வீட்டிலேதான் இருக்கேன். மறந்துடாதே, அவசியம் வா!"

விலையும் ஏற்கப்படாமல், உரிமையாளர் பிரிதொரு பேரம் தேடிக் குரல் கொடுத்து அகன்றுவிட, முறுக்குப் பொட்டலம் என் முன் பிரிக்கப்படாமலே கிடந்தது.

மீண்டும் என் சிந்தனை என் அமைதியைக் குலைக்கு முன்பே அதனின்றும் விடுபடுவதற்காகப் பொட்டலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கிளம்பினேன். "சகடத்தின் நிலையாம்... கர்மாவாம்... கண்ணில் விரலை விட்டு ஆட்டும் வியாபார தந்திரம் படைத்த சகஸ்ரநாம அய்யரா இதையெல்லாம் பேசுகிறார்?" சந்தேகம் என்னை உலுக்கியது. உண்மை நிலை முழுதும் தெரிந்தாலன்றி இதைப் பற்றிய சிந்தனையெல்லாமே வீணெனக் கருதினேன். விடிந்தால் தெரிகிறது. வெளிச்சம்!

சகஸ்ரநாம அய்யருக்கு இப்பொழுது அறுபது வயது இருக்கலாம். இதிலே சுமார் நாற்பத்தைந்து வருடங்கள் சென்னையிலே கழித்தவர் அவர். இரண்டு உலகப் போர்களும், 'எம்டன்' குண்டு வீச்சும் 'எவாக்குவேஷ'னும் கூட, அவரது சென்னைப் பற்றை அசைக்க முடியவில்லை. தன் சொந்த முயற்சியிலேயே பிழைப்பவனுக்கு எந்த நிகழ்ச்சியும் இடையூறு விளைவிக்க முடியாது என்னும் இட நோக்குப் படைத்த அவரது வாழ்வே ஒரு கதை.

காலத்தின் ஏடுகள் செல்லரிக்கப்படாத நிலை இருக்குமானால், தீர்த்தபதி நைறல்



கூலின் ஆஜர்ப் பட்டியலில் சகஸ்ரநாமம் என்ற ''சாத்து''வின் பெயரைக் காணலாம். 'படிப்பிலே வெகு சுட்டி' என்ற பெயர் அவருக்கு என்றுமே இருந்ததில்லை. ஆனால் ஆஜரிலும் நடத்தையிலும் வெகு ஒழுங்கு என்ற மதிப்பு அவருக்கு உண்டு. இருந்தாலும் சிநேகம் என்பது சும்மா விடுகிறதா என்ன? செழிப்பிலே மிதந்து, கடமை உணராத இளம் பிள்ளைகளுக்கும் 'படிப்பு' என்பது ஒரு நிலையில் பெரும் சுமையாகப் பட்டது. களிப்பு அதிக அவசியமென்று தோன்றியது. அதன் விளைவாகப் புத்தகக் கட்டுகள் எரிச்சாவுடையார் கோவில் மதில் சுவர்ப் பொந்தில் அடைக்கலம் புகுந்தன. களியில் நிமிஷங்கள் நாளாக உருவெடுத்தன. மாலை வந்ததும் பிள்ளைகள் வீடு திரும்பினர்.

யதேச்சையாக அம்பாசமுத்திரம் வரை போயிருந்த ''சாத்து''வின் தந்தை அன்று பார்த்துத்தானா பள்ளிக்கூடத்துக்கு விஜயம் செய்ய வேண்டும்? வகுப்பிலே பையனைக் காணாமல் வீடு திரும்பிய அவர் உள்ளம் அனலாய்த் தகித்தது. இரண்டாம் தலைமுறை விழுதுக்கிறைத்த நீரின் கதியை அடைவதை அவர் மனம் ஒப்பவில்லை.

பலன்...? போகும் வழியில் ஆற்றங்கரைச் சாலையில் உள்ள மரமொன்றிலிருந்து புளிய விளாறு ஒன்று அவர் கைக்கு மாறியது. தெருவில் இரண்டு சாரிலுமுள்ளோர் பரிதவிக்கும் வண்ணம் பையனின் தோலை உரித்து விட்டார். வார்த்தைகளில் கால விரயம் செய்வது வீண் என்பது அவர் கருத்து!

தவறு தன்னுடையது என்பதை உணர்ந்த ''சாத்து'' மேலும் பழைய சிநேகிதத்துடன் படிப்பை முடிப்பது சிரமமென்று கருதினான். அழுது வீங்கிய முகமும், கண்களும் இரவு முழுவதும் அவனை உறக்கமில்லாமல் அடித்தன.

அதிகாலையில் வடக்கே செல்லும் ரயிலில் கல்லிடைக்குறிச்சி ஸ்டேஷனில் ஏறிய மூன்று பிரயாணிகளில் அவனும் ஒருவன். எங்கே போவது என்ற அன்றைய லட்சியமோ, என்ன நடக்கப் போகிறது என்ற நாளைய நம்பிக்கையோ அவனை ஈர்க்கவில்லை.

எனக்கும் சகஸ்ரநாம அய்யருக்கும் ஏற்பட்ட பரிச்சயம் மிக சாதாரணமான விஷயம். கௌரவமான பிழைப்பு ஒன்று நடத்துமளவுக்குத் தேவையான கல்வியறிவுடன் இரண்டாவது உலகப் போர் முடிவில் சென்னை வந்து சேர்ந்தேன். சொந்த ஊர் பக்தி மிகுந்த கனவான் ஒருவரது சிபாரிசின்பேரில் ஜார்ஜ் டவுன் கம்பெனி ஒன்றில் வேலை ஒன்று கிடைத்தது. சென்னையை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர், சொந்த வீட்டின் இனிமையையும் உண்ணும் சுகத்தையும் சுவைவல்ல அன்னதாதா சகஸ்ரநாம அய்யரையும் அறிமுகம் செய்விக்கத் தவறவில்லை. அய்யாப் பிள்ளைத் தெருவில் சகஸ்ரநாமய்யர் வீட்டை ஒட்டிய அறையில் குடி புகுந்தேன். இந்த ஒன்பது ஆண்டுகளாகக் கல்கத்தாவில் பணியாற்ற மாற்றலாவதற்கு முன்தினம் வரை அவர்தாம் எனக்குத் தாயும் தந்தையும் வைத்தியனும் காப்போனுமாக விளங்கி வந்திருக்கிறார். சிற்றுண்டி, பட்சணங்கள் செய்து கொடுப்பதும், விற்பதும் அவரது தொழில். இவை தவிர, ஆறு, ஏழு நபர்களுக்கு இருவேளை உணவும் படைத்து வந்தார். அத்தொழிலில் அவர் ஜாம்பவான். ஆனால் கட்டுப்பாடுகளும், பொருள் தட்டுப்பாடும் அவரைப் பெருமளவில் தொழில் நடத்த ஊக்குவிக்கவில்லை. செய்வதைத் திருந்தச் செய்வதில் அவருக்கு நிகர் அவர் தான்! ஓய்வு நேரத்தில் எதையாவது படித்துக் கொண்டிருப்பார்.

இப்படியாகப் பத்து ஆண்டுகள் அவரோடு இணைந்து காலந் தள்ளிவிட்டு, கல்கத்தாவுக்குப் போகும்போது எனக்கு என்னவோ போலிருந்தது. அவரும் என்னைப் பிரியும்போது கம்பலையாய் நின்றார்!

மறுநாட்காலை சற்றுச் சீக்கிரமாகவே அவர் வீட்டுக்குச் சென்றேன். இப்போது 'மெஸ்' ஒன்றும் கிடையாதாகையால் அவர் சிறிது நிதானமாகவே இருந்தார். சிறிது நேரத்தில் அறுசுவை உண்டி படைக்கப்பட்டது. ருசி பின்னாட்களை நினைவுறுத்தியது.



வெற்றிலைப் பெட்டியுடன் கூடத்தில் வந்தமர்ந்தோம். அவர் தொடங்கினார்:

"அம்பி, நீ இந்த மாடர்ன் நாவலாசிரியர்களைப் படிக்கிறதுண்டோ?"

"உண்டு, ஏன்?"

"இந்த ஸாமர்ஸெட் மாம் என்று ஒரு நாவலாசிரியர் எழுதின 'பொனடர் பப் பொர்ஸி'யைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய்! (நான் எனக்குள்ளே வியந்து கொண்டிருந்தேன்—அடேயப்பா, சமையல் வேலை செய்பவர் செய்ய வேண்டிய விசாரமா இது?) தொழில் துறையைப் பொறுத்தவரை அவனது நிலைதான் எனதும்! என் வேலையிலே நான் புலியாயிருக்கலாம். ஆனால் திறமை கூடியதால் உண்டாகிறதே ஒரு திமிர், அதிலே 'பொர்ஸி'யும் நானும் ஒன்றுதான்!"

"என்ன உவமை சொல்றேள், எனக்கு அர்த்தமாகலையே!"

"அதாம்பா, இந்தச் சந்துலால் விவகாரம்! நேத்து சாயங்காலம் தங்கசாலை ஹோட்டலைப் பத்திக் கேட்டயோல்லியோ! அந்த வியாபாரத்தை நான் எடுத்ததே ஒரு புராணம். அதை நடத்தியது ஒரு மங்கல நாடகம். முடிவென்னவோ வழக்குரை காதையாக முடிந்து விட்டது!"

"நிஜமாகவா...?" — எனது ஊக்கம் கரை புரண்டது.

"அது ஒரு அபூர்வமான சந்திப்பு. ஒரு நாள்]சாயங்காலம் இப்படித்தான் பட்சணம் வித்துண்டே மரீனாவிலே போயிண்டிருந்தேன். யாரோ என்னைக் கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்தா இந்த ஆசாமி — சந்துலால் உட்கார்ந்திருந்தான். முதல்லே ரெண்டு நெய் முறுக்கு வாங்கிச் சாப்பிட்டான். அப்புறம் டஜன் விலை கேட்டான். கொஞ்ச நேரத்திலே டப்பாவையே வாங்கிடறேன் என்றான். நான் டப்பாச் சரக்கையெல்லாம் தர முடியாதுன்னு சொன்னேன்.

'உனக்கு என்ன ஸாமீ! டப்பாவோடே ஸேல்ஸ் பண்ணினு அலைய வேண்டாம், இல்லையா?'

வடக்கே இருந்து இடம் பெயர்ந்து வந்த அகதிதானென்றாலும், அப்போதே அவன் நன்றாகத் தமிழ் பேசினான்.

'அலைச்சல் ஒரு பக்கமிருக்கட்டும்! மத்த வாடிக்கைக்காரங்களுக்கு யார் பதில் சொல்றது?'

எனக்கு என் நிரந்தர வாடிக்கைக்காரர்களைப் பற்றிய கவலை. நான் நகர்ந்தேன். அவன் என்னை விடுவதாக இல்லை. ருசி அவனை விரட்டியது.

'ஸரி, ஸாமீ! நாளைக்கி இதே எடத்துலே என்னெப் பாரு. ரெண்டு டப்பா சரக்குக் கொண்டு வா. ஒரு டப்பா முழுசா எங்கிட்ட கொடுத்திடு. இந்தா அட்வான்ஸ் பணம் பத்து ரூபா!'

நான் ஆச்சரியத்தில் ஸ்தம்பித்தேன். மறு நாள் அவன் சொன்னபடியே செய்தேன். அவனே டப்பாவைக் கையிலெடுத்தான். பாக்கிப் பணத்தைக் கொடுத்துட்டு மேலும் ஓர் 'ஆர்டர்' போட்டுட்டு, பஸ் ஏறிப் போய் விட்டான்.

ஒரு டப்பா நிறைய பட்சணங்களை அவன் என்னதான் செய்கிறான் என்ற கேள்வி என்னை முதலில் ஆட்டி வைத்தது. ஆனால் பின்னர்தான் உணரலானேன் — சுவை மிக்க அப்பொருள்களை அவன் தன் இனத்தாருக்கு நல்ல விலைக்கு விற்கிறான் என்பதை! எது எப்படிப் போனாலென்ன? இப்போதைக்குத் தினசரி வருமானம் ஐந்து ரூபாய் அதிகமாக வருகிறதே என்ற எண்ணத்தில் தொடர்ந்து வியாபாரத்தை நடத்தினேன்.

இந்த நிலையில்தான் ஒரு நாள் பகல் வேளையில் என் வீடு தேடி வந்து விட்டான் சந்துலால். அவன், வந்தபோது ஐந்தாறு பேருக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தேன். கூடத்தில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான். பொறுமையோடு சில வெற்றிலைக் காம்புகளை மெல்லலானான். நிதானம் மிகுந்த இந்த வியாபாரி ஏதோ திட்டம் போட்டுத்தான் இங்கே வந்திருக்கிறான் என்று என் உள்ளம் கூறியது.

வேலையை முடித்துக் கொண்டு அவனிடம் வந்தேன். சுற்றி வளைக்க மனமில்லாதவனாய் நேரே விஷயத்துக்கு வந்து விட்டான்.

'இந்தா ஐயர், நீ ஒரு நல்ல உழைப்பாளின்னு எனக்குத் தெரியுது. வீணாக லாபமில்லாத சில்லறை வியாபாரத்தை நடத்தி ஏன் ஓடாய்த் தேய்கிறாய்? இப்ப சரின்னு சொல்லிடு. நாளைக்கே தங்கசாலையிலே ஒரு 'பஸ்ட் கிளாஸ்' ஹோட்டல் திறக்கிறோம். என்னோட முதலும் உன்னோட முயற்சியும் சேர்ந்தா வியாபாரம் தனியே வருது! மொதல்லே உனக்கு மாசம் ஐந்நூறு ரூபா தரேன். அப்புறம் வியாபாரம் பெருகினதும் லாபத்திலே பாதியை எடுத்துக்கோ!'

'திட்டம் என்னவோ பிரமாதம்தான்! ஆனால் என் பதினைந்து இருபது வருஷ வாடிக்கையெல்லாம் என்ன ஆகிறது?'

உங்கள் சிந்தனைக்குச் சில சொற்கள்

● பொய் ஒரு காலால் நிற்கிறது; உண்மை இரண்டு கால்களால் நிற்கிறது.

● உழைப்பாளியின் வீட்டில் பசி எட்டிப் பார்க்கும். ஆனால் உள்ளே நுழையாது.

● காதலைத் தொடர்ந்து செல், அது ஓடும். காதலை விட்டு ஓடு, அது உன்னைத் தொடரும்.

தொகுப்பு: தி. கு. ரா.

● ஒரு மனிதன் பணத்தை எண்ணிச் செலவு செய்யவில்லையென்றால் பணத்தைப் பற்றியே எண்ணி எண்ணி வாழவேண்டிய நிலைமை வந்துவிடும்.

-ரஸ்கின்

● நாம் முட்டாள் அல்ல என்பதை நிரூபிப்பதற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிக்குப் பெயர்தான் புத்திசாலித்தனம். -பெர்னார்ட் ஷா

● மனைவிக்கு அடங்கி நடப்பவன் முட்டாள். மனைவியை அடக்கியாள நினைப்பவன் முரடன். ஒத்து வாழும் வாழ்க்கையை அறிந்தவனே கணவன்.

- டாக்டர் மு. வரதராசனார்

ஆதாரம்: சிந்தனைக் களஞ்சியம்

அனுப்பியவர்: வி. ந. ஸ்ரீதரன்



"நேற்று நீங்கள் எனக்குத் தந்த அதே பிஸ் கோத்தை இன்றும் தருகிறீர்களா மாமா! எங்க டாமிக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!"

'விட்டுத் தள்ளு இந்தப் பத்து வாடிக் கைக்காரர்களை! பத்தாயிரம் கிராக்கி தனியே தேடிக்கிட்டு வரும்!'

'சரி, பார்க்கலாம் — எதுக்கும் ஒரு மாசம் 'டைம்' கொடு! யோசிக்கச் சொல்றேன்!'

சிரித்துக் கொண்டே போய்விட்டான் சந்துலால். அவனுக்குத்தான் வெற்றி என்பதை அவன் அப்போதே தீர்மானித்திருக்க வேண்டும்!

மறுநாள் நம்ம பிள்ளைகளிடம் விஷயத்தைச் சொன்னேன். ஒரு பயலாவது வேண்டாம்னு சொல்லணுமே, எல்லாரும் ஒரு முகமா 'வலிய வரும் சீதேவியைத் தள்ளப் படாது'ன்னு சொல்லிட்டா. நான் மாத்திரம் என்ன சந்நியாசியா உதறித் தள்ள!"

ஆக, சந்து — சாத்து 'கொலாபரேஷன்'லே தங்கசாலே ஹோட்டல் ஆரம்பமாயிடுத்து. ஒரு விஷயம் சொல்றேன் அம்பி! இந்த ஹோட்டல்லே சாப்பிட வர்றவனெல்லாம் பசிக்குச் சாப்பிடறவனே இல்லே! யோசிச்சுப் பாரு, யாராவது ஒருவன் அன்றாடம் வீட்டிலே மஸாலா தோசையும் போண்டா சாம்பாரும் சாப்பிடுறானு, அல்லது சாப்பிடத்தான் முடியுமா? எல்லாமே இந்த நாக்குப் படுத்தற பாடுங்கறேன். "பசி" என்கிற ஒண்ணு இல்லாட்டாலும் "ருசி" ஒருவனை ஆட்டி வைக்கிறவரை எங்க பிழைப்பிலே ஒரு குறையும் வராது. அதோட சந்தம், எவர்ஸில்வர் ஜாலம் எல்லாத்தையும் காட்டி நாங்கள் இருவருமே ஜமாய்த்துக் கொண்டிருந்தோம். ஏன், நான் கொஞ்சம் தன்னை மீறிய தாராளத்திலேயே காலம் தள்ளினேன்!

ஆனாப் பாரு, இந்தப் பிழைப்பு நடத்தறவனுக்குச் சொந்த வாழ்க்கையிலே ஒரு இஷ்டமோ, சீரோ கிடையாது. நானும் இதுக்கு விலக்கு இல்லே. எப்படியோ பணம் வந்தது. எப்படியோ செலவழிச்சேன் என்ற முறையில் ஒரு வியாழ வட்டம் தள்ளினேன். இதுக்கு நடுவிலேதான் ஒரு நாள் —

'ஐயர், உங்களோடே ஒரு அஞ்சு நிமிஷம்!' என்றான் சந்துலால். இருவருமாகப் பக்கத்து அறைக்குள் போனோம். அவன் சொன்ன விஷயம் என்னைப் பொடிப் பொடியாச் சிதற அடித்துவிட்டது. என் ஆயுசிலேயே நான் நெனச்சுப் பார்க்காத சங்கதி அது — "உணவுப் பொருளில் கலப்படம் செய்ததாக எங்கள் மீது வழக்கு!"

தொழிலில் நிபுணன் என்பதாலேயே என்னை அழைத்துக் கொண்ட சந்துவின் நஷ்டத்தில் என் பொறுப்பு மிக மிக அதிகமானது என்று நான் உணராமலில்லே. ஆனாலும் இருபத்தி நாலு மணி நேரமும் என் கண்காணிப்பு என்பது அசாத்தியமானது; அதுவும் நூறு பேர் வேலை செய்யற இடத்துலே. ஆனாலும் என்னை யறியாமலே ஏதோ தவறுக்கு இடம் உண்டாகி விட்டது என்கிறதுனாலே முழுப் பொறுப்பையும் நானே ஏத்துண்டேன். நீதிபதி விதித்த ஆயிரக் கணக்கான ரூபாய்களையும் சொன்ன சொன்னபடி என்னை வைத்தேன். சந்துவின் ஆட்சேபங்களையும் மதிக்காமே துண்டை உதறிப் போட்டுண்டு வெளியேறி விட்டேன். பதினாயிரம் பேர் சாப்பிட வந்தாலும் மனச்சாட்சி இல்லாமல் காரியம் செஞ்சு படைக்கிற உணவு நம் கைங்கரியமா இருக்க வேண்டாமென்பது என் முடிவாயிடுத்து. நான் என்ன லட்சாதிபதியாகவா வாழ ஆரம்பிச்சேன்? இருக்கவே இருக்கு 'மரீனு பீச்'சும் மூணுக்கு வியாபாரமும்னு திரும்பிட்டேன் பூர்வாசிரமத்துக்கு! இதிலே பாரு! நான் கைகட்டி நிற்கவோ, பதில் சொல்லவோ தேவையில்லே. ராயர் தருகிற வெண்ணெயும், என் கையாலே செய்யற பக்ஷணமும் ஜென்மத்துலே கூட கலப்படமாயிருக்க முடியாது. என்ன சொல்றே?"

"நான் என்ன சொல்ல இருக்கு?"

"இப்ப நாலு வருஷமாச்சு, பழைய வியாபாரத்தை ஆரம்பிச்சு. பெண்கள் ரெண்டு பேரையும் நல்ல இடத்துலே சேர்த்துட்டேன். எனக்கு வேறென்ன வேணும்? கீதையிலே அர்ஜுனன் கேட்ட மாதிரியா, "ஜனார்த்தனா, நீ நினைக்கிறது போல் அறிவென்பது ஆற்றலை விடப் பெரிதென்றால் என்னை ஏன் இத் தீச் செயலுக்குப் புகுத்தி விட்டாய்?" என்று கேட்டுக் கொண்டே புது வாழ்வு தொடங்கிய எனக்கு, "செயலற்று விடுவதாலே கர்மாவினின்றும் மனிதனுக்கு விடுதலை கிடைப்பதில்லை" என்ற கண்ணனின் பதில் ஆறுதலளித்தது. மூணுக்கு விற்பதே என்னுடைய கர்மாவானால் ருசித்து மகிழ்பவனின் திருப்தியே அதன் பலனாக எனக்குக் கிடைக்கிறதே! வெறும் மனிதனுக்கு இதைவிட வேறென்ன இன்பம்?"

அபூர்வமான கதையை முடித்துவிட்ட ஆயாசத்திலே அய்யர் கண் அயர்ந்தார். அணுவைப் பரமாணு விழுங்கிவிடும் நவீன சமுதாயத்திலே மெய்ப் பொருள் கண்ட வெறும் மனிதனைத் தரிசித்த பாக்கியவானாய் நானும் விடைபெற்றேன்.

வட்ட மேஜை

★ இசையின் பொற்காலம்!

★ தரமுள்ள கருவிகள்

★ விமோசனம் உண்டா?

ராகத்துக்கும், கீர்த்தனைக்கும், ஸ்வரங்களுக்கும் மற்றும் இசையின் மற்றப் பிரிவுகளுக்கும் ஒரு முறையான தனி இலக்கணத்தையே ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் வகுத்துவிட்டார்கள் என்றால், அது மிகையல்ல. இளஞ் சிரிப்போடு, இசையினையும் இயல்பாகத் தருகின்ற ஸ்ரீ அய்யங்காரின் பாணி தனிப் பாணிதான். ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, கர்நாடக சங்கீத உலகில் தனிக் கொடி நாட்டி, தரமான உயர்வு கொண்ட சங்கீதத்தை வழங்கி வந்ததை நாம் இசையின் ஒரு ''பொற்காலம்'' என்றே கூற வேண்டும். 'நான் பாடுவது ஸ்ரீ அய்யங்கார் வழிதான்' என்று இன்றையப் பெரும் கலைஞர்களும், கூறிப் பெருமைப்படுவது, அவரது மேதா விலாசத்துக்குச் சான்று சொல்லும்.

சங்கீத வித்துவான்களிடத்தில் சரளமாக உரையாடி, கள்ளம் கபடமற்று அவர் கொண்டிருந்த அன்பு அளப்பரியது. நிறைகுடமாக அவர் காட்டி வந்த அடக்கமும் காமதேனுவென அவர் வற்ராது பொழிந்த கர்நாடக சங்கீதமும், நாம் என்றும் மறக்க முடியாதவைகளாகும்.

தள்ளாத வயதிலும், தரம் குன்றாத சங்கீதத்தை நாம் ஸ்ரீ அய்யங்கார் ஒருவரிடமே காண முடிந்தது. பட்டங்களும், பாராட்டுதல்களும் ஸ்ரீ அய்யங்கார் அவர்களைத் தேடிச் சென்று அடைந்தன. அதாவது அவை அனைத்தும் தக்கவரிடமே தஞ்சமடைந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. வித்துவான்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஸ்ரீ அய்யங்கார் அவர்களின் கர்நாடக சங்கீதம் கலந்திருக்கிறது. சங்கீதம் உள்ளளவும் அவரது புகழ் பிரகாசித்தே விளங்கும்.

செங்கோட்டை நாதசுர வித்வான்
27-1-67 திருவெண்காடு சுப்பிரமண்யபிள்ளை

ஜனவரி 22ந் தேதி கல்கி இதழில் கே.என். ஞானசம்பந்தம் என்பவரால் எழுதப்பட்டதாக ஒரு கடிதம் வெளியாகியிருக்கிறது. அந்த நபர் இந்த நிறுவனத்தில் வேலை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இந்த நிறுவனத்தில் தயாரிக்கப்படும் கத்திரிக்கோல்களின் விலை ரூபாய் எட்டு முதல் இருபது வரை ஆகிறது. அவர் எழுதியுள்ளதுபோல் நாற்பதோ ஐம்பதோ அல்ல. சஸ்திர சிகிச்சைக்குப் பயன்படும் இது போன்ற கருவிகளின் விலை தரத்துக்கு ஏற்பத்தான் இருக்கும். தரமறியும் திறன் படைத்தவர்கள் இந்த நிறுவனத்தில் தயாராகும் கருவிகளைப் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

நந்தம்பாக்கம் எச். ஜி. வி. ரெட்டி
சென்னை—16 திட்ட நிர்வாகி,
24-1-67 சஸ்திர சிகிச்சைக் கருவிகள்
தயாரிப்பு நிறுவனம்

ஞானசம்பந்தம் அவர்கள் கல்கி வட்ட மேஜைப் பகுதியில் எழுதியதைப் படித்து வருத்தப்படுகிறேன்.

அறுவைச் சிகிச்சைக்கான கருவிகள் மிகுந்த ஜாக்கிரதையாகச் செய்யப்படுவதுடன் உயர்ந்தரகப் பொருள்களைக்கொண்டு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒரு கருவி விற்பனைக்குத் தயாராகுமுன் எவ்வளவோ சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகிறது. இவ்வளவு மேம்பாடுடன் செய்யப்பட்ட கருவிகள் மற்றக் கருவிகளைக் காட்டிலும் விலை அதிகமாக இருப்பது சகஜம்தான். பேனாக்களில் ஐம்பது பைசா பேனாவுக்கும் ஐம்பதுரூபாய் பேனாவுக்கும் வித்தியாசம் இல்லையா? அதே போல்தான் அறுவைச் சிகிச்சைகருவிகளிலும்.

மற்றும் இருபத்து மூன்று டன் சிமென்டைப் பற்றிக் கூறியிருக்கிறார். ஐயாயிரம் டன் சிமெண்ட் உபயோகித்துக் கட்டப்பட்ட இந்தத் தொழிற்சாலையில் கேவலம் இருபத்து மூன்று டன் சிமெண்ட் மிஞ்சிப் போக அது ஏலம் விடப்பட்டதில் ஆச்சரியமென்ன?

சென்னை—16
25—1—67 ஜ. சீனிவாசன்

சௌராஷ்டிர சமூகத்தைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி எங்கள் பரமக்குடி. இங்கு ஆளும் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் தரம் உயர்த்தப்பட்டதாகவும் அதன் காரணமாய்ப் படி அரிசி இரண்டு ரூபாய்களுக்கு மேல் விற்றாலும் வாங்கும் சக்தி மக்களுக்கு உண்டு என்றும் கூசாமல் கூறப்பட்டது. எங்கள் வளர்ச்சி இதோ: வெள்ளைக்கார ஆட்சியில் எங்களுக்குக் கூலியாகக் கனி ஒன்றுக்கு ஆறு ரூபாய் கிடைத்தது. இன்று அதே கனி ஒன்றுக்கு ஐந்து ரூபாய்க்குக் குறைவாகவே கொடுக்கிறார்கள். அன்றுள்ள விலைவாசியையும் இன்றுள்ள விலைவாசியையும் வைத்து ஒப்பிட்டால் சாகாமல் செத்துக் கொண்டு நடைப்பிணமாக இருக்கும் எங்கள் நிலை சிந்திக்கும் மனிதத் தன்மை வாய்ந்த யாவருக்கும் புரியும்.

பரமக்குடி
11—1—67 கஷ்டப்படும் ஒரு நெசவாளி


Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும் பளபளப்புடனும் விளங்கும்

பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!





பிரில்க்ரீம் மட்டுமே

- அதிக எண்ணெய்ப்பசை இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
- மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
- உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்கியமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, நேர்த்தியான கலவை வாய்ந்தது.
- உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தையும் பாதுகாக்கிறது.

எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

உலக முழுவதிலும் லக்ஷக்கணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்

BIP/UP/1165 TM



நல்ல
புகையிலை
என்றாலே
நல்ல
சிகரெட்
Panama
20
பனாமா
ஒரு
நல்ல
சிகரெட்
செழுமையிலும் மென்மை யிலும் உன்னதமாகத் தேர்ந்தெடுத்த வர்ஜீனியாப் புகையிலைகள்! பனாமா சிகரெட்டிலே நிபுணத்து வத்துடன் அவை கலவைபெற்றுள்ள பயன், பல்லாயிரம் மக்களுக்குப் பரவசமூட்டும் தன்மையான புகையம்!
பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது
GTC
கோல்டன் டொபாக்கோ கம்பெ
பிரைவேட் லிமிடெட்,
பம்பாய்-56